பல்சுவை

தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

மார்ச் 2022

வெண்பாவின் புனிதத்தைக் கெடுப்பது நானா...?

ஏடி வரதராசன் ஆவேசப் பேட்டி

பக்கம் 44



சு. பிரவந்திகா

பேட்டி பக்கம் 6

பல்சுவை

தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – மார்ச் 2022

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸுர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர்கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி



603

நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

இம்மாதம் சர்வதேச மகளிர் தினத்தைச் சந்திக்கிறோம்.. மகத்துவம் பொருந்திய பெண்களைக் கொண்டாட ஒருநாள் போதாதுதான். ஆயினும் முன்னைய காலம் போலல்லாது இப்போது பெண்களின் மகிமையை பலரும் புரிந்து கொண்டு, அவர்களுக்குத் தக்க மரியாதை கொடுத்து வருவது பாராட்டுக்குரிய விடயமே!

பெண்ணானவள் சக்தியாகச் செயல்பட்டு அனைத்தையும் பொறுமையுடன் கையாள்வதுடன் மிக சாமர்த்தியமாக சிக்கல்களைத் தீர்க்கும் திறமை பெற்றவள் என்றால் அது மிகையில்லை.

உலகின் இயக்கமே பெண்ணின் கைகளில் ஆக்கசக்தியாக உருவெடுத்து அற்புதங்கள் நிகழ்த்த, அவள் தனித்துவமாகத் திகழ்ந்து பெருமை சேர்க்கிறாள்.

அனைத்துத் துறைகளிலும் ஆளுமை செய்யும் பெண்ணவள் சிகரத்தில் இமயமாய், கோபுரக் கலசமாய் சிறப்புப் பெற்று சாதனை படைத்து, சொல்லில் அடங்கா விந்தைகளுக்கு சொந்தக்காரியாகிறாள். தன் சோகங்களை ஆழ்மனதோடு புதைத்து, சொந்தங்களுக்காக சோராமல் உழைக்கும், வாழ்நாளெல்லாம் போற்றப்பட வேண்டிய பெண்ணிவளின் வருங்காலம் இனிதாக வாழ்த்துவோம். அனைத்துப் பெண்டிருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்!

நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

(ஆசிரியர்)

அழுது புலம்பியது மனிதமும்தான்

ஆடை மடிப்புக்களை
சரி செய்யும்போதுதான்
அத்தனை கண்களும் அதுவரை
பிழை செய்து கொண்டிருந்ததை
உணர்கிறாள்...

முறைத்தாள்...

மொய்த்துக் கிடந்த பார்வைகள்
கொஞ்சம் ஓய்வெடுத்து விட்டுத்
திரும்பவும் பணிக்குத் திரும்பின...

எத்தனை தடவைகள்
இழுத்து விட்டாலும்
சுருங்கித்தான் போகின்றன
கிழவியின் தோல் போலே...

கண்டுங்காணாமல் ஜன்னல் பக்கம்
பார்வை திருப்புகிறாள்...

ரவிக்கை பிதுங்கிய
சதைப்பிண்டங்களை ஒன்று
வெட்டி எறிய வேண்டும் -
இன்றேல் தன் எரிதழல் பார்வையில்
ஆண் பார்வைகள் முட்டி
எரிய வேண்டும்...

இரண்டுக்கும் துணிவற்றவள் -
மேலதிகமாய் இரண்டு துணியற்றவள்...

கந்தல் துணிகளைத்
தோய்த்துத் தேய்த்தே
மாற்றுடை அணிபவளுக்கு -
பந்தல் கனிகளென தேக மேடுகள்
அமைத்துத் தன் தாராளமயத்தை
தான்தோன்றித்தனமாக அநியாயத்துக்கு
இறைத்திருந்தான் இறைவன்...

பாலமுதூட்டும் போதே பார்வைகள்
பாரபட்சமின்றி மொய்க்கின்றதே...

‘இவனும் இப்படித்தான் என்றிருந்தால்
இவனைக் குருடனாக வளர்த்து விடு...
பொருந்திக் கொள்கிறேன்...’

சாபமா?
பிரார்த்தனையா?

தன் சேலைத் தலைப்பை
இழுத்துச் சரி செய்கிறாள்...

உறிஞ்சிய பால் துளிகள்
பாலகன் முகம் தெறிக்க...
அத்தனை காமுகன் பார்வையும்
அங்கேதான் இன்னும்
வெறிக்க வெறிக்க...

வீடு சேரும்வரை அழுது புலம்பியது
பிள்ளை மட்டுமல்ல....
மனிதமும்தான்.....

- கீதா மோகன்
(திருநெல்வேலி - இந்தியா)

2  • |5

எதை உனக்கு தரலாம் ச�ொல்
எதை உனக்கு
தரலாம் ச�ொல்.

எதைத் தரவே
வரலாம் ச�ொல்.

சங்கிலி மழைச் சாரல்
சரத்தின் பரல் அறுத்து
அதனுள் என் உயிர் அடைத்து அடைகாத்துத் தரவா? ச�ொல்!

மந்தகி! உன் கால்கொலுசின் மணிக்குள் என் கண்மணியை மனசை என் நினைவை மடித்து நான் தரவா? ச�ொல்!

பால்பிடித்த நெல்மணிக்குள் பச்சரிசிப் பொன் கனிக்குள் பூவையே! உன் பேரெழுதி பொட்டலமாய்த் தரவா? ச�ொல்!

ஆயிரமாய் நிறமெழுதும் அந்தி ஒளி வான் சிலேட்டில் மின்னலால் உன் படம் வரைந்து மெல்லியலே தரவா? ச�ொல்!

விழுந்தும் காலொடியா
வெள்ளை அருவியள்ளி
நீ குளிக்கும் ஷவருக்குள் நிற்க வைத்துத் தரவா? ச�ொல்!

இலவம் பஞ்சு மெத்தைகள் ஏன்? இளைய மேகக் கத்தைகள் ஏன்? பூ அதனுள் நீ துயில
புதிய மெத்தை தரவா? ச�ொல்!

பொன்பூச்சுப் போதும் இனி பூங்கன்னம் நோகுமடி
பௌர்ணமியை அம்மியிட்டு பவுடராக்கித் தரவா? ச�ொல்!

மையெழுதும் கோல் உரசி மணி விழிகள் கசங்கிடாதா கொஞ்சூண்டென் உயிர் உருட்டி கோல்களாக்கித் தரவா? ச�ொல்!

வாய் திறந்தால் பூவோ என வருகிறதே பட்டாம்பூச்சி! அதைவிரட்ட அங்கேயே அமர,என்னைத் தரவா? ச�ொல்!

இல்லையெனில்

சின்னமல்லிப் பூ கொஞ்சம் சிந்துவகைப் பா கொஞ்சம் ச்சீப் போடா அதில்கொஞ்சம் தேவதையே! தரவா? ச�ொல்!

- விக்டர்தாஸ்

எழுதும் ஆர்வம் எப்படி வந்தது?
சிறுமி சு. பிரவந்திகா வின் சொல்வளம் கேட்போம்!

- தமிழ்நெஞ்சம் அமின்

2  • |7

வணக்கம் பிரவந்திகா. உங்களைப் பற்றி கூறுங்கள்.

வணக்கம் ஐயா. நான் சு.பிரவந்திகா. மூன்றாம் வகுப்பு படிக்கிறேன். பெற்றோர் விமலா, சுரேஷ் கண்ணன் ஆவார்கள். சென்னையில் வ சித்து வருகிறேன். புதுக்கவிதைகள், தன்முனைக் கவிதைகள், சிறுவர்களுக்கான கதைகள், நூல் விமர் சனங்கள் எழுதிக் கொண்டு வருகிறேன்.

எழுதும் ஆர்வம் எப்படி வந்தது?

எனது மூன்றரை வயதில் ஆச்சி அன்புச்செல்வி சுப்புராஜூ, தாத்தா சுப்புராஜூ அவர்களுடன் ஒரு கவியரங்கம் சென்று இருந்தேன். அங்கு உழவர்களைப் பற்றி எல்லோரும் கவிதை வாசித்தார்கள். அதைக் கேட்டதும் எனக்குத் தோன்றிய கவிதையை நானும் கூறினேன். அங்கிருந்த பெரியவர்கள் ‘‘வரகளகவி’’ என்று பாராட்டினார்கள். அதனால் ஏற்பட்ட ஆர்வத்தில் தொடர்ந்து எழுதத் தொடங்கினேன். தமிழில் புதுக் கவிதைகள் எழுதி கவியரங்கங்களில் வாசித்து வந்தேன். எனது புதுக்கவிதைகளில் ஒன்று ‘‘கவிமலர்கள் 1130 கவிதைகளின் சங்கமம்’’ என்ற உலகசாதனை புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது.

புதுக்கவிதையுடன் வேறு என்ன எழுதி வருகிறீர்கள் மா?

புதுக்கவிதைக்கு அடுத்ததாக தன்முனைக் கவிதைகள் எழுதுவதில் எனக்கான ஆர்வம் பெருகியது. எனது ஆச்சி அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்கள் «அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்» வழியாகக் குழந்தைகளுக்குத் தன்முனைக் கவிதைகள் எழுதும் பயிற்சி அளித்து வருகிறார்கள். என் ஆர்வத்திற்கு இதுவும் ஒரு காரணம் எனலாம்.

எனது ஏழு வயதிலிருந்து தன்முனைக் கவிதைகளைத் தொடர்ந்து எழுதி வருகிறேன். நான் எழுதிய தன்முனைக் கவிதைகள் ‘‘மலர்கள் தீட்டிய வரைவுகள்’’ தொகுப்பு நூலிலும், முகநூல் குழுமங்களிலும், இணைய வெளிகளிலும் வெளிவந்துள்ளன. ‘‘இங்காவின் ஆலாபனைகள்’’ மற்றும் ‘‘அரும்புகளின் ஊர்வலம்’’ போன்ற தொகுப்பு நூல்களில் வெளிவரவிருக்கின்றது. பல கவியரங்குகளில் கலந்து கொண்டு தன்முனைக் கவிதைகளைத்
தொடர்ந்து வாசித்து வருகிறேன். சிறார்
படைப்பாளர்கள் கலந்து கொண்ட தன்முனைக்
கவியரங்கம் ஒன்றிற்கு தலைமைதாங்கிநடத்தித்
தந்துள்ளேன். பதினாறு வயதிற்குட்பட்ட
குழந்தைகளில் ‘‘தன்முனைக் கவிதைகள் எழுதிய

அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவை விழாவில் "தன்முனைக் கவிதைகள்" வாசித்த தருணம்

8| • 2

முதல் குழந்தை’’ என்ற சிறப்பு எனக்குண்டு.

மகிழ்ச்சி பிரவந்திகா. வாழ்த்துகள். சிறுவர் இலக்கியத்தில் சிறப்புடன் செயல் பட்டு வருகிறீர்கள் அதனைப்பற்றி கூறுங்கள்.

நன்றிங்க ஐயா. ஊரடங்குக் காலத்தில் ‘சிறுவர் இலக்கியச் செம்மல்’ கன்னிக்கோவில் இராஜா மாமா, தமிழ்ச்செம்மல் உமையவன் மாமா இவர்களின் கதைகளைக் காணொளி வழியாகக் கூறி வந்தேன். அந்த சமயத்தில் சிறுவர்களுக்கான பல அமைப்புகள் இயங்கி வருவதை அறிந்தேன். உழவுக்கவிஞர் உமையவன் மாமா மூலமாக ‘‘புத்தக நண்பன்’’ சிறுவர் அமைப்பில் ‘‘கதை சொல்லியாக’’ அறிமுகம் ஆனேன். தொடர்ந்து பல அமைப்புகளின் வழியாகப் பன்னாட்டுக் குழந்தைகளுக்கும் கதை சொல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

கதைசொல்லியான நீங்கள் கதை எழுத ஆரம்பித்தது எப்பொழுது?

‘‘லாலிபாப் சிறுவர் உலகம்’’ சிறுவர் குழுமத்தில் நிறுவனர் கன்னிக்கோவில் இராஜா மாமா குழந்தைகளுக்கு கதை எழுதும் பயிற்சி தந்து கொண்டுள்ளார். அதில் கலந்து கொண்டு கதை எழுதும் நுணுக்கங்கள் அறிந்து கொண்டு எழுதத் தொடங்கினேன்.

நான் எழுதிய கதைகளும், நூல் விமர்சனங்களும் ‘‘அந்தியில் மலர்ந்த மொட்டுகள்’’ , ‘‘சுக்கா.... புக்கா... முக்கா...’’ ‘‘குட்டி மேகங்கள் தூவிய தூறல்கள்’’, ‘‘வாண்டுகள் சொன்ன கதைகள்’’ போன்ற தொகுப்பு நூல்களிலும் வெட்சி இலக்கிய இதழிலும் ப ல மின்னிதழ்க ளிலும் வெளிவந்துள்ளன.

எ னது சி று வ ர் க தை களி ல் சிலவற்றைத்தொகுத்து ‘‘சிறகடிக்கும் பட்டாம்பூச்சி’’ என்னும் சிறார் கதை நூலாக ‘‘லாலிபாப் சிறுவர் உலகம்’’ பதிப்பகம் வாயிலாகச் சமீபத்தில்வெளியாகியுள்ளது.

ஆச்சியும், அம்முவும் ...இணையவெளி நிகழ்வில்

நான்கு வயதில்கவிமலர்கள் பைந்தமிழ்ச் சங்கம் கவியரங்கம் நிகழ்வில்..

கவிமலர்கள் பைந்தமிழ் சங்கம் ஆண்டு விழாவில் மூன்றரைவயதில் பாடலாசிரியர் நிகரன் கைகளால் "இளங்கவி" விருது பெற்ற தருணம்

2  • |9

உங்களின் புத்தகம் வெளியான மைக்கு எங்களின் வாழ்த்துகள். மேலும் எம்மாதிரியான நிகழ்வுகளை வழங்கி வருகிறீர்கள்?

ம ன மா ர்ந்த ந ன்றி ங்க ஐயா. ‘‘தமிழாழி தொலைகாட்சி - கனடா’’ வழியாக ஒளிபரப்பாகும் ‘‘பல்சுவைக்களம்’’ நிகழ்வில் பன்னாட்டுத் தோழமைகளுடன் இணைந்து கதைகள் கூறுவது, கவிதைகள் வாசிப்பதுடன் இணைத் தொகுப்பாளராகவும் பயணித்து வருகிறேன்.

நீங்கள் பெற்ற சான்றிதழ்கள், விருதுகள் ?

எ ழி ல் இல க்கி ய ப் பே ர வை, கவி ம லர்க ள் பைந்த மி ழ் ச் சங்க ம், தமிழ்ப்பட்டறை, உலகத்தமிழ் ஹைக்கூ மன்றம், தன்முனைக் கவிதைகள் குழுமம், கவியுலகப் பூஞ்சோலைக் குழுமம், தமிழ் அமெரிக்கா சிறுவர் பேரவை, தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை, புத்தக

நண்பன், லாலிபாப் சிறுவர் உலகம், கிட்ஸ் தமிழ் ஸ்டோரீஸ், அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் உள்ளிட்ட உலகளவிலான பல அமைப்புகளின் வாயிலாகக் கதைகள் சொல்வதிலும், கவிதைகள் எழுதுவதிலும், வாசிப்பதிலும் பல சான்றிதழ்களையும் ‘‘இளங்கவி’’, ‘‘வளருங்கவி’’, ‘‘இளம் எழுத்தாளர்’’ உள்ளிட்ட சில விருதுகளையும் பெற்றுள்ளேன்.

சிறப்பு. உங்களின் எதிர்கால கனவு என்ன?

வாசிப்பதும், எழுதுவதும் மிகவும்
பிடிக்கும். நிறைய வாசிக்க வேண்டும்.
எழுத வேண்டும். சொந்தமாகத் தொழில்
தொட ங்கி நட த்த வேண்டும் என்ற
ஆர்வமுள்ளது.

பள்ளியில் நடைபெற்ற மாறுவேடப் போட்டியில்
வீரமங்கை வேலுநாச்சியாராக.. அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவை விழாவில் நடிகை ரேகா பொன்னாடை
போர்த்துகிறார்

10| •  2

உங்களின் கனவுகள் நிறைவேற எங்களின் வாழ்த்துகள்.

நேர்காணல் கண்டு வெளியிட்டு ஊக்க ம் த ரும் உங்களு க் கு ம் எ ன து வணக்கங்களும் நன்றியும் ஐயா.

அந்த வேப்பமரக் கிளையில
காக்கா அப்பாவும், அம்மாவும் கூடு கட்டி வாழ்ந்து வந்தாங்க.

அம் மா காக்கா முட்டை யி ட் டு அடை காத் து க்கி ட்டு இரு ந்தா ங்க. அவங்களுக்கு அப்பா காக்கா உணவு கொண்டு வந்து தருவாங்க. இரண்டு பேரும் பேசிச் சிரிச்சிக்கிட்டே மகிழ்ச்சியா இருந்தாங்க.

இவங்க கூடுக்கு ப் பக்கத் து க் கிளை யி ல் நாள்தோறு ம் கு யி லி யு ம், குயிலனும் பாட்டு பாடுவாங்க. அவங்க குரல் கேட்கும் பொழுதே இனிமையாக இருக்கும்.

அம் மா காக்கா குயில்க ளின் குரலைக் கேட்டு கண்களை மூடி, தலை யாட்டி இரசிக்கும்.

ஒரு நா ள் கு யி லி... ‘ ‘ எ ன்ன காக்காம்மா, எப்படி இருக்கீங்க’’ எனக் கேட்க...

‘‘நல்லாயிருக்கேன் குயிலு, நீ
எப்படி இருக்க’’

• •



ஓவியக்கவிஞர் அமுதபாரதி, கவிஞர் ஆரூர் தமிழ்நாடன் , கவிஞர் தாழை. உதயநேசன் ஆன்றோர்களுடன் சு.பிரவந்திகா

"தன்முனைக் கவிதைகள்" குழுமத்தின் பாராட்டு சான்றிதழும், பயனாடையும்... நடிகை ரேகா வழங்க உடன் நிறுவனர் கவிச்சுடர் கா.ந. கல்யாணசுந்தரம் ஐயா

2  • |11

‘‘நல்லாயிருக்கேன்மா, இந்தக் கூடு எப்படி கட்டுறீங்க, பார்க்க அழகாயிருக்கு, நாம இடுற முட்டைகளும் பாதுகாப்பா இருக்கும். எனக்குத்தான் கூடு கட்டவே தெரியமாட்டேங்குது’’ ஆச்சரியமாகக் கேட்டது குயிலி.

‘‘நீ ரொம்ப நல்லா பாட்டுப் பாடற, கேட்க, கேட்க ஆசையா இருக்கு. நான் நெனச்சாலும் உன்னைப் போல பாட முடியுமா?’’ னு பாராட்டியது காக்கா.

அன்றிலிருந்து இருவரும் நல்ல நண்பர்களாக ஆனார்கள்.

குயிலிக்கு முட்டை இட வேண்டிய நாள் கிட்ட வந்தது. குயிலி கவலையோட உட்கார்ந்து இருக்கிறதைப்பார்த்த குயிலன்

‘‘என்னாச்சு கண்ணம்மா, ஏன் இப்படி உட்கார்ந்திருக்க’’ னு கேட்டது.

‘‘ஒன்றுமில்லை’’ என்றவாரேதள்ளி உட்கார்ந்தது குயிலி.

‘‘முகம் வாட்டமாக இருக்கு, ஒன்னு மில்லைங்கிற’’ குயிலன் கேட்கவும்

‘‘இல்லை, முட்டையிடுற நாள் வந்துடுச்சு’’ சொன்னது குயிலக்கா.

‘‘அதுக்கேன் கவலைப்படறே, ஏதாவது வழி பிறக்கும்’’ ஆறுதலாகப் பேசியது குயிலன்

‘‘நமக்குனு சொந்தமாகக் கூடு இல்லையே, கட்டவும் தெரியலை, எங்க போய் முட்டை இடுறது. அதான் கவலையா இருக்கிறது’’ குயிலி சொல்லவும்...

என்ன செய்யலாம் எனச் சிந்தித்த
வ ாறு மேலும், கீழுமா க ப் பார்த்தக் குயிலன் வேப்பமரக் கிளையில் இருந்தக் காக்கா கூட்டைக் கண்டதும் மகிழ்ச்சி கொண்டது.

‘‘நான்போய் காக்காம்மா கவனத்தைத் திசை திரும்புகிறேன். எதாவது செய்து கூட்டை விட்டு தூரமாக காக்காம்மாவை அழைச்சிட்டுப் போயிடறேன். நீ அந்த சமயம் காக்கா கூட்டில் முட்டை இட்டுவிடு’’ என்றது.

‘‘அது தப்பில் லை யா ’ ’ குயிலி தயங்கியது.

‘‘இதோ பாரும்மா, நமக்கு கூடு கட்டத்தெரியாது. கூடவேநம்ம முட்டையை அடையாளம் கண்டு பிடிக்க காக்காவால முடியாது. அதனால நான் சொல்றதுதான் சரியானது’’ மெதுவாக சொன்னது குயிலன்

‘‘அதெல்லாம் காக்காம்மா கண்டு
பிடிச்சிடுவாங்க’’ குயிலி சொல்ல...

கதைக்கான ஓவியம் வரைந்தது

பா.பு.சரவணபாண்டியன்
ஏழாம் வகுப்பு
நாகப்பட்டினம்

  •

12| • 2

‘‘எப்படி கண்டுபிடிப்பாங்க?’’ வினவிய குயிலன் ‘‘அவங்க இட்ட முட்டை களோட எண்ணிக்கை தெரியும் தானே... அதை வச்சு கண்டு பிடிப்பாங்க’’ குயிலி சொன்னதைக் கேட்டு மீண்டும் சிந்திக்கத் தொடங்கியது

‘‘இம்... ஒரு யோசனை... அப்பா
க ாக்கா இரை தேடச் சென்றது ம் காக்காம்மாதனியாகத்தானே இருக்கும்’’

‘‘ஆமா’’

‘‘அப்போது காக்காம்மாவின் கவ னத்தைத் திரும்பி அவங்களைத் தொலை வாகக் கூட்டிக்கிட்டுப் போயிடறேன்’’.

‘‘சரி’’

‘‘நீ அந்த சமயத்தில் அவங்க இடுற முட்டையில் ஒன்றை கீழே தள்ளி விட்டுவிட்டு நம் முட்டையை இட்டு விடு. திரும்பி கூட்டுக்கு வந்தாலும் காக்காம்மாவிற்கு எதுவும் தெரியாது. எப்படி என் யோசனை’’ ஆர்வமுடன் குயிலன் சொன்னதைக் கேட்ட குயிலி தலையை இடவலமாக ஆட்டியது.

‘‘நீங்க சொல்றது ச ரிதான், ஆனாலும் தப்பு’’ குயிலி சொன்னதும் ‘‘என்ன தப்பு குயிலி?, வேற வழியும் இல்லையேமா?’’ குயிலன்தடுமாறியது.

‘‘பொறுங்க, இதோ வரேன்’’... சொல்லியபடி காக்கா கூடுக்கருக்கில் சென்று உட்கார்ந்தது குயிலி.

‘‘வா... வா குயிலி, ஏன் வாட்டமாக இருக்கிற? எதாவது பிரச்சினையா?’’ கேட்டது காக்கா

‘‘ஒன்றுமில்லை காக்காம்மா... வந்து... வந்து...’’ குயிலி தயக்கமாய் நிறுத்தியதும்...

‘‘பரவாயில்லை, சொல்லு குயிலி,

என்னால் முடிந்தால் நான் உதவுகிறேன்’’ காக்கா ஊக்கமாய் பேசியதைக் கேட்டு ‘‘காக்காம்மா, இப்போ எனக்கு முட்டையிடுற நேரம், உங்களுக்குத்தான் தெரியுமே, எங்களுக்கு கூடு கட்டத் தெரியாது... அதான் உங்க உதவி கேட்டு வந்திருக்கேன்’’ என்றது.

‘‘நான் என்ன உதவி செய்ய முடியும் குயிலி?’’ காக்காம்மா ஆச்சரியப்பட ‘ ‘ உங்க ள் கூட்டி ல் மு ட் டை யி ட அனுமதி தரணும்’’ சொல்லியபடியே காக்காம்மாவைப் பார்த்தது குயிலி.

‘‘அ ட... இதற்கா இவ்வ ளவு தயங்கினாய்? வா, வந்து முட்டையிடு, எனது குஞ்சுகளுடன், உனது குஞ்சுகளும் ஒன்றாய் பொரியட்டும்’’ என்றது
காக்காம்மா.

கேட்ட குயிலிக்கு ஆனந்தம் தாங்க வில்லை. ‘‘உண்மையாகவா சொல்றீங்க காக்காம்மா’’... இறக்கைகளைப் படபடத்த படிக் கேட்க ‘‘ஆமாம் குயிலி, வா’’ என்றவாறு தள்ளி அமர்ந்தது காக்காம்மா.

குயிலி மெதுவாய் காக்கா கூட்டுக்
குள் அமர்ந்து முட்டையிட்டது. காக்காவும், குயிலியும் நாள்தோறும் முட்டையிட இறுதியில் காக்காம்மா அடைகாத்தது. காக்காம்மாவை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ள குயிலி பாட்டு பாடியது.

சில நாள்கள் சென்ற பின்னர் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தன. மற்ற பறவைகள் அனைவரும் காக்காம்மா வையும், குயிலியையும் வாழ்த்திமகிழ்ந்தனர்.
n

2  • |13

என் நெஞ்சுக்குள் நுழைந்து விட்டாய்

ந ழ டா
என் நெஞ்சுக்குள் நுழைந்து விட்டாய்

இலட்சம் கனவுகளைவிதைத்து விட்டாய்

வெண் பஞ்சாக இமைகளைத் வருடி விட்டாய்

தீஞ்சுவையாகத் தேனை எண்ணத்தில் ஊறவிட்டாய்

பஞ்சமேவார்த்தையில்மௌனமே ஆட்சியில்

தஞ்சமேதோகையில் தாகமே இதழ்களில்

பூக்களும் மலர்ந்ததே புன்னகை பூத்திட

தென்றலும் நிசப்தமாய் தேவியின் நினைவிலே

நிலவும் நாணியேமேகத்தில் மறைந்திட

நயந்தேகாதலைப் பகிர்ந்திடும் உறவே
Dr ஜலீலா முஸம்மில்

ஏறாவூர் - இலங்கை

வருவேன் அறியாத வாறு
வாராயோ என்று
வழிபார்த்துக் காத்திருத்தேன்

பாரா முகம்காட்டும்
பாதகத்தி - நேராய்
ஒருவார்த்தை கூறாய்

ஒருபொழுது பாரேன்
வருவேன் அறியாத
வாறு !!

தாராயோ என்றேன்

தருவேனே என்கிறாயா போராய் தினமுந்தான்

போகிறதே - நேராய்
எனதன்பேவந்தால்
இனியெனக்கு வாடை
கனன்ற நெருப்பாகும்

காண்.

பட்டுப்பூ கண்ணே
பறிக்கின்றேன் உள்ளமதை விட்டு விலகாதே
வீட்டருகில் - சிட்டாய்
பறக்காது நீயும்
பரபரப்பாய் நிற்பாய்
மறந்து விடுவாயோ

மாறு.

தென்றல் கவி

14| • 2

‘‘ஏய்... எதுக்கு கத்துற கொஞ்சம் அமைதியா இரேன்...’’ என்று கொஞ்சம் பலமாகவே பேசினேன். பெருகி வழியும் கண்ணீருடன் மூச்சிரைக்க விம்மிக் கொண்டே தன் கதறலைக் குறைத்தாள் என் மனைவி.

மெதுவாக என் மகன் இருந்த அறைக்குள் சென்றேன். கட்டிலில் படுத்த வாறு மூச்சு விட முடியாமல் தவித்துக் கொண்டிருந்த அவனை பார்த்து என் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு மெதுவாக அவன் அருகில் சென்றேன்
.

‘‘இன்னும் அரை மணி நேரத்துக் குள்ள உங்கமகனைநவீன ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போங்க, இல்லன்னா உங்க மகனேநீங்க பார்க்க முடியாம போயிடும்’’ என்று மருத்துவர் சொன்னது இதயத்தைப் பிழிந்தது. மூளையை ஏதோ செய்தது. எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் «தம்பி எழுந்திருப்பா... போகலாம்» என்று சொன்னதும் அவன் எழத் தொடங்கித் தடுமாறினான். அவன் எழுவதற்கு உதவி செய்தேன். அவன் தனது கைகளை என் தோளில் போட்டுக் கொண்டு எழுந்து நின்று கண்களில் கண்ணீர் வர இருமினான். ஒருகணம் நின்று நிதானமாக வெளியே அழைத்து வந்தேன்.

மகனின் நிலையையும், மருத்துவர் சொன்னதையும் நினைத்து மீண்டும் அழத் தொடங்கினாள் என் மனைவி. அவளை அமைதிப் படுத்தியவாறு மருத்துவ மனை யில் உள்ளவர்கள் பலரும் எங்களை வேடிக்கை பார்க்க வெளிப்புற வாசலை அடைந்தோம். நடக்கச் சிரமப்பட்ட மகனை வெளியே மதிலோரம் உட்கார வைத்தேன், மூன்று நிமிடம் கடந்து விட்டது.

என் னை நிதானப் படுத்திக் கொண்டேன். என் சட்டைப் பையில்

இருந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்தேன் 650 ரூபா. சேமிப்பு பழக்கம் சிறிதும் என்னிடம் இல்லை. கையிருப்புப் பணம் என்பது பையில் இருந்தது மட்டும் தான். யாரிடமும் பணம் கடன் வாங்கிய பழக்கமும் இல்லை. மேலும் 2 நிமிடம் கடந்து விட்டது.

‘‘தம்பி அம்மாவோட நீயும் வண்டியில உட்கார்ந்திடுவியா’’ என்றேன். சரி என்னும் பாவனையில் தலையை ஆட்டினான்.

‘‘உனக்கு ஒன்னும் இல்லடா சும்மா சளி மட்டும்தான், அதான் நெஞ்ச அடைக்குது. கொஞ்ச நேரத்துல எல்லாம் சரியாயிடும்.’’ என்று நம்பிக்கையூட்டும் சொற்களைச் சொல்லிக் கொண்டே என் வண்டியில் ஏறி உட்கார்ந்தேன்.

அவன் என் மனைவியின் துணை யோடு வண்டியில் உட்கார்ந்தான். அவனை ஒட்டி அவனைப் பிடித்துக்கொண்டே
அவளும் ஏறி உட்கார்ந்தவுடன்

‘‘போகலாமா’’ என்றேன்

‘‘ம்...’’ என்றமனைவியின் சத்தத்திற்கு
பின்னால் வண்டியை கிளப்பினேன்.

தேனி பங்களா மேட்டிலிருந்து

 •
ச.ந.இளங்குமரன்
நிறுவனர் - வையைத்தமிழ்ச்சங்கம்,
தேனி, நாகலாபுரம்.

2  • |15

அரண்மனைப் புதூருக்கு அருகிலுள்ள காயத்ரி மருத்துவமனையை அடைந்த பொழுது சரியாக 12 நிமிடங்கள் கடந்து விட்ட நிலையில், ஒரு புறம் மனைவி, இன்னொரு புறம் நான், எங்கள் இருவரின் தோள்களிலும் கையை போட்டுக் கொண்டு நடக்கத்தொடங்கினான் மகன்.

காயத்திரி மருத்துவமனையின் படிகளில் ஏறிக் கொண்டிருந்த பொழுது அவனுக்கு மூச்சிறைப்பு அதிகமாக நடக்க முடியாமல் தடுமாறினான். மீண்டும் என் மனைவியின் அலறல்...

மருத்துவமனைக்குள் இருந்தவர்கள் சிலர் ஓடி வந்தார்கள் மகனின்நிலையைப் பார்த்ததும் ஒருவர் தாமதிக்காமல் உடன டியாக வண்டியைத்தள்ளிக் கொண்டு ஓடி வந்தார். வண்டியில் அவனைப் படுக்க வைத்து உடனடியாக அவசர சிகிச்சை அறைக்குக் கொண்டு சென்றார்கள்.

செவிலியர் மருத்துவருக்குச் செய் தியைச் சொன்னவுடனேயே அவசர சிகிச்சைப் பிரிவுக்கு வந்துவிட்டார் மருத்துவர் மணி. முதல் உதவி எந்தப் பணமும் வாங்காமல் இரண்டு ஊசிகளைச் செலுத்தினார். மூச்சிறைப்புக்கு உடனடியா ஆக்சிஜன்பொருத்தப்பட்டது.

ஒரு தாளில் மருந்துகளை எழுதத் தொடங்கி பக்கத்தை நிரப்பினார். «இத வாங்கிட்டு வாங்க» என்று சீட்டைக் கையில் கொடுத்தார். மருந்து வாங்க கையில் இருக்கும் பணம் போதாது என்றாலும் நிலைமையை சொல்லி சமாளிப்போம் என்ற அசட்டுத் தைரியத்தில் மருந்துச் சீட்டோடு படியில் இறங்கினேன். நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டிருந்த நேரதில் அலறத்தொடங்கியது அலைபேசி. காதில் வைத்தேன்.

‘‘வணக்க மண்ணே, எப்படி இருக் கீங்க’’ எதிர்முனையில் கணேசின் குரல்.

‘‘நல்லா இருக்கேன்தம்பி, நீங்க எபடி

இருக்கீங்க? என்ன இந்நேரம்?’’ என்றேன்.

‘‘நல்லா இருக்கண்ணே’’ என்று சொல்லிக்கொண்டே ‘‘அக்காவோட அரண்மனைப் புதூர் விலக்குல பார்த்தேன், ஏதும் விசேசமா?’’

‘‘ஒன்னுமில்ல தம்பி, ஒரு சின்ன வேல... ஆமா விலக்குல நீங்க எப்படி..’’

‘‘கடைக்கு வசூலுக்கு வந்தேன்... அண்ணன் போறதப் பார்த்தேன், அப்படியே பேசனும்னு தோனுச்சு..., ஆமண்ணே இந்நேரம் என்ன வேல?’’.

‘‘தம்பிக்கு கொஞ்சம் உடம்பு சரியில்ல.. அதான் காயத்திரி மருத்துவ மனைக்கு வந்தேன்’’ என்று சொல்லிக்

நெஞ்சமெங்கும் நிறைந்தவள்

கொஞ்சும் குமரியுன்னை
மஞ்சம் வாவழைத்தேன்
நெஞ்சம் நேசந்தன்னில்
பஞ்சம் ஏதுமில்லை

அஞ்சும் விழியழகு
கெஞ்சும் மொழியுனது
தஞ்சம் தன்னிலென்றும் மஞ்சம் மணக்குமல்லி

நித்தம் நிறைகுடமாய்
புத்தம் புதுமலராய்
சித்தம் கலங்கச்செய்தே வித்தை பலபுரிந்தாய்

அத்தை மகளேவா
மெத்தை இரவேசுகம
கொத்தும் கோவைக்கனி பித்தில் மனம்வெம்பி

இன்பம் இதுபோலில்லை வந்ததும் வரவின்நிலை ச�ொந்தம் ச�ொர்க்கந்தானும் பக்கம் பரிமளிக்கும்

கவிஞர் கவிமழை

16| •  2

கொண்டே மருந்தகத்தை அடைந்தேன். சீட்டை உள்ளே நீட்டினேன், சீட்டைக் கையி ல் வா ங்கிக் கொண்டு ம ரு ந் து கடைக்காரர் மருந்துகளை எடுக்கத் தொடங்கினார்.

‘‘எவ்வளவு பணம் வச்சிருக்கீங்க?’’ என்ற கணேசின் கேள்விக்கு சட்டென்று கையிருப்பைச் சொல்ல முடியாமல் தடுமாறிக்கொண்டே சற்று நகர்ந்து ‘‘அதெல்லாம் இருக்கு தம்பி, பணத்துக்கு சிக்கல் ஏதும் இல்லை’’ என்று நடந்து கொண்டே பதில் சொன்னேன்.

‘‘சரிண்ணே பார்த்துக்கோங்க’’ என்றவர் அலைபேசியைத் துண்டித்தார். என் அலைபேசியைச் சட்டைப்பையில் வைத்து விட்டேன்.

‘‘உனக்கு எவ்வளவு திமிர், வீராப்பு, எவ்வளவு பணம் வச்சிருக்கீங்கன்னு கேட்ட வுடனே உண்மையைச் சொல்ல வேண்டியது தானே. மருந்துக் கடைக் காரரை எப்படிச் ச மா ளி க்கப் போற...? எ ன்னைக்கி உன்னோட கொள்கை கோட்பாடெல்லாம்

விடுவியோ அன்னைக்குத் தான் நீ ஒரு உருப்படுவ’’ என்று எள்ளி நகையாடிய மனத்திற்குப் பதில் சொல்ல இயலாமல் குழப்பத்துடன் அமைதியானேன்.

கணேசன் நல்ல நண்பர். என்னை
வி ட ஒரு பதினைந்து வயது குறை வானவர். கடந்த எட்டு ஆண்டு களுக்கு மேலாக எனக்கு அவர் நல்ல பழக்கம். என்னை ஓரளவிற்கு நன்கு தெரிந்து வைத்திருப்பவர். தேனியில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வரும் அவர் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். அடிக்கடி என் அலுவலகத்திற்கு வந்து போவார். நிறைந்த பொதுச் செய்திகளை இருவரும் விவாதிப்போம். ஆனாலும் பொருள் தொடர்பாகவோ, வேறு உதவிகள் தொடர்பாகவோ, அவரிடம் கேட்டதில்லை. அது நட்பின்பெருமையைக் குழைத்துவிடும் என்பது என் எண்ணம்.

எண்ணத்தைத் திசை திருப்பியது மருந்துக் கடைக்காரரின் அழைப்பு. சென் றேன், மருந்துகளை எல்லாம் பையில் போ டுவ தற் கு வசதியாக வைத் து க் கொண்டு ஒரு சீட்டை நீட்டினார் கடைக்காரர். கையில் வாங்கிப்பார்த்தேன். மருந்துகளின் விலைப்பட்டியல் போடப் பட்டு மொத்தம் 1540 ரூபாய் என்றிருந்தது. பை யிலிருக்கும் பணத் தை எடு த் து எண்ணத் தொடங்கினேன்.

‘‘ எ வ்வ ளவுண்ணே..? ’ ’ இ து கணேசின் குரல். இனம் புரியாத மன நிலையில் நான் ‘‘வாங்க தம்பி’’ என்று சொல்லிக்கொண்டே தொகையைச் சொன்னேன். அவர் தன் பையில் இருந்த பணத்தை எடுத்து ‘‘இதுல 5000 ரூபா இருக்குண்ணே’’ என்று நீட்டினார். பதட்டமும் ஆனந்தமும் என்னை தொற்றிக் கொண்டது. ‘‘இல்ல தம்பி... இருக்கட்டும், நான் வச்சிருக்கிறேன். தேவைன்னா கேட்டு வாங்கிக்கிறேன்’’

சட்டென்று என் கையைப் பிடித்த கணேசன் ‘‘பரவாயில்லண்ணே, வையுங்க பிறகு பார்த்துக்கலாம்’’ என்று பணத்தை என் கையில் திணித்து விட்டார். கண்கள் ஒருபுறம் கசிய தொடங்கினாலும் காட்டிக் கொள்ளவில்லை நான்.

மருந்துகளை வாங்கிக்கொண்டு இருவரும் தம் பி யி ன் அ றையை அடைந்தோம். அவன் நிலையைப் பார்த்து ஊக்கமான, நம்பிக்கையூட்டும் வார்த்தைகளைச் சொல்லி விடைபெற்றார். தொடர்ச்சியாக நான்கு நாட்கள் மகன் காப்பாற்றப் பட் டான். தொடர்ந்து 20 நாட்களுக்கு மாத்திரை சாப்பிட வேண்டும். குளிர்ச்சியான பொருட்கள் ஏதும் கொடுக்கக்கூடாது, நடக்கக்கூடாது, என்ற கட்டளைகளோடு நாளை காலை வீட்டிற்கு அழைத்துச் செல்ல அனுமதி கொடுத்தார் மருத்துவர்.

மறுநாள் காலை அலைபேசியில் முகநூல் பக்கத்தை திறந்தேன். மனதின்

2  • |17

இறுக்கம் கொஞ்சம் தளர்ந்து இருந்தது. நான்கு நாட்கள் கழிந்த நிலையில் மகன் காப்பாற்றப்பட்டு விட்டான். இன்று வீட்டுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். எனது மனைவி வந்து தான் என்னை அனுப்பி வை ப்பா ர். காத்தி ரு ப்பு ம் பரபரப்பும் சேர்ந்து கொண்ட நிலையில் முகநூல் பக்கத்தில் வந்த செய்தி பெரும் அதிர்ச்சியைத் தந்தது. படபடப்பில் உடம்பெல்லாம் ஆடத் தொடங்கியது. தமிழ்த் தேசியக் களத்தை உருவாக்கம் செய்யும் பொ ருட்டு ப டிப்ப டியாய் மாநிலம் முழுமைக்குமாக அபரிமிதமாக வளர்ந்து கொண்டிருந்த எஸ் ஆர் தமிழன் பெங்களூர் விடுதியில் மரணம்.

மரணச் செய்தியில் உறைந்து போனேன். அரசிய ல் தொட ர் பா ன ஆளுமைகளின் முதலில் தனது இருப்பை நிலைநிறுத்த நானும், அண்ணன் தங்கப்பாண்டியன், சக்திவேல் உள்ளிட்ட நண்பர்களும் 10 நாட்களாக ஆவணங் களைத் தயார் செய்து அவரை கொல்கத்தா விற்கு அனுப்பிவைத்தோம். வெற்றியோடு வருவார் என்று எண்ணி கிடந்த எனக்கு முகநூல் செய்தி பேரிடியாய் இருந்தது.

அண்ணன் தங்கப் பாண்டியனுக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டேன். அவர்பெங்களூர்பயணத்தில் இருப்பதாகச் சொல்லிக் கண்கலங்கினார். அலை பேசியை அணைத்த மறுகணம் மீண்டும் அலறியது. தொடர்பில் வழக்குரைஞர் தனுசுக்கோடிப் பாண்டியன்.

தமிழனின் படையில் முதன்மை யானவர். நிறைந்த சிந்தனையும், மாநிலம் முழுமைக்குமாக தொடர்பும் கொண்டவர். சி றந்த சிவ பக்த ர். தொண்டு ள்ள ம் நிறைந்தவர்.

‘‘வணக்கம்ண்ணே எங்க இருக் கீங்க?’’ தனுசுக்கோடியின் கேள்வியைத் தொடர்ந்து மருத்துவமனை தொடர்பான சில நிகழ்வுகளைப் பேசினோம். அவர் எதற்காக என்னை அழைத்தாரோ, அந்தக்

காரணத்தை நானாகவே இயல்பாகச் சொன்னேன்.

‘‘ எ ன்ன ண்ணே உங்க மாப்

பிள்ளைக்கு இப்படி ஆகிப்போச்சு’’ என்று.

‘‘ என் தன் மானத் தலை வன்’ ’ என்று தொடங்கி தமிழனைப் பற்றி அடுக் கடுக்கான சொற்களை நா தழுதழுக்கப் பேசியவர் ‘‘நான் பிறகு பேசுறண்ணே’’ எ ன் று இ ணை ப் பைத் து ண் டி த் து விட்டார். அவரின் அழுகை பேச முடியாமல் தடுக்கிறது என்பதைப் புரிந்து கொண்டேன்.

காலை சுமார் பதினொரு மணிக்கு குளித்து உடைகளை மாற்றிவிட்டு மீண்டும் மருத்துவமனைக்கு வந்தேன், ம கனி ன் அ றை க்குள் செ ன்றேன், மனைவியும் மகனும் கிளம்பத் தயாராக இருந்தார்கள்.

‘‘சீட்டு கொடுத்தாங்களா’’என்றேன்.

‘‘எல்லாமே முடிந்தது நாம கிளம்புறதுதான்பாக்கி’’ என்றாள் மனைவி. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

‘‘நீங்க வீட்டுக்குப் போன கொஞ்ச நேரத்துல தனுசுக்கோடி அண்ணன் வந்தார். கொஞ்ச நேரம் பேசிட்டு இருந்தார். பிறகு வெளியே போயி கொஞ்ச நேரம் கழிச்சு பில் முழுமைக்கும் கட்டி விட்டதாகச் சொல்லி சீட்டைக் கொடுத் துட்டு நீங்க வந்தபிறகு வருரதாச் சொல்லிட்டுப் போனார்’’ என்று சீட்டை நீட்டினார்.

எனக்கு கலங்கி அழுவதைத் தவிர வேறு ஒன்றுமே தோன்றவில்லை. கணேசும், தனுசுக்கோடியும் எதிர்பாராமல் செய்த உதவியை எப்படி சொல்வேன்... அவர்களுக்கு கைமாறு என்ன செய்வேன்.

‘‘காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது’’

18| •  2

காத்திருக்கத் துவங்கினான்.
த ன க் கு வாய்த்த வ ச தியா ன வாய்ப்பு தேவிக்கு நிச்சயம் பிடிக்கப் போவதில்லை என்பதை ஏற்கனவே ஊகித்தறிந்தவன், அவளைக் கொன்று விட தீர்மானித்து வாங்கி வைத்திருந்த சய னை டு துகள் த ற்போ து ப ய ன் பட்டதை எண்ணி மகிழ்ந்தபடி தேவிக்காக காத்திருந்தான்.
முகம் கழுவிக் கொண்டு வந்தமர்ந்த தேவியை ஏறெடுத்த அரவிந்த், ‘‘தேவி உன்னை மோசம் பண்ணிட்டு நான் என்னோட முதலாளி மகளை கல்யாணம் பண்ணிக்க விரும்பலை..அதுவும் என்னோட குழந்தை வேற உன்னோட வயித்திலே வளருதுன்னு வேற சொல்லிட்டே..நான் என்னோட முடிவை மாத்திக்கிறேன்.. நீ.. இந்த கூல்டிரிங்க்ஸை குடி.. நாம கிளம்பலாம்.’’

என்றவனாய் தன் முன் இருந்த டிரிங்க்ஸை எடுத்துக் கொண்டவனாய் தனது உதட்டில் வைத்து உறிஞ்சியவன் திடுமென வாயில் இருந்து நுரை வழிய கண்கள் சொருக டேபிளில் தலை கவிழ்ந்தான்.
இவன் திடுமென சாய, வீலென அலறிய தேவியைக் கண்டு,ஹோட்டலின் பல டேபிள்களில் அமர்ந்திருந்தவர்கள் இவளை நோக்கி ஓடி வந்தார்கள். சுழலும் வசதி கொண்ட அந்த டேபிளில் தேவியின் முன் வைக்கப் பட்ட குளிர்பானம், தேவி முகம் கழுவி விட்டு வந்து அமர்ந்த போது , அவளது கைபட்டு சுழன்றதை அரவிந்த் அறிந்திருக்கவில்லை.
n

 •
 

அரைகுறை வெளிச்சம் வியாபித்
திரு ந்த அ றையெங் கும் மெ லி தா ன
இசை ஆக்கிரமித்திருந்தது. டேபிள்களில்
தலையைக் கவிழ்ந்தபடி அமர்ந்திருந்த
தேவிக்கு இருபது வயதிருக்கலாம். நிறைய அழுதிருப்பாள் போலிருக்கிறது, கண்கள் சிவந்து முகமும் சிவந்து போயிருந்தது. தேவி..என்னை மறந்திடு..நான் வேலைபார்க்கற கம்பெனி முதலாளி மகளே என்னை விரும்பறதா சொல்றா..பல கோடி சொத்துக்கு அதிபதி..வர்ற அதிர்ஷ்டத்தை கைநழுவ விட எனக்கு விருப்பமில்லே.. நாம பழகின இந்த ஆறு மாச காலத்திலே உன்னை உண்மையா தான் காதலிச்சேன்.. ஆனா.. இப்ப கிடைச்சிருக்கற வாய்ப்பு.. நானே எதிர்பார்க்காத வாய்ப்பு. உனக்கும் நல்ல இடம் பார்த்து நானே கல்யாணத்தை முடிச்சு வைக்கிறேன். என்ன சொல்றே..? அரவிந்த், கேவலம் பணத்துக்கு நீ விலை போயிட்டேயில்லே..உன்னோட

குழந்தை என்னோட வயித்திலே வளருது.. அதுக்கு என்ன பதில் சொல்லப் போற..? ‘‘ எ ன்ன..?’’ சற்று போலியாய் அதிர்ச்சியை வெளிப் படுத்தியவன். யோசனையில் ஆழ்ந்தான்.
சரி..நீ போய் முகத்தை கழுவிட்டு
வா. நல்ல செய்தியை சொல்லியிருக்கே.. நல்லதொரு முடிவெடுத்திடலாம்.
தேவி எழுந்து நகர, அவள் செல்வ தையே பார்த்துக் கொண்டிருந்தவன், தனது பாக்கெட்டிலிருந்து ஒரு பொட்டலத்தைப் பிரித்து தேவி அமர்ந்திருந்த இடத்தில் வைக்கப் பட்டிருந்த கண்ணாடி குடுவையில் கொட்டியவன், தேவியின் வருகைக்காக

இராமவேல் முருகன் வாழியவே

கன்னித் தமிழுக்குக்
காவல்: இராமவேலர்
நன்னிறத்துப் பாக்களெல்லாம்
நாடறியும் - சென்னி
தனிலமர்ந்து நாளும்
தமிழ்படைக்கும் ஏற்றம்
உனிலமர வாழ்த்துகிறேன்
உள்.

தமிழ்நெஞ்சம் அமின்

தமிழ்நெஞ்சம்

ஃபிரெஞ்சு பதிப்பக நூல்கள்

நூல்விலை ஒவ்வொன்றும் 120 INR

FRENCH PUBLICATION
7, Dhanalatchumi Gardem 1st Street,
Solai Nagar, Muthialpet, Puducherry 605003

இந்த இரண்டு நூல்களும் சென்னை புத்தகக்கண்காட்சி (தங்கமீன் பதிப்பகம்) அரங்கு எண் 130 ல் கிடைக்கும். நேரில் செல்ல இயலாதவர்கள் எழுதிக்கேட்டால் அனுப்பித்தருவோம். ஆதரவாளர்களுக்கு நன்றி!

frenchpublication@gmail.com

அச்சான நூலும்
அகங்கொண்ட உன்கவியும்
வச்சிரக்கல் போல
வலம்வந்து - முச்சுடராய்
எங்கள் இதயத்தில்
என்றும் நிலைத்திருக்க
கொங்குத் தமிழை
கொடு.

ஏழு வரதராசன்

20|• 2

தனிமை!
தனித்திருந்தகாலம்
தனிமை என்னை அழைக்க தனியேநானும் சென்றேன் தயங்காமல் என்னை
தன்மடியில்வாங்கி கொண்டது அந்த தனிமை.

தனக்கென ஓர் உறவு
தன்வசமானதை அடுத்து தற்பெறுமைகொண்டேன் நானும்.

கோடி உறவுகள் கூடி இருந்தாலும் தனிமை கிடைப்பது வரம்தான்.

படைத்தவனோடு பேசும் போது துணைநிற்பதும் தனிமைதான்.

விழி நிரைந்து வழியும் போது ஆறுதல் அளிப்பதும் தனிமைதான்.

ஆழ்ந்தசிந்தனை சூழ்ந்திருந்தாலும் என்னை சுற்றி இருப்பதும் தனிமைதான்.

மனங்கவரும் காட்சியினை இரசித்து பார்கும் போது என்னருகில் இருப்பதும் தனிமைதான்.

என் புன்முறுவலின்
பின் ஒழிந்திருப்பதும் தனிமைதான்.

என் கவலையின் பின்

துணைநிற்பதும் தனிமைதான்.

மொத்தத்தில்நானே ஒரு தனிமைதான்.

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்
இலங்கை

2  • |21

அந்திவானம் மாறுவதேன்?

ஒரேவானம் ஒரே சூரியன்
வளர்ந்து தேயும் வட்டநிலா கண்சிமிட்டும் எண்ணிலடங்கா விண்மீன் கூட்டங்கள்!

இன்று கண்ணுக்கும்
மனதுக்கும்
அந்திவானம்
மயக்கம் தருகிறது!

நேற்றுப்போல் இன்று
அதே அந்திவானம்
மனம் மயங்கவில்லை!

அதேவானம் சூரியன்
விண்மீன் கூட்டங்கள்

சில உதிர்ந்து இருக்கலாம்.

அந்திவானம்
மனம் மயங்கவில்லை

மாறி காட்சி அளிக்கிறதா? மனதின் பார்வை
மாறி விட்டதா?
அந்திவானம் மாறுவதேன்?

கவிஞர் பொன்விலங்கு

பூ.சுப்ரமணியன்

l

கிணறு நிறைய நீர்
சிறுவர்கள் குதிக்கையில் திக்கெட்டும் தெளிக்கிறது பரவசம்.

l

ஜன்னலில் எட்டிப்பார்க்கும் பூனை தனித்து தெரிகின்றன
இருளில் ஒளிரும் கண்கள்.

l

மரத்தில்தொங்கும் தூக்குச்சட்டி பசியை மறந்தனர்
நாற்று நடும் பெண்கள்.

l

நகரும் மாட்டுவண்டி
அழகாக ஆடுகின்றன
பாட்டியின் காதுகளில் தண்டட்டிகள்.

l

கோயில் குளம்
தண்ணீரில் மிதக்கிறது
கோபுரக் கலசத்தின் நிழல்.

ச. கோபிநாத்
சேலம்



22|• 2

‘‘காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா’’ என்பது நம் முன்னோர்கள், சித்த வைத்தியர்கள் அன்றைய காலகட்டத்தில் உடலைப் பற்றிச் சொல்லிவைத்தது. அதற்குப் பிறகு நமது மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை, ‘’காயமே இது மெய்யடா, இதில் கண்ணும் கருத்தும் வையடா, நோயில்லாமல் காத்து நுாறாண்டுகள் உய்யடா’’ என உடம்பின் மேன்மையை, அக்கறையோடு மிகவும் அழகாக விளக்கியுள்ளார்.

இன்றைய சூழலில் எல்லாப் பொருளும் வீடு தேடி வருங்காலம். நாம் நினைத்தால் எந்தப் பொருளையும் விலை கொடுத்து வாங்கலாம். தேவையானதை அடைந்துவிடலாம். அதற்குப் பணம் ம ட்டுமே தேவை. ஆனால் வாங்க முடியாத பொருள் ஒன்று உலகினில் உண்டென்றால் அது உடல் ஆரோக்கியம் மட்டும்தான்.

உலகில்பிறந்த ஒவ்வொரு மனிதரும் உடல் ஆரோக்கியம் பேணுவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். உடலைக் கட்டுக்கோப்பாகவும் ஆரோக்கியமாகவும் நோய்கள் வராமலும் அழகாகவும் வைத்துக் கொள்வதற்கு உடற்பயிற்சி மிகவும் உறுதுணையாக இருக்கிறது. நாம் வாழும் வீடு, பயணம் செய்யும் வாகனம், உடுத்தும் உடைகள் யாவற்றிலுமே அலங்காரம், அழகு என்பவற்றை நாம் மிகவும் கவனமெடுத்துச் செயல்படுகிற�ோம். ஆனால் கிடைத்தற்கரிய சொத்தான உடலைப் பேணுவதற்கு எண்ணமே வருவதில்லை. நேரத்தை ஒதுக்கிப் பயன்படுத்துவதும் இல்லை. நேரமும் இல்லை, ஓய்வும் இல்லை என்கிற�ோம். அலுத்துக் கொள்கிற�ோம். அதனால்தான் இன்றைய காலகட்டத்தில் தொற்றுநோய்களும் தொற்றா நோய்களும் புற்றுநோய்களும் ம னித வாழ்வில்

புரையோடிக் கிடக்கின்றன. ஆயுளைக் குறைத்துக் கொண்டிருக்கின்றன எனலாம். எதையும் திட்டமிட்டு செய்தால் சாத்தியமே. முக்கியமாக ஒவ்வொருவரும் நம் வாழ்வில் சிறு நேரத்தை ஒதுக்கி உடற்பயிற்சியில் ஈடுபட வேண்டும். நாளாந்தம் செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை ஆனால் வாரத்திற்கு நான்கு நாள் அல்லது மூன்று நாள் என்ற அடிப்படையில் இருந்தாலே போதும். ஆனால் தொடர்ச்சி யாக கடைப்பிடிக்க வேண்டும். அப்படி செய்து வந்தால் நீங்களே அதன் பலனை கண்கூடாக கண்டு கொள்வீர்கள். அதிக மான பலனை அடைவீர்கள். உடற் பயிற்சியின் பலன் படிப்படியாக தெரியவரும்போது உங்களுக்கு அது பெரிய ஒரு உத்வேகமாக வாழ்வில் அமையும். அதை விடுவதற்கு உங்களுக்கு உள்ளம் இடம் கொடுக்காது.

உடற்பயிற்சியின்நன்மைகள் ஆவன:

1. மனதிற்கு புத்துணர்ச்சியும் மகிழ்ச்சியும் ஏற்படுத்துகிறது.
2. உடல் நிறையைக் குறைப்பதற்கு ஏதுவாக அமைகிறது.
3. உ டலை நோய்கள் அண்டாமல் பாதுகாக்கிறது. (நோய் எதிர்ப்பு சக்தி கூடுகிறது)
4. உடலுக்கு அழகையும் பொலிவையும் தருகிறது.
5. கட்டுக்கோப்பான உடலை வைத்திருப்
பதற்கு உதவுகிறது.
6. தேவையற்ற கொழுப்புப் படிவுகளை
நீக்குகிறது.
7. சர்க்கரை வியாதி, உயர் குருதி அமுக்கம்

 •  

Dr  •
 - 

2  •|23

போன்றவற்றை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகிறது.
8. சுவாசச் சீராக்கம், கழிவு வெளியேற்றம் என்பன ஒழுங்காக நடைபெறுகின்றன.
9. மன அழுத்தம் நீங்கி மனம் லேசாகிறது. சாந்தமான மனநிலை உருவாகிறது.
10. உறுதியான தசைக் கட்டும் எலும்பின் வலிமையும் பேணப்படுகிறது. அவற்றின் சேதத்தைக் குறைத்து ஆஸ்டியோ போரோசிஸ் நோயையும் தடுக்கிறது. 11.உடலின் ஒவ்வொரு செல்லினதும் செயல்திறனை அதிகரித்துச் சுறுசுறுப் படையச் செய்கிறது. இரத்த ஓட்டம் சீ ரா கிறது. இதனால் ஒவ்வொரு மனிதனினதும் ஆற்றல்மேம்படுகிறது. 12.மூளையின்செயல்திறன் அதிகரிக்கிறது. 13.நாட்பட்டநோய்கள் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது.அதன் வீரியம் குறைகிறது. 14.நிறைவான தூக்கம் கிடைக்கிறது. 15.சருமத்திற்கான பாதுகாப்பும் அழகும் கிடைக்கிறது.
16.ஞாபக சக்தி அதிகரிக்கிறது. 17.உடலுறுதி பேணப்படுகிறது

18.உண்ணும் உணவுகள் சரியாகச் செரி மானம் அடைகிறது.
19.ஆயுள் அதிகரிக்கிறது.

இப்படி அதன் எண்ணற்ற பயன் களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆகையால் அனைவரும் உடற்பயிற்சியை மேற்கொண்டு ஆரோக்கியமாக வாழ்வதில் கவனம் செலுத்துவோம். திட்டமிட்டால் எதுவும் சாத்தியமே.மகிழ்ச்சியே வாழ்க்கை யின் முதலான குறிக்கோள்.அந்த மகிழ்ச்சி யான வாழ்க்கையை அடைந்து கொள்வதற்கு ஆரோக்கியமான உடல் அவசியம். அதைப் பெற்றுக் கொள்வதற்காக உடற் பயிற்சி களைச் செய்வோம். உன்னதமான வாழ்க்கை வாழ்வோம். நோய்கள் இல்லாதநிம்மதியான வாழ்க்கையை அனுபவிப்போம்.

‘’விசையுறு பந்தினைப் போல் உள்ளம் மேவியபடி செல்லும் உடல் கேட்டேன்’’ என்ற பாரதியாரின் கூற்றுக்கு இணங்க வாழ்வோம்.
n

24|• 2

பூத்தமுகத் தாமரையில் பூசும் மதியெழிலில் கோத்த அனிச்சயிதழ்ப் புன்னகையில் – மாத்தமிழே நெஞ்சம் நிறைந்தாய் இரவெல்லாம் உன்நினைவில் தஞ்சம் புகுந்தேன் தவித்து !

மொட்டவிழ்ந் பூமரமே மொய்க்கும் விழிவண்டைக்
கட்டவிழா கொங்கைக்குள் கட்டிவைத்த – கற்பகமே பட்டத் தழகேஉன் பார்வைக் கடிபணிந்தேன் எட்டத்தில் கொல்லுவதோ நின்று !

பாரென்னும் பூம்பருவம் பக்கம்வா வென்னுமிதழ் தேரென்னும் மேனிதழு வென்றுரைக்கச் – சீரென்னும் நாணம் இடையில் தலைகவிழ்க்க வேகின்றேன் காமன் கணைமலரால் காண் !

கச்சை நகில்மூடிக் காணும் விழியீர்த்தே
இச்சை பெருக இடையசைத்தாய் – நச்சிமனம் அன்ன நடைபின்னே அன்பு குடைபிடித்தேன் என்னைக் குழைவாகத் தைத்து !

கண்ணின் இமைக்குள்ளே காதற்பூ உன்முகத்தை தண்ணீருள் மீனாகக் காத்ததனால் – மண்ணில் குருடாய் நடக்கின்றேன் துள்ளும்பூ மானே திறந்தால்நீ போயிடுவாய் என்று !

கண்திறந்த போதே வரும்கனவு நாயகியே என்னிதய ஏக்கத்தை எண்ணிப்பார் – உன்மீது வீசுமிளங் காற்றுவந்து பட்டாலும் என்மேனி தீசுமந்து போவதுதான் ஏன் !

சந்தனத் தேன்கலசம் சாயாத கோபுரத்தை முந்தானை மேகத்தால் மூடிவரும் – சுந்தரியே ஆலய வாசலில் அன்பிற்காய் ஏங்கும்என் கோலத்தில் நல்லருளைக் கூட்டு !

  
பாவலர் கருமலைத்தமிழாழன்

2  •|25

நாதம் இயற்றும்உன் நாமொழி ச�ொல்கேட்டால் ஓதமுறு தென்றலுக்கே போதைவரும் – சீத நிலவொளியும் ச�ொக்கிவிழும் ; நித்திலமே காதல் நிலவுமொழி நான்வாழச் செப்பு !

காலைக் கதிர்செம்மை கண்ணில் எடுத்துன்றன் மாலைப் பிறைநுதலில் பொட்டிடுவேன் – கோதையுன் கார்குழலின் மீதினிலே நட்சத் திரப்பூவை பார்வியக்க வைப்பேன் பறித்து !

வீட்டருகில் வந்தபோது வாயிற் படிநின்றே பாட்டிதழில் நீச�ொன்ன பாகுமொழி – கேட்டசெவி இன்பத்தை வேற்றொலிகள் ஈர்த்திடாமல் கைபொத்தி நின்றேன் நினைவில் நினைத்து !

பாதம் பெயர்க்கும்உன் பாங்குதனைப் பார்த்துவிட்டால் வேத முனிவருக்கும் ஆசைவரும் – காதல்
ரதியாளைக் காமனுமே கைவிடுவான் ; வீட்டுப் படியிறங்கி வாராமற் பார் !

செந்தூர மாலையிலே சித்திரமே நீநடந்தால் வெந்துருகி மாலும் கணைதொடுப்பான் – இந்திரையின் கண்சிவப்பில் சாம்பலாவோம் ; கண்மணியே நாமிணைய என்பார்வைக் குள்ளே இரு !

பார்வையிலே மின்சாரம் பாய்ச்சுகின்ற பூச்சரமே ஊர்சனங்கள் மெச்சுகின்ற அச்சாரம் – தார்சரமாய் நான்சூட்டித் தந்திடுவேன் நாள்மலரே தாகத்தைத் தேன்ஊற்றித் தீர்க்கவா இன்று !

தங்கமே உன்னைவர தட்சணை வாங்காமல் மங்கலநாண் இட்டு மகிழ்விப்பேன் – இங்குலவும் எம்மதம் ஆனாலும் என்னுடலின் பாதிநீயே
சம்மதம் உன்நாவால் தா !

விண்மீன்கள் புள்ளியிடும் வானவில்லோ கோலமிடும் வெண்ணிலவும் ஆதவனும் தோரண – கற்பகங்கீழ் குத்து விளக்காய் ஒளிகூட்டும் ; என்னவளாய் இத்தரையில் நீயாகும் போது !

26|• 2

‘‘வசந்த்! வசந்த்!’’ என்று முதலாளி அழைக்கும் குரல் கேட்டு ஓடி வந்தான் வசந்த். ‘‘அந்த மேசையைச் சுத்தம் பண்ணு சாப்பிட்ட இலை இருக்கு பாரு’’ என்றார் அந்த உணவகத்தை நடத்துபவர். ‘‘இதோ சுத்தம் செய்யுரேன் அண்ணே’’ என்று சொல்லி மேசையை சுத்தம் செய்தான் வசந்த்.

இரண்டு வருடமாக அந்த உணவ கத்தில் வேலை செய்கிறான் வசந்த். 12 -ஆவதில் நல்ல மதிப்பெண் பெற்றவன் வறுமையின் காரணமாக கல்லூரி படிக்க இயலாமல் வேலைக்கு வந்துவிட்டான்.

சர்வர்வேலைதான் அவனுடையது என்றாலும் அனைத்து வேலைகளையும் இழுத்துப் போட்டு செய்வான். டீ மாஸ்டர் இல்லாதநேரத்தில் டீ போடுவது சப்பாத்தி செய்வதுனு எல்லாவேலையும் அத்துப்படி அவனுக்கு.

வெறும் 12 வது படிச்ச வசந்த்க்கு வேறு எங்கும் வேலை கிடைக்கவில்லை. இங்கதான் கிடைத்தது . மூணு வேலையும் சாப்பாடு கிடைச்சிடும். இரவு வேலை முடிஞ்சி வீட்டுக்கு போகும் போது மீந்த உணவுக ளை எடுத்துச் செல்வான். அவனோட அம்மா மற்றும் அக்காவின் பசி போக்க.

அவனோட 5000 ரூபாய் சம்பளம் அம்மாவுக்கு மருந்து வாங்கவும் வீட்டு வாடகைக்குமே சரியா இருக்கு. பெயர் மட்டுமே வசந்த் வாழ்க்கையில் வசந்தத்தை காணலைனு நொந்துக்குவான்.

இரவு வேலை முடிந்து வீட்டுக்கு

கிளம்பினான் வசந்த். சாம்பார் குருமா எல்லாம் சரியாயிட்டு வெறும் இட்லி சப்பாத்தி தான் இருந்தது அந்த நேரத்தில் ஒரு கார் வந்து நின்றது அவங்க கடை வாசலில்.

கடை மூடிடும் நேரத்தில் சாப்பிட வந்தா என்ன செய்ய முடியும்னு வந்த வர்களிடம் முதலாளியின் பேசிக்கொண்டி ருந்தார். இதை கவனித்த வசந்த் அருகில் சென்று ஒரு நிமிடம் அண்ணே இங்க வாங்கனு முதலாளியிடம் பேசினான் . பிறகு அவர்களிடம் சென்று கொஞ்சம் நேரம் பொறுங்க உங்களுக்கு சாப்பாடு எடுத்து வரேனு உள்ளே போனான்.

இட்லியை பொடி, நல்லெண்ணெய் சேர்த்து பொடி இட்லி செய்தான். வெங் காயம் ,தக்காளி, மசாலா பொடி சேர்த்து சப்பாத்தியை கொத்து புரோட்டா போல செய்து எடுத்து வந்தான். பசியோட இருந்த மூவரும் நல்லா ருசித்து சாப்பிட்டனர்.

கிளம்பும் நேரத்தில் அவர்களில் ஒருவர் சற்று வயதான நபர் அருகில் வந்தார். வசந்த் கையை பிடித்து நன்றி கூறினார். அவருக்கு சக்கரை நோய் இருப்பதால் நேரத்திற்கு சாப்பிட வேண்டும் ஆனால் இன்று நேரம் ஆனதால் எங்கும் சாப்பாடு கிடைக்க வில்லை .உடல் பலகீனமான

சமயத்தில் வசந்த் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்தார்.

உதவிக்கு நன்றியாக 500 ரூபாய் பணம் கொடுத்தார். வசந்த் அதை வாங்க மறுத்தான் ‘‘தப்பா எடுத்துக்காதிங்க ஐயா நான் செய்யும் வேலைக்கு முதலாளி



சம்பளம் தருகிறார் எனக்கு இந்த பணம் வேண்டாம்'' என மறுத்தான் .

வசந்த்தின் இச்செயலால் ஆச்சரியம் அடைந்த அந்த நபர் சற்று யோசித்தார். “தம்பி நீ என்னோட வந்து வேலை பாக்குறியா? திருமணத்தின் வேலைகளை கவனிக்கும் வெட்டிங் பிளானர்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் நான் எனக்கு இப்ப உதவிக்கு ஒரு நம்பகமான ஆள் தேவை, நீ வரியானு''சட்டென்று கேட்டார் .

இதை எதிர்பார்க்காத வசந்த் பேச முடியாமல் திக்கி நின்றான். அவர்கள் பேசியதை கவனித்து கொண்டிருந்த அவனோட முதலாளி. ‘‘என்ன வசந்த் யோசிக்கிற வரேனு சொல்லு. எனக்கு இவரோட நிறுவனத்தை பத்தி தெரியும். நம்ப ஊரு பண்ணையார் வீட்டு திருமணத்தை இவங்கதான் செய்தாங்க. யோசிக்காம முடிவு எடு. எவ்வளவு நாள் தான் இங்க மேசை தொடைச்சிட்டு இருப்ப, அக்கா திருமணம், உன்னோட எதிர்காலத்தை நினைச்சு பாருனு'' சொன்னார்.

“உன்னோட முதலாளியே சொல் லிட்டாரு அப்புறம் ஏன் யோசிக்கிற? இப்பவே என் கூட வா, நாளைக்கு ஒரு அரசியல் பிரமுகர் வீட்டு திருமணம். நீ வந்தா எனக்கு ரொம்ப உதவியாக இருக்கும். இந்த வாரத்திலே ஐந்து திருமணங்கள் இருக்கு , முன்பணமா 5000 ரூபாய் தரேன் உன் வீட்டில் குடுத்திட்டு வானு» கூப்பிட்டார் அந்த நபர்.

வசந்த்தும் அவர்கள் சொல்வதை கேட்டு வீட்டுக்கு சென்று அம்மாவிடம் நடந்ததை சொல்லி பணத்தை தந்து விட்டு புறப்பட்டான். திருமண மண்டபம் நெருங்கியதும் வழி நெடுகிலும் பேனர்கள் வைக்கப் பட்டிருந்ததை பார்த்து கொண்டே வந்தான் . ஒரு இடத்தில் எழுதி இருந்ததை பார்த்தவன் மகிழ்ச்சியால் மனம் மகிழ்ந்தான். வசந்த்தமே வருக என்று எழுதியிருந்தது. அன்று முதல் வசந்தின் வாழ்வில் வசந்தம் வீசத் தொடங்கியது.

அன்பினைச் சுரக்கும் ஊற்று

இன்னுயிர் சுமக்கும் தெய்வம்
இயல்பினில் மலர்பி றப்பு
பொன்னணி பூட்டி னாலும்
பொசுக்கிடும் பார்வை கண்கள்
அன்பினைச் சுரக்கும் ஊற்றாய்
அனைவரின் இதயம் வென்று
வன்மனம் இல்லா தாளும்
வான்னிலா ஆவாள் பெண்டாள்
.
ஓரிடம் பூப்பாள்; பின்னே
உயர்ந்தநற் பண்பைக் கற்பாள்
ஊரிடம் மாறும் போதும்
உண்மையில் நிலைத்து நிற்பாள்
சேரிடப் பண்பா டெல்லாம்
சிந்தையில் புதிதாய் ஏற்றி
ஈரிடம் தனிலும் இல்லம்
இருகரம் தாங்கி நிற்பாள்
.
பெற்றவர் பாசம் எல்லாம்
பிறப்பினில் இயல்பாம் அஃதை
மற்றவர் மீதும் காட்டி
மனக்கனா தேக்கி வைப்பாள்
கற்பினைக் காத்து நின்று
கடந்திடும் வாழ்க்கை எல்லாம்
கற்பனைக் கெட்டா வண்ணம்
கடமையைச் செய்வாள் நன்றே

தமிழ்நெஞ்சம் அமின்

28|• 2

One reason people resist change is because they focus on what they have to give up instead of what they have to gain – Rick Godwin

தனக்கு என்ன நலன் கிடைக்கும் என்று பார்ப்பதை விட்டும் தான் எதை இழக்க வேண்டியிருக்கும் என்று பார்ப்பதாலேயே மாற்றம் பலருக்கும் சிரமமானதாக இருக்கிறது - ரிக் காட்வின்

Dr. 



இந்த சூழல் மாறினால் தானே

என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.
இப்படி, எந்த சூழலில் இருந்தாலும் அந்த சூழலே தன் மகிழ்ச்சியின்மைக்கு காரணம், அது மாறினால் தான்தன்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்றே பலரும் எண்ணுகிறார்கள்.
மாற்றம் நிச்சயம் அவசியமானது தான். மாற்றம் ஒன்றே மாறாதது. மாறிக் கொண்டே இருக்கும் இந்த உலகில் மாற்ற ம் மு ன்னேற்றமே. ஆ னால் உங்கள் சூழல் மாற வேண்டுமென நீங்கள் மகிழ்ச்சியை தள்ளிப் போட்டு கொண்டிருக்கின்ற அதே நேரத்தில், உங்களை நீங்கள் மாற்றிக் கொண்டால் மகிழ்ச்சியும் உங்கள் வசப்படும். உங்கள் சூழலும் மாறும்.
Be the change that you wish to
see in the world-Mahathma Gandhi. Doing the same thing and expecting diffe-rent result is insane - Einstein. உங்கள்

உலகம் எப்படி மாற வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அந்த மாற்றத்தை முதலில் உங்களிடம் செயல்படுத்துங்கள் என்று மகாத்மா காந்தியும், எந்த மாற்றமும் இல்லாமல் ஒரே மாதிரி விஷயங்களை செய்து கொண்டு இருந்து கொண்டு வேறு

ரிசல்ட் வர வேண்டும் என்று நினைப்பது முட்டாள்தனம் என்று, ஐன்ஸ்டீனும் கூறுவது மாற்றமே முன்னேற்றம் என்பதை சொல்வதோடு அது எங்கிருந்து எழ வேண்டும் என்பதையும் மிக தெளிவாக சொல்லுகிறது.
கூண்டுக் கிளிகளுக்கு பறக்க நினைப்பதே பாவம் என்று தோன்றுகிறது என்கிறார் அலெயான்ரோயோட்றோவ்ஸ்கி (Alejandro Jodrowsky) அவர் சொல்வது போல், எப்படி கூண்டுக்குள்ளேயே பிறந்து கூண்டிலேயே வளரும் பறவை அதையே தனது வாழ்க்கைச் சூழல் என்று நம்பிக் கொண்டிருக்குமோ அது போலவே நீங்கள் உங்கள் தகுதி திறமையை அறியாமல் நீங்கள் நினைத்தால் எந்த சூழலும் மாறும் என்பதறியாமல்பெரும்பாலும் மகிழ்ச்சியற்று தவிக்கிறீர்கள்.
வெளியில் ஒரு பரந்து விரிந்த எல்லையற்ற வானம் நீங்கள் சிறகுகள் விரிப்பதற்கே காத்திருக்கிறது என்பதை நீங்கள் பல நேரம் அறிந்திருந்தாலும், நீங்கள் மாறநினைக்கும் போது படபடப்பும் பயமும் பதட்டமும் உங்களுக்கு ஏற்பட்டு நீங்கள் மாற முடியாமல், இந்த சூழல்மாறி விடாதா என தவிப்பதற்கு முதன்மையான க ா ர ண ம் உ ங்க ளு க் கு ள் இரு க் கு ம்

2  •|29

பாதுகாப்பு மெக்கானிஸம் Homeostasis. மாறிவரும் இயற்கை சூழலுக்கேற்ப மனிதன் முழுமையாக மாறி விடக்கூடாது என்பதாக உங்கள் ஜீனில் இருக்கும் இந்த Homeostsis எந்த ஒரு மாற்றத்தை நீங்கள் எடுக்கும் போதும் உங்களுக்குள் எச்சரிக்கை மணி அடிக்கும். உங்கள் மனசு உடனே அலர்ட்டாகி மாற்றத்துக்கு எதிராக போராடத்தயாராகி விடும். இந்த ஹோமியோஸ்டேஸிஸ் உங்களுக்கு மாற்றம் எவ்வளவு முன்னேற்றத்தை தரும். அது எத்தனை வாய்ப்புகளை கொண்டு வரலாம், அது நல்லதா கெட்டதா என்று எதையும் அலசி ஆராயமலேயே எல்லா மாற்றத்திற்கும் தடைபோடும். உங்களுக்கு பழக்கமான விஷயங்கள் தான் சரி என்னும் எண்ணத்தை மனதிற்கு கொடுக்கும். அதை விட்டு வெளியில் வர மனம் மறுக்கும். ஒருவிதமான பயம் மனதில் ஏற்படும். இவை அனைத்திற்கும் ‘நாம் நமது Comfort Zone க்குள் பாதுகாப்பாக இருந்து கொள்வோம், தெரியாத தேவதையை விட தெரிந்த பிசாசே மேல்’ என்று நினைக்கும் பாதுகாப்பு உணர்வுதான் காரணம். உண்மையில் இந்த ஹோமியோ ஸ்டேஸிஸ் தரும் எமோஷனலான உணர் வுகள் வேண்டுவது, உங்கள் மூளை தரும் லாஜிக்கான பதிலும் உங்களுடைய விழிப்புணர்ச்சியும் மட்டுமே. நீங்கள் மாற்றத்திற்கு தயார் என்று அறியும் போது உங்களுக்குள் ஹோமியோஸ்டேஸிஸ் ஏற்படுத்தும் ஃபிஸியலாஜிக்கல் மாற்றம் உங்களைநீங்கள் வேண்டும் மாற்றத்திற்கு தயார் செய்து விடும்.
உதாரணமாக, நீ உன் comfort zone ல் இருந்து வெளிவரப் போகிறாயா என ஹோமியோஸ்டேஸிஸ் உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கும்போது அது comfort zone அல்ல உண்மையில் Habit Zone தான் என்று விழிப்புணர்ச்சி தர சொல்கிறது மனஇயல்.
ஒரு விஷயம் உங்க ளு க் கு பழக்கமாகி இருப்பதால் மட்டுமே அதை செய்வது உங்களுக்கு சுலபமாகவும் அதை விட்டும் மாறுவது உங்களுக்கு கடினமானதாகவும் இருக்கிறது. உங்கள்

மூளையில் இருக்கும் ‘neural motorways’ பழகிய விஷயங்களை சுலபமாக்கிதருவது டன்நீங்கள் விரும்பி செய்யக் கூடிய புதிய மாற்றங்களையும் சுலபமாக்கிதந்து விடும். கடல்வாழ் மீன்களில் தனக்கென பிரத்யேக வேல்யு வைத்திருக்கும் lobs-ter ரை பலரும் பார்த்திருப்பீர்கள். மிக மென்மையான அந்த மீனை சுற்றி பாதுகாப்பாக மிக கடினமான shell இருக்கும். தான்மென்மையாக இருந்தாலும் தன் னை சுற்றி இருக்கும் ஷெல்லின் பாதுகாப்பில் லாஃப்ஸ்டரும் comfor-table ஆக உலாவரும். ஆனால் வளரும்

30|• 2

மறையாக இதை இனி செய்யக் கூடாது என்பதாக சொல்கிறீர்களா என்று கவனி யுங்கள். things that resist will persist இனிமேல் நான் இதை செய்யக் கூடாது என்று நீங்கள் எதிர்மறையாக நினைத்து, நீ இதை செய்யாதே என்று உங்கள் மனதிடம் Impose பண்ணும்போது உங்கள் neurological system அந்த அழுத்தம் தாங்க முடியாமல் அதற்கு எதிராக செயல்படும். உதாரணமாக, அலுவலகத்திலோ அல்லது வீட்டிலோ உங்களை convince பண் ணாமல் compel பண்ணி எதையாவது செய்ய சொல்லும்போது உங்களுக்கு அதை செய்வது கடினமாக இருக்கும் அதே நேரம் உங்களிடம் அதை convincing காக சொல்லும் போது அது உங்களுக்கு இலகுவாக இருக்கும்.
உங்களால் ஒன்றிலிருந்து மற்றொன் றிற்கு எளிதாக மாற முடியாததற்கு இன் னொரு முதன்மையான காரணம் மாறக் கூடிய ஒன்றின் நன்மைகள் உங்களுக்கு சரியாகத் தெரியாமல் இருக்கும் போது. அந்த unknown fear இப்பொழுது இருப்பதை விட எதுவும் பெரிய பிரச்னை புதிய மாற்றத்தில் இருந்துவிடுமோ, அதற்கு இதையே சமாளித்துக் கொண்டு இருந்து விடலாமே என்று நினைப்பதுதான். அட்லீஸ்ட் இதில் உள்ள சங்கடங்கள் பழகி விட்டது என்று நினைத்துக் கொள்கிறீர்கள். அது முழுமையான மனதோடு உங்களை மாறவிடாமல் தடுக்கிறது. அதனால்தான் உங்களுக்குள் மாறவும் வேண்டும் ஆனால் மாறவும் முடியவில்லையே என்கிற மன அழுத்தத்தை ஏற்படுத்திமகிழ்ச்சியற்று தவிக்க செய்கிறது. எந்த ஒரு விஷயமும் உறுத்தலாக இருக்கும்போது இது மாற வேண்டிய அல்லது மாற்ற வேண்டிய ஒன்று என்று நீங்கள் புரிந்து கொள்ளும்போது மீண்டும் லாப்ஸ்டரைநினைத்துக் கொள்ளுங்கள். லாப்ஸ்டரின் ஓடு போல நாமும் வளர வளர நமது Comfort Zone ம் புதியதாக வடிவமைக்கப் படும் என்பதை மட்டும் நமது ஆழ்மனதில் விதைத்து விட்டால் எந்த மாற்றமும் நமக்கு மகிழ்ச்சி தரக் கூடிய முன்னேற்றமாகவே அமையும்.
n

தன்மை வாய்ந்த லாஃப்ஸ்டர் கொஞ்சம் வளர ஆரம்பித்த உடனே கடினமான ஷெல்லை தாண்டி வளர முடியாமல் திணறத் தொடங்கி விடும். உறுத்தும் அந்த சூழலுக்கு பழகிக் கொண்டு தன்னை சுருக்கி வாழ நினைக்காத லாப்ஸ்டர் உடனே பாறைக்கடியில் ஒதுங்கி மற்ற மீன்கள் தன்னை நெருங்க முடியாதவாறு தற்காத்துக் கொண்டு தன்னை உறுத்தும் ஷெல்லை உடைத்துக்கொண்டு வளரத் தொடங்கி விடும். ஓர் குறிப்பிட்ட அளவு வளர்ந்த உடன் புதிய ஷெல் அதன் மேல் மீண்டும் உருவாகும். இதுவும் சில நாட்களில் உருத்த தொடங்க லாஃப்ஸ்டர்க்கு தான் வளர்கிற�ோம் இது வரை தன்னை comfor-table லாக வைத்திருந்த ஷெல்லை உடைக்க வேண்டிய தருணம் வந்து விட்டது என்பது பிடிபட மீண்டும் பாறைக்கடியில் போய் மீண்டும் தன்னுடைய ஷெல்லை உடைத்து மீண்டும் வளரத் தொடங்கி விடும். இதுவே சூழல் மாறவேண்டுமேன எந்த முயற்சியும் எடுக்காமல், தனது Comfort Zone க்குள்ளேயே இருக்க லாப்ஸ்டர் நினைத்திருந்தால் எந்த வளர்ச்சியுமில்லாமல் உறுத்தும் ஷெல்லோடு தனக்கென எந்த ஒரு பிரத்யேக வேல்யுமில்லாமலே வாழ்ந்து முடிந்திருக்கும்.
உங்களால் ஒன்றைசெய்ய முடியாது என்பதும் இது இப்படித் தான் என்பதும் ஒரு learned belief தான். அதை உங்கள் சூழலுக்கேற்ப, காலத்திற்கேற்ப update செய்து கொண்டு, மாற்றத்தை அறிவின் வளர்ச்சி என்று எடுத்துக் கொள்ளும் போது மாறுவது இயல்பாகிறது. எப்படி அதற்கு நான்பழகினேனோ, அதே போல் இதற்கும் பழகிக் கொள்ள முடியும் என்று நினைக்கும்போது, மாற்றத்தை எளிதில் கொண்டு வந்து விடலாம். மாற்றத்தை உண்மையில் விரும்பு பவர்களுக்கு மாறுவதற்கு ஒரு நொடி போதும். அது உங்கள் எண்ணங்களை சார்ந்தது என்கிறது ஆழ்மனஇயல். நீங்கள் உங்கள் மனசிடம் convincing காக நேர்மறையாக, ஒன்றை செய்ய வேண்டும் என்றும், ஏன் அதை செய்ய வேண்டும் என்றும் சொல்கிறீர்களா அல்லது எதிர்

2  • |31


ஒப்பனைகள் பூணாத புன்னகை ஓரவஞ்சனைநினையாத உள்ளம் உயிருக்குள் உணர்வாய் காதல் உதட்டளவு உறவாடாத உறவுகள்

அறிவுத் தாகம் தீர்க்கும் கல்வி ஆனந்தத் தேன்கூடாய் குடும்பம் சிந்தனை ஊற்றெடுக்க
சிறந்த புத்தகம்
படைப்புகள் பரிணமிக்க கலைக்கூடங்கள்

ஆழி சூழ்ந்தபோதும்
தளராத நம்பிக்கை
ஆவி ச�ோர்ந்து அமரும் போது அணைத்து ஆறுதல் கூறும் நட்பு அவலம் நேரும் போது
தட்டிக் கேட்கும் வல்லமை அன்னைத் தமிழை நாளும் பயில தமிழாலயம்

சுயநலமில்லாத அரசியல் சூழ்ச்சிகள் சூழாத சமூகநிலை ஆணவமில்லாமல் அன்பு பாராட்டும் அண்டைநாடுகள்
இனம்,மொழி,நாடு கடந்த
மனித ஒற்றுமை
தன்மானத்தோடு போராடி உதிரத்தால் உணர்வு விதையிட்ட
எம் தமிழ் உறவுகளுக்கு தாமதமில்லாத தாயக உரிமை

வறுமையை ஒழிக்கும்
வள்ளல் தன்மை
தேசத்தின் உயிர்நாடிகளாம் நதிநீர் இணைப்பு
தெய்வீகம் காணும்
தெளிந்தநல்லறிவு

தரணி முழுவதும் நிறையும் தனிமனித ஒழுக்கம்

இத்தனையும் தாண்டி
இன்னமும் நீள்கிறது
நல்லதோர் பட்டியல்
நாளும் நாளும்
வாழ்க்கைசாலையில்நின்று யாசகம் கேட்கிறேன்...
வரம் ஒன்று தந்துவிடு
தமிழன்னையே...!!!

-   மணலூர்பேட்டை

32|• 2

கூழாங்கல்
l

நீர்நகங்கள் கிள்ளிவைத்த மலையின் பிஞ்சு நெடுவயதின் தலைதோற்கும் வழுக்கைப் பாதை! சீர்நதியின் உருட்டலுக்குப் பயந்து ஆழச் சிறையமர்ந்த குகைக்கதவு! காலத் தேரின் வேர்ச்சொல்லாய்த் தேன்மெழுகும் அழகின் கூடு! விரல்ரேகை எழுதிவைத்த அனுப வத்தின் தேர்த்தடங்கள்! மலைக்கரடு முரடி ழந்து தெளிநீரில் முகம்காட்டும் கூழாங் கற்கள்!
l

கல்நீச்சல் பழகவந்த அருவிப் பாறை! கரையொதுங்கிக் கிடக்கின்றநதியின் முட்டை! ச�ொல்வீச்சில்சிக்காத பருக்கைச் ச�ோறு! சுடரறிவை அடைகாக்கும் ஞானக் கூரு! சில்லுகளை உதிர்த்தெழுந்தசிலையின் நுட்பம்! சிற்பியுளி இல்லாமல் செய்தசிற்பம்! வெல்லுகின்றகலைவடிவம்!ஆனால் ஏனோ வெட்டியாகக் கிடக்கிறது கூழாங் கல்லாய்!
l

மலையுடைத்த வெடிமருந்து மேகப் பஞ்சு மணித்துகளாய்க் கட்டிவைத்த மணலின் கோட்டை! அலைநாவில் புரண்டெழுந்த தீப்பிழம்பின் அடிநாளைக் கீழடியாய் நதியைக் காட்டும் விலையில்லா வரலாறு! நதியுள் ளங்கை! விருந்துவர வேற்பதிலே முந்திநின்று தலைகாட்டும் நதியொன்றாய் நம்வீட் டுக்குள்! தலைசுமப்பீர்! கூழாங்கல்நதியின் எச்சம்!
l

துரைவசந்தராசன்

2  •|33

மிஸ்டர் விக்னேஷ் உங்களுக்கு
என்ன பிரச்சனைன்னு தெரியும். நீங்கநல்ல உணவை சாப்பிட்டு, மருந்து மாத்திரை ஒழுங்கா சாப்பிட்டாலும் கொஞ்ச காலத் துக்கு தான் உங்களாலே நல்லா வாழ முடியும், இப்படி இருக்கிற சூழ்நிலையில தினமும் மருந்து, மாத்திரை ஒழுங்கா சாப்பிடாம அளவுக்கதிகமா ஒரு நாளைக்கு இருபதுக்கு மேல காபி குடிக்குறீங்களே? உங்களுக்கே நல்லா இருக்கா? உங்களுக்கு வயிற்றுப்புற்றுநோய் இருக்குன்னு ஏற்கனவே தெரிந்தும் கூட நீங்க செய்யுற காரியத்தால அதனோட விளைவுகள் உங்க உடலுக்கு அதிக வேதனையை தரலாம். உங்களோட ம ரண நாளை நீங்களே விரைவா தேடிக்கிடுறீங்க?
நீங்க என்ன சின்ன குழந்தையா ?? உங்க நிலைமையை புரிஞ்சு அதுக் கேத்தமாதிரி நடந்துக்கோங்க. எந்த நோயாளிக் கிட்டயும் மருத்துவர் நாங்க இதுமாதிரி பேசியது கிடையாது நோயாளி கூட வர்றவங்ககிட்ட தான் இது மாதிரியான விஷயங்களை எல்லாம் பக்குவமா சொல் வோம்.

இப்போதைக்கு உங்களுக்கு யாருமே இல்லை, நீங்க தனியா வந்த காரணத்தால தான் உங்ககிட்ட ஒரு பேமிலி டாக்டர் என்ற முறையில் ஒரு அக்கறையில சொல்லுறேன் .. மிஸ்டர் விக்னேஷ் உங்க உடல் நிலைமை நாளுக்கு நாள் மோசமா போய்க்கிட்டே இருக்கு, எப்படி தான் இவ்வளவு வலியை பொறுத்துக்கிட்டு மருந்து, மாத்திரை எடுத்துக்காம வாழுறீங் கன்னு எனக்கே ஆச்சர்யமா இருக்கு ... ப்ளீஸ் எவ்வ ளவு சீக்கி ர ம்

 
- •  

ஆஸ்பிட்டல்சேர முடியுமோசேர்ந்திடுங்க,
ஏன்னா எந்த நிமிசத்துலயும் உங்களுக்கு
எது வேணும்னாலும் நடக்கலாம் ...
மருத்துவர் குணசேகரன் பேசிக்
கொண்டிருக்கும் போதே விக்னேஷ் சேரில் இருந்து தரையை நோக்கி மயங்கி விழுந்தான் ..
விக்னேஷ்... விக்னேஷ்...என்னாச்சு? கண்ணு முழிச்சு பாருங்க...
அவன் கண் விழிப்பதற்கு பதிலாக கடந்த காலத்தில் மூழ்கத்தொடங்கினான். டே... ச்சி... காலங்காத்தால குளிச் சிட்டு வந்தவள இன்னொரு தடவ குளிக்க வச்சிட்டியே...
குளிக்கிறதுக்கு ஏண்டி பொண் டாட்டி அலுத்துகிற?
உனக்கு குளிக்க அலுப்பா இருந்தா, இந்த மாமன் குளிக்க வக்கிறேண்டி... ஏன் என்னை குளிக்கவைக்கிறேன் என்கிற பேர்ல திரும்ப, திரும்ப குளிக்க

34|• 2

வைக்கிறதுக்கா?
இந்த புருஷனோட ஆசையை
ஏண்டி நிராசையாக்கப் பார்க்கிற? ஆசையை நிறைவேத்தலாம் மாமு,
ஆனா உன் பேராசையை நிறைவேத்த நினைச்சாநான் வருஷா, வருஷம் முழுகாம தான் ஆவணும் ..
அடி கள்ளி, மாமனோட மைண்ட் திங்கிங்-கை அப்படியேகேட்ச் புடிச்சிட்டியே... சரி... சரி... அதெல்லாம் விடு, முதல்ல மாமனுக்கு ஒரு கிளாஸ் பில்டர் காபி போட்டு எடுத்திட்டு வா... ச்சி... இப்பதானே குடிச்ச, உனக்கு இன்னொரு தடவ கேட்குதா...
அட... ச்சீ... அந்த பில்டர் காபி கேட்கலைடி... உண்மையிலேயே ஒரு கிளாஸ் பில்டர் காபி போட்டு எடுத்திட்டு
வா.

பூங்கொடி... என்... பூவு... மாமனுக்கு சக்கரை தூக்கலா ரொம்ப ஸ்ட்ராங்கா காபி போட்டு சீக்கிரம் கொண்டு வா... சரிய்யா... சரிய்யா... கொண்டு வர்றேன்.
சில நிமிடங்களுக்கு பிறகு...
என்னடி சக்கரை தூக்க லா கேட்டேன்... ஆனா காபியில சக்கரை ஒரு பேருக்கு கூட இல்லை...

உளறாதய்யா, உனக்காக மூணு ஸ்பூன் சக்கரை போட்டேன், நீ பொய் சொன்னாலும் சொல்லுவ இரு ஒரு வாய் குடிச்சு பார்த்திட்டு சொல்லுறேன் அவள் ஒரு சிப் குடித்த அடுத்த வினாடி பில்டர் காபி வாசம் வீசும் பூங்கொடியின் இதழ் சுவைத்தான் விக்கி என்னும் விக்னேஷ்.
ச்சீ... நீ ரொம்ப மோசம்-ய்யா என்று உச்ச முத்தம் பெற்ற அடுத்த நொடி அவனைதள்ளி விட்டு சென்றாள். விக்னேஷுக்கு பில்டர் காபியை பிடிப்பதற்கு இன்னொரு காரணம் காபி முழுதும் பூங்கொடியின் வாசம் வீசி கொண்டே இருக்கும்.
ஊரில் காதலைபற்றி ஒரு பழமொழி உண்டு ஆண் சரியா இருந்தா பொண்ணு சரியா இருக்க மாட்டா, பொண்ணு சரியா இருந்தா ஆண் சரியா இருக்க மாட்டான், ரெண்டு பேரும் சரியா இருந்தா அபூர்வம், அந்த அபூர்வங்கள் எல்லாம் நடக்கும் போது சில நேரம் அந்த இரக்கம் இல்லாத கடவுளுக்கு பிடிக்காமல் போகும்.
ஊர் கண்பட்ட விக்கியின் காதல் திருமணத்தில் அந்த கடவுளும் கண் வைத்து விட்டார். பிரசவத்துக்காக தன் அம்மா வீடு சென்ற பூங்கொடி பிரசவத்தின் போது ஜன்னி வந்து இறந்து விட்டாள். அன்று உடைந்து போன விக்கி இதுவரை மனதளவிலும், உடலளவிலும் இருந்து மீளவே இல்லை.
விக்னேஷ்... விக்னேஷ்...
ஒரு பெரு மூச்சுக்கு பிறகு தனது கடந்த கால நினைவுகளிலிருந்து திரும்ப வந்தான்.
வாழ்க்கையில் பட்ட வலிகளுக்கு உள்ளுக்குள் அழுதாலும் வெளியே அதை காட்டாமல் இருந்தவன், முதன் முதலாய் வயிற்றை பிடித்து கொண்டு அழுதான். ஐயோ... அம்மா... வலிக்குதே...
டே கடவுளே... என்னை இப்படி கத்த வச்சு, கதற வச்சு, அழ வச்சு, துடிக்க வச்சு சித்திரவதை செய்யுறதுக்கு பதிலா ஒரேயடியா கொன்னுடுடா ...
அவன் வலியால் துடிப்பதைபார்த்து சிகிச்சை அளிக்க வந்த மருத்துவருக்கும்

இலைகளுக்குள் பிரிவு
காட்டிக் கொள்வதேயில்லை நிழலில்

- மை கிறுக்கல் மாதவன்

2  •|35

கண் கலங்கியது... வேறு வழியின்றி அவனுக்கு மயக்கமருந்து கொடுக்கப் பட்டது ...
ஒரு வார காலம் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் அவனது உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை அவன் மரண தினங்களை விரல் விட்டு எண்ணத் தொடங்கியிருந்தான் .
அவன் மரண தினம் குறிக்கப் பட்டு விட்டது. ஆனால் என்று தான் அவன் மரணம் என்பது அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்.

மிஸ்டர்... விக்னேஷ்... உங்க டிரீட் மென்ட்க்கு ஆக கூடிய செலவு உங்க இன்சூரன்ஸ் கம்பெனிக்கிட்ட இருந்து வந்திரும். நீங்க இன்னும் எத்தனை நாள் வேணும்னாலும் டிரீட்மென்ட் செஞ்சுக்கலாம், மாத்திரை ஒழுங்கா எடுக்கிறதா இருந்தா உங்க வீட்டுக்கு கூடபோகலாம்.
க ொஞ்ச நாளைக்கு பழச்சாறு, கஞ்சி மட்டும் சாப்பிடுங்க...
சரிங்க டாக்டர் ..

நான் வீட்டுக்கே போறேன் டாக்டர்... ஒழுங்கா மருந்து மாத்திரை எடுத்துக்கிட்டு நீங்கசொன்ன உணவையே சாப்பிடுறேன்.
அப்ப சரி. நீங்க இன்னைக்கே டிஸ்டார்ஜ் ஆகிக்கோங்க.
அன்று மாலை
மருத்துவமனை விட்டு வெளியே வந்தவன் கண்ணில், கும்பகோணத்து ஒரிஜினல் டிகிரி காபி கடை கண்ணில் பட்டது.
நேரே கடைக்கு சென்றவன் ஒரு பில்டர் காபி ஆர்டர் செய்தான், கையில் காபி வந்தவுடன் ஒரு சிப் அருந்தினான். பூங்கொடியின் இதழ் வாசனை அந்த காபியின் ஒவ்வொரு மிடறு, மிடறாய் துளியிலும் நிறைந்து இருந்தது. இன்னும்... இன்னும் என்று கடைசி துளி மிடறுவையும் சுவைக்க எண்ணினான்.

அப்போது இதுவரை சிலுவைகளை சுமந்து கொண்டிருந்த அவனது உயிர் பூங்கொடியிடம் சென்றிருந்தது. அவன் க ண்க ள் ம ட்டும் மூ டாமல் பில்டர் காபியையேபார்த்து கொண்டிருந்தது. n

சாலைய�ோரப் பூக்கள்

சாலையோரப் பூக்களின் கண்ணீர் கண்டு
வானமும் வாய்விட்டு
அழுகிறது மழையாய்
வண்ணப் பூக்கள் வாழ
இடமின்றித் தவிக்கையில்...

வறுமையின் வாட்டம்
தெரிகிறது வயிற்றினில் பொறுமையின் உச்சம்
புரிகிறது வெயிலினில்
மழைக்கும் , பனிக்கும் உன் மீது அவ்வளவு காதலோ
சுட்டெரிக்கும் சூரியனும்
கொட்டும் மழையும் உன்னை வதைக்கும் போதும்
புன்னகை பூக்களை உதிர்ப்பதனால்....

மனிதம் மறந்த மனிதர்கள்
உன் பசியின் கொடுமையை மறந்தனரோ..!
பட்டாம் பூச்சியாய்
பவணிவரவேண்டிய பாலர் நீங்கள் பாதையோரமாய் சிறகொடிந்து கிடப்பது ஏனோ..

கந்தல் ஆடையும்
கரைபடிந்த முகமும்
அழுக்காய்த் தெரியவில்லை கொஞ்சம் அழகாய்த் தான் தெரிகிறது கரைபடிந்த உள்ளங்களோடு ஒப்பிடுகையில்....

ரஸ்மிலா சமீன்
இலங்கை

நகங்கடித்துத் துப்பினாலே
நான்சேத மாவேன்
அகங்கடித்துத் துப்புகிறாய்
அன்பே - சுகம்வடிக்க
மெத்தைக் களத்தினில்
மெல்லமெல்ல பேசுவோம்
வித்தை விருந்தில்
விடு
.
வாசமலர் காத்திருக்கு
வண்ணவிழி பூத்திருக்கு
பேசுமொழி இங்கெதற்கு?
பெண்ணணங்கே - காசுபணம்
தேவையில்லை காதலுள்ளம்
தேயவில்லை நானுறங்கப்
பாவைமடி பாடலடி
பாடு

விசு. இம்மானுவேல், பெங்களூரு
.
ஆசை முகமே!
அருகினில் வாராயோ!
ஓசைப் படாமலுன்
ஒய்யார - மீசைக்குள்
மூழ்கித் திளைத்துநானும்
முத்தெடுக்க வேண்டுமே!
வீழ்த்தும் விழியிலேன்
வீம்பு?
.
கொஞ்சிடவா கொஞ்சநேரம்
கெஞ்சுகிறேன் உற்றவனே!
மிஞ்சுதெழில் விஞ்சுகிற
மஞ்சத்தில்! - வஞ்சித்தே
தஞ்ச மடையாமல்
துஞ்சுகிறாய்! அஞ்சுகிறாய்!
நெஞ்சத்தில் ஏனடா
நஞ்சு?

வானதி சந்திரசேகரன்
.
என்னவளே முத்தம்மா
என்னவெனச் சொல்லம்மா!
என்னதான் உன்னில்
பிரச்சனை? - உன்னைவிட்டா
என்னவுண்டு மாம
னெனக்கு மயிலேநீ
உண்ணம்மா வாய்ச்சோறு
வந்து.
.
சண்டையிலே பாவி
வயிர இழுக்கலாமா?
மண்டையில இல்ல
மசலாவும்! -கெண்டைவிழி
கண்ணிரண்டில் கண்டேன்
பசிமயக்கம், கண்ணேநீ
உண்டிடு சோற்றை
விரைந்து.

கு.லோகநாதன், மதுரை
.
ஆசையாய் உந்தன்கண்
அன்புடனே நோக்கியக்கால்
தோசையது தீய
துலங்கவில்லை - ஓசையாய்நீ
ஏசையிலே நான்நின்றேன்
ஏதுமுனைச் சொல்லாது
தோசையா... நானா...
துணி.
.
துணிவெனக் கில்லையே
துண்டாக்கு துன்சொல்
பணிவுடன் நானே
பணிந்தேன் - அணியும்
அணிகளாம் அன்பென்
றறிவாய் அதனால்
தணித்திடு கோபத்
தணல்.

கு. கமலசரஸ்வதி
.
அத்தைமகட் கென்னாம்
அழிச்சாட்டம்; ஆயிழையே
ஒத்தையாய் நான்கிடந்(து)
ஒல்கவோ? - நித்திரையுந்
தான்தொலைய வானேன்;
தவிக்கவிடு கின்றாயென்
பான்மைகெட வாவதும்
பார்!
.

எட்டிப்போ கின்றாயே
ஏதுநான் செய்தபிழை
முட்டறுக்க லாகாதோ
முல்லையே - மட்டின்றி
நம்மைநாம் ஒற்றி
நகலெடுப் போம்வாடி
இம்மையிலே தாமிதற்
கீடு

பொன் இனியன்

.

என்னதான் சொல்லிவிட்டேன்
ஏனிந்த கோபமோ
சொன்னதால் இக்குறையோ
சுந்தரியே - நன்னாளில்
மன்னனாம் என்னிடம்
மாசது கண்டாயோ
இன்பமும் வேண்ட
இணங்கு.

.

கொல்லுமோ நின்சினம்
கொள்ளாத் தகைமையாய்
வெல்லுமோ இன்றிங்கு
வேந்தனை - நல்லறம்
சொல்லிடும் நற்புலவர்
சொல்லறம் கேட்டிங்கு
நில்லடி பெண்ணே
நிலைத்து

கவித்தென்றல் சௌ. நாகநாதன்

.

போதைத் தலைக்கேறி
போகின்ற காளையா?
பாதை தடுமாறிப்
பாய்ந்துவிழும் - பேதையா?
சீதையாய் நீயெந்தென்
சிந்தைக்குள் நிற்கையில்
கோதையர்பின் போவேனா
கூறு?!

.

நாட்பது வந்ததுமே
நாய்போல ஆனேனா?
கேட்பார் உரையெல்லாம்
கேட்டென்னைச்- சாட்டாதே
எம்பது வந்தாலும்
இப்படித்தான் என்றைக்கும்
உம்பாதம் தாங்கும்
உடல்!

செ. இராசா

.

சொல்ல மறந்தவைகள்
சொல்லத் தவிக்கிறாய்
மெல்லெனவே நானும்
சிரிக்கின்றேன் - சொல்கின்ற
சொற்களெல்லாம் காதலில்
சொல்லொழுகும் என்னன்பே
கற்றுத் தருவேன்
களித்து

.

கள்ளி மனத்தினையே
வெல்ல நினைக்கின்றேன்
அள்ளிடவே மெல்ல
முயல்கின்றேன் வள்ளியென்
பக்கத்தில் வந்துவிடு
என்றேனே அன்பாய்நீ
துக்கம் விடுவாய்
துணிந்து

வா.சண்முகம்

.

மாமன் மகள்தான்
மனசாற்றப் பேசினா(ள்)
காமனா வந்தான்
கணைகொண்டு? - பூமணம்
வீசும்உன் பொன்வாய்
வறண்டின்று பொல்லாங்கு
பேசுதே ஏனிப்
பிணக்கு?

.

ஊரெல்லாந் தேடி
உனைக்கண்ட பின்னாலே
வேறொருத்தி எண்ணம்
விழையுமா? - சீரிறுத்தி
வந்தஎன் செல்வமே
வாய்திறந்து பேசடி
சிந்துகவி பாடலாம்
சேர்ந்து.

Sangarapandian g

.

கண்ணே கனியமுதே
காதலுற்ற என்னவளே
உன்னைநான் கூடுகையில்
ஏனடி - என்னைநீ
கண்ணாரக் காணல்
கனிவின்றி சீறுகிறாய்
என்ன இடைநடைக்
கூறு!

.

கூறாநீ செல்லுங்கால்
கூறாகு மென்னிதயம்
வேறாக யெண்ணா
விரைந்துவா - மாறாது
ஆறாக நானும்
அதிலோடும் நீராய்நீ
சீராக வாழ்வோம்
சிறந்து!

பொன்மணிதாசன்

.

தென்றலைத்தான் தூதுவிட்டுத்
தேடும் வெளியிலில்லை;
மன்றத்துள் வந்ததன்பின்
மாற்றமேன்? - அன்பிலுயர்
மங்கை எனைவெறுத்தல்
மாண்பல்ல; நான்பரிதி
பங்கையம் நீயன்றோ
பார்...!

.

பார்த்தால் பசிதீரும்;
பன்மலர்ச் சோலையுனைச்
சேர்த்தால் உயிர்செழிக்கும்;
சித்திரமே - மூர்ச்சையாய்
நான்சரிந்தால் தூற்றுமிந்த
நானிலத்தார் போற்றிடவே
தேன்தந் திதழாலே
தேற்று....!

ஜ.க.நாகப்பன்

.

வாளொன்று கொண்டென்றன்
வன்னெஞ்சைக் கீறிப்பார்!
ஆளென் றுனையன்றி
ஆருமிலை! நாளொன்று
வாழாத ஊடலினால்
வாட்டாதே காதலியே
பாழாகும் நேரப்
பணம்!

.

கெஞ்சிப் பணிந்துன்கால்
கீழேயே வீழ்ந்தபினும்
கொஞ்சம் மனமிரங்கக்
கூடாதோ? கொஞ்சாத
நாளெல்லாம் வீணென்றோர்
நற்புலவர் கூறியுளார்!
தோளெனதைச் சேர்போம்
துயர்!

சுந்தர ராசன்

,

சொல்லாதச் சொல்லுக்காய்
சோகமுடன் நீயிருந்தால்
இல்லத்தில் தங்கிடுமா
இன்பங்கள் - சொல்கிளியே
பொல்லாப்புக் கொண்டாலே
போகுமிடம் என்னாகும்
அல்லல் பெருக
அழிவு.

.

பழிவந்து சேருமுன்னே
பாவைநீ பேச
உளிபோன்ற கண்கள்
உணர்த்தும் - விழியால்
அழித்துவிடு கோபத்தின்
ஆட்டம் மனத்தில்
கழிந்தோடி கூட
களிப்பு.

சேந்தன்குடிச் செந்தமிழாழன், துக்கோட்டை.

.

பனியுருகி யோடிவந்த
பாலாற்றில் நித்தம்
தனிமையில் நீந்தித்
தவழ்ந்தாய் - கனிந்தே
இனித்த நறுங்கனியாய்(ய்)
யென்றும் சுவைத்துத்
துனித்தலே அன்பின்
சுகம்.

.

மேகம் பொழிந்து
மிளிர்கின்ற சோலையில்
மோகங் கலையா
முழுமதியே - வேகமாய்
சோகந் தெளிந்திடச்
சொல்லழகா(ல்) லுன்விழியைத்
தாகந் தணித்திடத்
தா

கவிஞர் வீக பொன்னையா

.

வெண்பாவில் பூத்தவளே
வேண்டாமே வீண்கோபம்
பெண்பாவாய் என்ன
பிழைசெய்தேன் - நண்பாகேள்
என்னைப் பிடிக்குமா
என்றேனா என்சொன்னாய்
என்னையும் என்றாயே
ஏன்?

.

ஊடல்வெண்பா

அவர் மொழி

அய்யோ அதிலென்ன
குற்றமோ அம்மாடி
செய்ய விழிசிவந்த
சீற்றமேன் - பொய்யனே
என்னையும் என்றாரே
எத்தனைபே ரோடெண்ணி
என்னையும் சேர்த்தாயோ
ஈங்கு.
.
அய்யய்யோ இல்லை
அடியேன் வாய்தவறி
மொய்மொய்யென் றேதோ
முனகினேன் மெய்ம்மையடி
சீற்றம் குறையடிஎன்
செல்வமே வாவாவா
நேற்றுப் போல் அன்பால்
நிறை.
.
கவிச்சிகரம் அன்புவல்லி தங்கவேலன்

வக்கனையா ஆக்கிவெச்சு
வட்டிலிலே போட்டபின்னே
எக்காளம் பேசிதினம்
ஏசுறீக - பக்கத்தில்
நானிருக்கப் பஞ்சணையும்
நொந்திருக்க துக்கத்தில்
மேனியிங்கு மெல்ல
மெலிந்து
.
மெலிந்துநான் போக
மெனக்கெடவு மில்லை
மலிந்துதான் போனேனா
மச்சா - வலிக்குதே
கோபத்தில் கொட்டும்
கொடுந்தேள் வசைகளுமே
ஞாபகத்தில் இல்லையோ
நான்..

கவிதா சீனிவாசன்
.
என்னவரே உங்களுக்கு
ஏனிந்த சீண்டுதலோ
மன்மதன் என்று
மனத்திற்குள் - அன்பொழுக
என்றனை வம்பிழுக்க
என்னிதயம் வாடாதோ
நின்றுகொஞ்சம் பார்த்தல்
நிலைப்பு.
.
சுட்டும் விழியாளே
சூழ்கின்ற மோகத்தால்
தொட்டு விளையாடத்
தொல்லுலகில் - எட்டுகின்றாய்
விட்டுவிடு வேனா
விலகினால் நானுந்தான்
திட்டுகின்ற வாயினால்
தீண்டு .

சரஸ்வதி பாஸ்கரன்
.
அவள்:

கல்யாணம் கட்டிவந்தக்
காலமுதல் நானேதான்
எல்லாப் பொழுதுமாய்
வேலைசெய்ய - உல்லாச
எண்ணத்தில் உட்கார்ந்
தொன்று முதவவில்லை
கண்ணசைத்து காமம்
புரிந்து!
.
அவன்:

எல்லாமும் நீசெய்ய
என்னையும் நீசெய்தாய்
பொல்லாப்பா யெனைப்பார்கா
பொன்னான - இல்லாளே
அள்ளியுனை இன்புறுவேன்
அத்தனைக்கும் நீயாக
துள்ளும் மனத்துள்
துதி!

கவிமாமணி கவின்முருகு
.
உன்னை அறிவேன்நான்
என்னை அறிவாய்நீ
இன்னுமேன் ஊடலோ
இன்னுயிரே - என்றும்
இரவின் குளிருக்(கு)
இதமானப் போர்வை
ஒருவர்க்கு மற்றொருவர்
தான்
.
பேசா(து) இருப்பதுபோல்
பாசாங்குப் பேசுகிறாய்
பேசாமல் பேசிவிட்டே
போயேன்டீ - யோசிநீ
என்பசிக்கு உன்வயிறு
ஏங்காதா? என்வயிறு
உன்பசிக்கும் உண்ணும்
உணர்

ஞால ரவிச்சந்திரன்

.

கட்டிக் கரும்பே
 கனிரசமே என்னைவிட்டு
எட்டியே நிற்பதுவும்
 ஏனோசொல் - ஒட்டி
உறவாட கள்முத்தம்
 ஊட்ட வருவாய்
நறவிலூறும் வேர்ப்பலா
 நீ

.

நீயும் உனைவிரும்பும்
 நானும் கலந்தாலே
தாயும்நல் தந்தையும்
 ஆகிடுவோம் - பாயை
விரித்திடுவேன் பால்பழம்
 வைத்திடுவேன் நீயும்
சரியென்று சொல்வாய்
 சகி .

கவிஞர் அ முத்துசாமி

.

காலை வணக்கம்
 கணக்காகச் சொல்லிவிட்டுப்
பாலைப்போல் பல்லிளிக்கும்
 பாதகியார்? - மாலைக்குள்
நீயாகச் சொல்லாயேல்
 நேரேயான் சென்றவளைப்
பாயாய்ச் சுருட்டிடுவேன்
 பார்

.

அவளா இளித்தாள்
 அதுவுமோர் பொம்மை
தவறாக விட்டிடாதே
 சாபம்! - எவரேனும்
இப்படியோர் காரணத்தை
 ஏற்றிக் கணவனைத்
தப்பாகப் பேசுவரோ
 சாற்று?

சேலம்.பத்மினி கேசவகுமார்.

.

கற்பிழந்த தன்னிணையை
 கண்ணகியே மன்னித்தாள்!
குற்றமில்லா எந்தன்
 குறையென்ன? - கற்றவள்நீ
உற்றவளாய் ஆனபின்பே
 உன்னிதழில் முத்தமிட்டேன்
முற்றமென்ப தாலோ
 முறைப்பு!

.

மனைவி :

கணவன் :

முற்றம்வைத் திட்டமுத்தம்
 முள்ளாகிக் குத்தியதோ
உற்றதுணை யானயென்
 உத்தமியை - சுற்றமெல்லாம்
ஒற்றன்போல் நம்மை
 ஒளிந்துநின்று கண்டாலும்
வற்றாமல் முத்தமிடு
 வந்து!

பொதியன் செல்வம்

.

கண்ணஞ்சல் பட்டுன்னைக்
 காதலித்தேன் என்கடித
மின்னஞ்சல் உன்பெயரில்
 மீட்டுவைத்தேன்.. இன்றும்...!
கடவுச்சொல் யாரென்று
 கத்துகிறாய்..என்றும்
கடவுள்சொல் நீதான்
 எனக்கு..!

.

பண்டெழுதி மேலே
 பரண்கிடந்த அஞ்சலெல்லாம்
கண்டழுது தீப்போலும்
 காய்ச்சுகிறாய்..பெண்ணேயென்
ஆவியெல்லாம் உன்னுயிராய்
 ஆனதடி..! வீண்கடிதம்
போகியைப்போல் போட்டுப்
 பொசுக்கு.

வள்ளி முத்து

.

பாக்காடு போல்பேசிப்
 பாவங்கள் கண்காட்டி
சாக்காடு கொண்டிடவே
 சார்ந்திட்டாய் - தூக்கமின்றி
வேக்காடு நெஞ்சேற
 வேதனையில் வாடுகின்றேன்
பூக்காடே வாபக்கம்
 பூத்து !

.

கெண்டை பிறழ்கின்ற
 செவ்வரிக் கண்களிலே
வண்டை அனுப்பி
 வளைத்திட்டாய் - தண்மதியே
ஏக்கத்தில் வெந்துழலும்
 என்நிலையைப் போக்குதற்குப்
பூக்காடே வாபக்கம்
 பூத்து !

பாவலர் கருமலைத்தமிழாழன்.

பூக்காடே வாபக்கம் பூத்து

திட்டாதே கண்ணே!
திருவிழாக்குப் போகத்தான்
வட்டிக்குத் துட்டினை
வாங்கினேன் - மெட்டியுடன்
பட்டாடைக் கட்டிநீப்
பந்துமல்லிப் பூச்சூடி
இட்டமுடன் முத்தம்
இடு

.

இதழ்தேயத் திட்டினேன்
என்று வருந்தி
எதற்குப் புலம்புகிறாய்?
அன்பே! - நிதமுன்
விரலசைவின் ஆணைக்கு
வீழ்படிவேன் என்றும்:
கரச்சிறையில் வாயேன்
கனிந்து!

சு.வி.லட்சுமி

.

பொன்னே புதுமழையே
பொய்கைப்பூ தேனேயுன்
கன்னங்கள் பார்த்தே
கவியானேன் - என்னேதான்
காரணமோ ஏன்சினமோ
கண்பாராய் என்னாசைத்
தாரமே வந்தொன்று
தா!!

.

ஊடும் எழிலேயென்
ஊடகமே என்நேசம்
கூடும் உடலே
குளிர்நிலவே - தேடிநான்
கண்டெடுத்த காதலே
கற்கண்டே கள்ளூறும்
வெண்சங்கு நன்பூவே
விள்!!

கிருஷ்டினா அருள்மொழி

ஹைக்கூ

■

பெண்ணின் கல்வி
குடும்ப விளக்கை ஏற்றும்
வேலை வாய்ப்பு

■

பெண்ணின் முயற்சி
வெற்றி பெறத் தொடங்கும்
சுதந்திர சிந்தனை

■

பெண்ணின் பேச்சு
மிகவும் அழுத்தமாக இருக்கிறது
புதிய பாதை

■

பெண்ணின் ஆசை
பெரிய பதவியைக் கைப்பற்றும்
உயர்ந்தப் படிப்பு

■

பெண்ணின் துணிச்சல்
பாதுகாப்பு தருகிறது
தற்காப்பு கலை

■

இட ஒதுக்கீடு
நம்பிக்கை கொடுக்கிறது
பெண்ணுக்கு உயர்பதவி

■

பெண்ணுரிமை தேடல்
தொடர்ந்து நடக்கிறது
பெண்ணின் போராட்டம்

■

பாரதியின் கனவு
கைகூடி வருகிறது
புதுமைப் பெண்ணின் ஆசை

■

பெண்ணின் வளர்ச்சி
தெரிந்தும் தெரியாமலும் நடக்கிறது
பாலியல் வன்கொடுமை

■

பெண்ணின் திருமணம்
கேள்விக் குறியாக விளங்குகிறது
தனிமை வாழ்க்கை

கவிநிலா மோகன்

42|• 2

யாரையோசொல்வது போல் ஒருமையில் தான் எழுதவேண்டும்.

எ-காவெண்பா : --

மென்மலர்கள் சூடி
மெலிந்த இடையசைய இன்முகத்தில் பொங்கும் இதழ்நகைப்போ(டு) --
உன்முகத்தில்
இட்டுவரா குங்குமத்தில் இல்லா அழகுளதோ?
ஒட்டிவைத்தப்பொட்டில்
உனக்கு.
.

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...
அது நகைச்சுவையானாலும் ஏற்றுக்கொள்ளப்படும். உங்கள் மனம்சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்.....

தளர்வுகள் : -- தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்தைகளோ, அல்லது
வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளைதட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.
.

என்றும்தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் அமின்
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு

வெண்பாபோட்டி (பயணம்) 5

ஜாலியான போட்டி...

பிப்ரவரி 19 மார்ச் 06 வரை....
.

முழுமையாகப் படிக்கவும்...
.

இது மகளிர்தினத்தை முன்னிட்ட போட்டியாகும்....
ஆனால் வழக்கம்போல் மகளிரைப் போற்றி எழுதக் கூடாது.

தாய், அக்கா, தங்கை, தோழி, காதலி, மனைவி போன்று இன்னும் பலவாறாக பெண்களின் உறவு முறையைச் சொல்லலாம்....

எல்லாபெண்ணிடமும் ஏதோ ஒரு தவிர்க்க வேண்டிய குணம் கட்டாயமாக இருக்கும்.

உதாரணம் :- சிக்கனம் இல்லாமை, ஆதிக மேக்கப் போடுவது, குறைவான உடை அணிவது இன்னும் வேறு காரணங்கள் கூட இருக்கலாம்.

அதைச் சுட்டிக் காட்டி ஒரே ஒரு வெண்பாமட்டும் பாடவேண்டும் என்பதேபோட்டியின் விதியாகும்.

பொதுவாக ஒட்டுமொத்தப் பெண்களையும் சுட்டிக் காட்டி பன்மையில் வெண்பா எழுதக் கூடாது.

2  •|43

கர்நாடக மாநிலத்தில் இஸ்லாமியப் பெண் மாணவிகள் ஹிஜாப் அணிய தடை செய்யப்பட்டதை அடுத்து...

இப்போது வெடித்திருக்கும் ஆடை போராட்டம் அடிப்படை உரிமைக்கான அறப்போராட்டம் ஆகும்.

உன் மதம் பெரிதா என் மதம் பெரிதா எனும் மதப்போராட்டம் இல்லை

சமீபத்தில் கல்லூரிக்குள் கல்விக்
காக போகும் ஒரு பெண்ணை நூற்றுக் கணக்கான மூளை முதிர்ச்சி இல்லாத ஆண் கும்பல் முற்றிகையிட்டு “ஜெய் ஸ்ரீராம்” எனக் கொக்கறிக்க எந்த பயமும் கொள்ளாமல் சிங்கம் போல் சீறி அவள் நம்பும் கடவுளின் பெயரில் “அல்லாஹூ அக்பர்” என்றவள் கர்ச்சித்ததில் எந்தப் பிழையும் இல்லை.

அவள் வீரத்தைநாம் தலைவணங்க வேண்டுமே தவிர அவள் ஏன் அவள் நம்பும் மதத்தின் கடவுளை அந்த அபாய நேரத்தில் அழைத்து எதிர் முழக்கமிட்டாள் எனக் கேட்பது முட்டாள்தனம்.

ஒரு பெண் சுதந்திரமாக தன் சொந்த ஜனநாயக நாட்டில் தனக்கு சரி எனப்படும் உடையை அணிந்து கல்வி கற்க வெளியே வர இயலாத நிலைக்கு அவளைத்தள்ளிய நம் சமூகத்தை எண்ணி நாம் வெட்கப்படவேண்டுமேதவிர அவள் ஏன் அவள் கடவுளின் பெயரைச் சொல்லி தன்னைத் தாக்க வந்தவரை எதிர்த்து தன்னை தற்காத்துக் கொண்டாள் எனக் கேட்பது மூடத்தனம்

ஆனால் அந்த நிகழ்வை வைத்துக்

கொண்டு உன் கடவுள் பெரிதா என் கடவுள் பெரிதா எனும் வகையில் “ஜெய்ஸ்ரீராம்” என்றோ “அல்லாஹுஅக்பர்” என்றோ நாம் வலைதளங்கலில் முழங்கிக் கொண்டி ருப்பது ஏன்? அப்படி நாம் ஒருவரை ஒருவர் எதிர்த்து முழங்குவது மதவாதத்தை தூண்டும் அரசியல்வாதிகளுக்கு நாமே போடும் தீனியாகும்.

மனித உரிமை போராட்டத்தை மதப் போராட்டம் ஆக்க நாம் இடம் கொடுக்கக் கூடாது.

ய் முடியும் எனத் தெரியவில்லை அநீதிகள் யாருக்கு நடந்தாலும் மனிதம் தொலைக்காது மதங்கள் தாண்டி குரல் கொடுப்போம்.

பள்ளிகளில் உடை

ஏற்றத்தாழ்வு செய்கிறது என்பது பற்றிய திடீர் கவலை
கொள்பவர்கள் முதலில்
சாதியை அழிக்க
முயலுங்கள் அதற்கு
பிறகு சீருடை பற்றி
கவலை

கொள்ளலாம்.
n

 
 
 •  • 

வெண்பாவின் புனிதத்தைக் கெடுப்பது நானா...?

நண்பா எனவழைத்து
  நான்கேட்ட கேள்விக்குப்
பண்பாய் விரித்தார்
  படுத்துறங்க - வெண்பா
எனும்ஒன்றை நாளும்
  இவர்வாயால் கேட்க
இனும்ஒன்றைக் கேட்டேன்
  இனித்து.

தமிழ்நெஞ்சம் அமின்

ஏடி வரதராசன் ஆவேசப் பேட்டி

2  •|45

ஏடி வரதராசன் என்பது தங்கள் பெயரா? புனைப்பெயரா?
.

எனது முழு பெயர் வரதராஜப்பெருமாள்... அதைச் சுருக்கி அழைப்பதற்கு இலகுவாக வரதராசன் என வைத்துக் கொண்டேன். ஏடி என்பது… அத்தியூர் எனது ஊர். தியாகராஜன்தந்தை பெயர்.

நடக்கப் போகும் பேட்டியைப் பற்றியும், பேட்டி எடுக்கும் என்னைப் பற்றியும் ஒவ்வொரு வெண்பா பாடுங்களேன்...
.

பார்காணப் பாவல்

பலரிருந்தும் வெண்பாவின்
சீர்காணும் இந்தச்
சிறுபயலை - நேர்காண
ஆதவனின் கேள்வி
அதற்கென்னுள் தாயிறைவா பாதகமே இல்லா
பதில்.
.

பேட்டி எனும்பேரில்
பேசும் அமின்அவர்கள்
ஏட்டுலகில் பண்ணிற்(கு)
இறைவனாம் - நாட்டுக்குள்
ஏங்கும் கவிகள்
இவர்கரத்தைப் பற்றிவிட்டால்
தாங்கிப் பிடிப்பார்
தமிழ்.

தமிழில் பாவகைகள் நிறைய இருந்தாலும் வெண்பாவை மட்டும் தாங்கள் பிடித்துக் கொண்டது ஏனோ?

விருத்தம் என்றால் கம்பன்...
வெண்பா என்றால் புகழேந்தி...
அப்படி என்றால் இவர்களுக்கு வேறு பாவகைதெரியாது என்று பொருளல்ல...

இவர்களுக்கு இந்த வடிவம் பிடித்துப் போய் எளிமையாகக் கைவசப்படடு இருக்கலாம் அதனால் அதே வடிவத்தை அதிகபட்சமாக கையாண்டு இருக்கலாம்.

அதுபோலத்தான் எனக்கு நேரிசை வெண்பா எளிமையாகக் கைவசம் ஆனதா லும் இந்த பாவகைமேல் இனம்புரியாத ஈர்ப்பு ஏற்பட்டதாலும் இதை விட்டுப் போக மனமில்லை.....

மேலும் ஆதி புலவர்கள் தங்களின் புலமை யைக் காட்டுவதற்கு வெண்பாவைத் தான்பயன்படுத்துவார்கள்... அதனாலும் பிடிக்கும்...

அதுமட்டுமின்றி மற்ற பாவிலக்கணங் களை விட வெண்பாவின் இலக்கணம் சற்று கடினமாகவே இருக்கும். அதைத் தாண்டி நேர்த்தியுடன் ஒரு வெண்பாவை எழுதுவதே சவாலான ஒன்றுதான்.

ஒவ்வொரு சீராகக் கடந்து செல்லும் போதும் ஒவ்வொரு விதமான சிலிர்ப்பு இருக்கும். அதிலும் நேரிசைவெணபாவில் தனிச் சொல்லை கடந்து செல்வதே ஒரு தனிப்பட்ட பயம்கலந்த இன்பம்.

தமிழ்நெஞ்சம் சார்பாகவெண்பா கொண்டல்விருது வழங்கும் ஆளுமை அன்புவல்லி தங்கவேல் அவர்கள்.

46|• 2

வெண்பா மிகவும் சக்திவாய்ந்தது என்று சொல்கிறார்களே அப்படியா?

நேர்மையான குணம்...
வளைந்து கொடுக்காத குணம்...
யாரிடமும் எதற்கும் கை ஏந்தாத குணம்... சிறு தவற்றை கூட உயிரிழப்பைப் போல நினைக்கும் குணம்...
தன் பாதையை விட்டு வேறு பாதைக்குச் செல்லாத குணம்...
தனது பாதையில் வேறு யாரையும் நடக்க விடாத குணம்...

இதுபோன்ற குணங்கள் எங்கே நிறைந்து கிடக்கிறதோ அந்த இடத்திற்கு நிச்சயம் ஒரு சக்தி இருக்கும்...

இவை அத்தனை குணங்களும் பொருந்தி இருக்கும் ஒரேபா வகை வெண்பா தான்...

அதனால் அதற்கு நிச்சயம் ஒரு சக்தி இருக்கிறது.

அறம் பாடுவதற்கு பழம் புலவர்கள் பயன்படுத்திய பா வகைகளில் வெண்பா வும் ஒன்றாகும்.

ஒரு ஏழையின் புலம்பலை வெண்பாவில் பதிவு செய்யும்போது அது ஒரு அர சாணைக்கு உரிய கம்பீரத்தைப் பெற்று விடுகிறது என்று கவிஞர் வைரமுத்து சொன்னதாகக் கேள்விப்பட்டு இருக்கிறேன்.

இன்றளவும் கிராமங்களில் அடிக்கடி சொல்வார்கள். அவளிடம் சாபம் வாங்காதே உடனே பலித்துவிடும் என்று. உச்சரிக்கும் வார்த்தைகளுக்கு எப்போதுமே ஒரு அதிர்வு உண்டு.

அந்த வார்த்தைகள் வெண்பா மூலம் வெளிப்படும்போது இன்னும் கொஞ்சம் கூடுதல் சக்தியைப்பெறுகிறது.

இந்த முகநூலில் பிறமொழி கலந்து (கிரந்தம், ஆங்கிலம் வட்டார வழக்கு) செய்யுள் எழுதுவது நான்பார்த்த வகையில்

நீங்கள் தான் இது தமிழ்க்கொலை ஆகாதா....?
.

கொலையை தாங்கள் செய்துவிட்டுப் பழியை என்மேல் சுமத்துகின்றீர் என்றுதான்சொல்வேன்...

எனது ஆரம்ப கால இடுகைகளில் மொழி கலப்பு செய்யாமல் நான் எழுதும்போது போற்றுவதற்கு வராத நீங்கள்.... இன்று தூற்றுவதற்கு மட்டும் கைகோர்த்து நிற்பது ஏன்.? நல்லது ஏதும் உங்கள் கண்களில் படவில்லையா?

சரி... கெட்வைகளே உங்கள் கண்ணில்

படுவதாக வைத்துக் கொள்ளலாம்...

ஆனால்... ஒரு சிறுகதையில் தொடங்கி நாவல், கட்டுரை, அன்றாடம் வாசிக்கும் செய்தித்தாள் வரைக்கும் எல்லா இடங் களிலும் தமிழோடு பிற மொழிகள் கலந்து தான் இருக்கிறது....

ஆங்கிலப் பள்ளிகள் தோன்றியதைவிட மிகப்பெரிய தமிழ்க்கொலை ஏதும் உண்டா?

இவ்வளவு ஏன்? வங்கியில் காசோலை எழுவதில் கூட ஆங்கிலம் கலந்துள்ளது... இதெல்லாம் தமிழ்க்கொலை ஆகாதா? நான் எழுதினால் மட்டும்தான் அது தமிழ்க்கொலையா ? அங்கெல்லாம் சென்று கேள்வி எழுப்ப இயலாத உங்களுக்கு... என் மீது மட்டும் ஏன் இந்த ஆவேசம்?

முதலில் நடப்பு வாழ்கையில் உங்களை நீங்கள் திருத்திக் கொண்டு பிறகு எனக்கு அறிவுரை சொல்லுங்கள் என்று தாழ்மையுடன்கேட்டுக் கொள்கிறேன்.

கிரந்தத்தை சகோதர மொழி என்று சொன்னதும் ஒரு மாபெரும் தமிழ்ப் புலவன் என்பதை தங்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன்.....

மேலும் தனித்தமிழை மட்டுமே பேசி இதுவரை எதைக் கண்டோம்....?

2  •|47

கலந்து பேசும் இந்த காலத்தில் எதைக் காணாமல் இருக்கிற�ோம்?

தமிழைக் காப்பாற்ற கலைச்சொற்கள் சேகரிப்பது, அகராதி புதுப்பிப்பது, அதை நடைமுறைப் படுத்துவது என்று பல வழிகள் உள்ளது.

அதையெல்லாம் விட்டுவிட்டு குற்றம் சொல்வதற்கு உங்களுக்கு நான்தான் கிடைத்தேனா.....?

சற்று முன் வெண்பாவை பற்றி. அதன் புனிதமான குணங்கள் பற்றிதாங்கள் தான் சொன்னீர்கள்... ஆங்கிலச் சொற்களையும் கிரந்தச் சொற்களையும் கலந்து தாங்களே எழுதி அதன் புனிதத்தைத் தாங்களே கெடுக்கலாமா...?
.

வெண்பாவின் புனிதத்தைக் கெடுப்பது நானா? மீண்டும் மீண்டும் என்மீது ஏன் பழியை சுமத்துகின்றீர்?

ஏமிரா ஓரி என்றாள்
ஏந்துண்டி வஸ்தி என்றாள்
தாமிராச் சொன்னதெல்லாம் தலைக்கடை புரிந்த தில்லை
போமிரா சூழுஞ்சோலை
பொருகொண்டத்திம்மி கையில் நாமிராப் பட்ட பாடு
நமன்கையில் பாடு தானே

என்று காளமேகம் தெலுங்கைக் கலந்து செய்யுள் எழுதினானே இவ்விடத்தில் புனிதம் கெட்டுவிட்டதா ?

கூதிக்கெட் டேழும்
குலைந்து நடுநடுங்கிப்
பூதிக்கொப் பாகவன்றோ
போய்விடுமே – ஆதி
நரக்காட் டகவரியை
நற்சரப மாகிச்
சுருக்கா விடினஞ்
சுணி.

இதுவும் அவன்பாடல்தான் இவ்விடத்தில்

புனிதம் கெட்டுவிட்டதா?

கோட்டானேநாயே
குரங்கே உனையொருத்தி
போட்டாளே வேலையற்று
போய்.

என செய்யுளை முடித்தானே இவ்விடத்தில் வெண்பாவின் புனிதம் கெட்டுவிட்டதா?

இவ்வளவு ஏன்?

சிற்றம் பலமும் சிவனும் அருகிருக்க வெற்றம் பலந்தேடி வீழ்ந்தேனே - நித்தம் பிறந்தயிடம் தேடுதேபேதைமட நெஞ்சம் கறந்தயிடம் நாடுதே கண்.

என ஆன்மீகப் பாடலையே பாடினானே பட்டினத்தார் இவ்விடத்தில் புனிதம் கெட்டுவிட்டதா?

ஆங்கிலம் கலந்து எழுதுவதாக என்மேல் குற்றம் சுமத்துகின்றீர்...

இந்த பாடலை பாருங்கள்...
.

உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்
பவரா - அழுதுண்டு
ஏக்கருக்கு நூத்தியஞ்சி
எண்ணிப்பாத்தாத்தெரியும்
(ட்) ராக்டருக்கு வள்ளுவனா
ரே.

இது ஆகாசம்பட்டு சேஷாச்சலம் எழுதிய ஆங்கிலம் கலந்த வெண்பா... இவ்விடத்தில் வெண்பாவின் புனிதம் கெட்டு விட்டதா...?

நீங்கள் கெட்டுவிட்டது என்று சொன்னால்... அதே காளமேகம் வழியில் செல்லும் புலவனா க நான் இருந்துவிட்டுப் போகிறேன்...

கெடவில்லை எனறு சொன்னால்... மேற்கண்ட பாடல்களை ஒரு மேடையில்

48|• 2

வாசித்துக் காட்டுங்கள். ஆனால் இவை இரண்டுமே தங்களால் இயலாது என்பது எனக்குத்தெரியும்.

இதே கோபத்தோடு நான் இன்னொன்றை சொல்லி விடுகிறேன்.

கிரந்தச் சொற்கள் என்னென்ன... அதற்கு இணையான தமிழ்ச் சொற்கள் என்னென்ன... என்பதை முழுக்க மனப்பாடம் செய்து கொண்டு. யார் யார்... எங்கெங்கே இடுகை பதிவிட்டாலும் அந்த இடத்திற்கு உடனே சென்று. தனித்தமிழ் பற்றி பாடம் நடத்திக் கொண்டு இருக்கிறது ஒரு கூட்டம்.

தேனீர் என்பதற்கு பதிலாக tea என்று எழுதினாலும்... பூ எனபதற்கு பதிலாக புஷ்பம் என எழுதினாலும்... ஏதோ நான் தீவிரவாதிகள் உடன்சேர்ந்து சதி செயலில் ஈடுபடுவதைப் போல... என்மேல் ஆயிரம் குறைகளை வைக்கின்றார்கள்.

வெண்பாவை வேண்டாம் என ஒதுக்கி வெளிநாட்டு வடிவங்களைக் கையாள் வதை விட ஒரு அசிங்கம் உண்டா? அவர்க ளிடம் ஓரு வேண்டுகோள் வைக்கிறேன்...

நடப்பியலில் எத்தனையோ குறைகள்

இருக்கிறது. அதை முதலில் சரிசெய்யச் சொல்லுங்கள்...

அல்லது....

அவர்களின் கண்களுக்கு நான் மட்டும் தான்தெரிகிறேன் என்றால்... அவர்களின் கண்களை ஒரு நல்ல கண்மருத்துவரிடம் காட்டி அதற்கான சிகிச்சையை மேற் கொள்ளச் சொல்லுங்கள்...

வழக்கமான வெண்பா நடையை தவிர்த்து புதிய கோணத்தில் எழுதுகிறேன்...

இது உங்களுக்கு பிடிக்கவில்லை என்றால் கடந்து செல்லுங்கள்... இந்த விஷயத்தில் என்னை உரசிப் பார்த்தால்.....

உங்களிடம் கேள்விகளையும் புதிய கோணத்தில்கேட்கவேண்டி இருக்கும்....

‘‘ஒன்’’னென்று சொன்னால் உனக்கென்ன? அஃதைநான் ஒன்றென்று சொன்னால்
உனக்கென்ன? - இன்றளவில்
நாமென்று சொன்னால்
நயமில்லை; மாற்றியதை
டீமென்று சொல்வதுதான் Depth.

சென்னை தமிழாராய்ச்சி நிறுவனத்தில்கலை மற்றும் பண்பாட்டு துறை அமைச்சர் திரு மா. பா. பாண்டியராஜன் அவர்கள் கையால் குறளரசு விருது வாங்கிய போது.

2  •|49

சமீபத்தில் தங்களை மிகவும் பாதித்த நிகழ்வு எது?

ஒரு குறிப்பிட்ட விளையாட்டு பொம்மையை வாங்கித் தரச்சொல்லி என் மகன் விடாமல் அழுததும்... அந்த தருணத்தில் என் வறுமையை எண்ணி நான் துவண்டதும் தான். சமீபத்தில் என்னைபாதித்த நிகழ்வு....

கவிதை சோறு போடுமா?

நான்
கண்டெடுக்கப் பட்டால்
எனக்கு சோறு போடுவது
கவிதையாகக் கூட
இருக்கலாம்.....

இதுவரைநான்
உண்டது
மண்விளைத்த சோறு...
எப்போது கிடைக்கும்
என

தெரியாமல் காத்திருக்கிறேன் பண்விளைத்த சோறு...

கவிதை சோறு போடுமா? என்ற அதே கேள்வியுடன்நானும் காத்திருக்கிறேன்..

சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும் என்கிறார்களே? உண்மையா?
.

என் விஷயத்தில் இது உண்மைதான் நான் ஒவ்வொரு மேடையும் ஏறும்போது ஏதோவொரு மேடை என் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துமா எனும் கற்பனை யோடு கவிதை பாடிவிட்டுக் கீழே இறங்குவேன்.

கைதட்டும் பார்வையாளர்கள் முகத்தில் சிரிப்பையும் ரசனையும் பார்த்தவுடன் விழிவரை சுரக்கும் கண்ணீர் வெளியே வராமல் உள்ளேயே பதுங்கி விடும்.

பதுங்கிய கண்ணீரை
ஒருநாள் விசாரித்தேன்
ஏன் வெளியே
வரவில்லை என்று.....

என்னை ஆனந்தக் கண்ணீர் எனச்சொல்லி

அசிங்கப் படுத்துவாய்
அதனால்தான்
நான்
பதுங்கினேன் என்று
பதில் சொன்னது...

தமிழ்நாட்டில் தங்களுக்குப் பிடித்த இடம் எது ? ஏன்?

ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கு திருச்சிராப் பள்ளியில்நடந்த பொருட்காட்சிக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. அது பொன்னால் ஆன அணிகலன்கள் சம்பந்தப்பட்டபொருட்காட்சி என்பதால் அவை அனைத்துமே விலையுயர்ந்த தாகும். என் போன்ற ஏழையோ. நடுத்தர வாசியோ அதை வாங்க முடியாது.

ஆனால் அந்த பொருட்களை அங்கேயே பயன்படுத்தி demo பார்ப்பதற்கு அனுமதி உண்டு. என் வாழ்வில் அதையெல்லாம் வாங்க முடியுமா என்று கற்பனை கூட செய்து பார்க்க முடியாத பொருளையும் அங்கே பயன்படுத்தி பார்த்திருக்கிறேன். அந்த தருணத்தில் அளவில்லாத மகிழ்வில் ஆழ்ந்தும் இருக்கிறேன்.

குறிப்பாக அவ்விடத்தில் நான் அணிந்து பார்த்த. பிளாட்டினம் கழுத்துச் சங்கிலியும், வை ர மோதிரமும்... இன்னும் என் நினைவில் நிற்கிறது.

அதுபோல பொருட்காட்சி இனியும் வருமா என நினைத்துக் கொண்டு இருப்பேன். அதனால் அந்த இடம் எனக்கு மிகவும் பிடிக்கும்.

தமிழ்நெஞ்சம் புகழாரம் நூலை வெளியிட்டபோது

50|• 2

பாரதி என்ற கவிஞனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஒரு நாட்டின் தலையெழுத்தைக் கூட கவிதை வரிகள் மாற்றியுள்ளது என்றால். அது பாரதியின் வரிகளை அன்றி வேறு எதையும் என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது,

ஒரு எழுத்தாளன் தன்னை u p d a t e செய்துகொண்டு அன்றாட நிகழ்வுகளை எழுதும்போது தான் அந்த வரிகளுக்கு வலிமையும் ஆயுளும் கூடும் என்பதற்கு.

என்னைப் பொறுத்தவரை பாரதியை அன்றி வேறு யாரையும் சான்றாகக் கொள்ள முடியாது.

கம்பன், வள்ளுவன், இளங்கோவடிகள் பற்றி ஒவ்வொரு வெண்பா... பாடுங்களேன்...?
.

கம்பன் : -

.

எல்லையில்லா கற்பனையால் என்கம்பன் பாட்டுக்குள்
இல்லையென்ற ஒன்றுமங்கே இல்லையென்பேன் - சொல்லைத் தமிழ்க்கடனாய்த்தந்ததோ; தான்வாங்கிப் பின்னே
தமிழ்க்கடனாய்ச் சென்றானோ தந்து.
.

வள்ளுவன் : -
.

காற்றே புகாவண்ணம்
கட்டிப் பிடிப்பதைநான்
நேற்றே அறியவைத்த
நேயனவன் - போற்ற
ஒருவாய்ப்பு அளித்தாலும் உள்ளத்தே நிற்கும்
திருவாய்ப்பு அளித்தீர்தித் தித்து.
.

இளங்கோவடிகள் : -
.

முத்தென்று கோவலனை
முண்டம் எனவாக்கப்
பத்தினியாள் ஆங்கே
பதறிவந்து - முத்தில்லை
மாணிக்கந்தானென்று
மண்ணெரித்த காப்பியத்தைக் காணிக்கை யாயளித்தார்
கைக்கு.

புதுவை சட்டமன்ற உறுப்பினர் திரு ரவி அவர்கள் கையால்வெண்பாவேந்தர் விருது வாங்கிய போது.

p

2  • |51

தற்காலக் கவிஞர்களில் தங்களைக் கவர்ந்தவர் யார்? ஏன்?
.

ஆகாசம்பட்டு சேஷாச்சலம்... தான் என்னைமிகவும் கவர்ந்தவர். ஏனென்றால். வெண்பாவை ஏதோ ஒரு பயத்துடனும் மரியாதையுடனும் வாசித்த காலத்தில் சாதாரண மனிதர்களும் அதை வாசிக்கும் படி. அனைவருக்கும் எளிமையாக்கிக் கொண்டு சென்றவர். அதுமட்டுமின்றி ச ம க ால மக்களின் அறிவாற்றலை உள்வாங்கி. பாமரனுக்கும் புரியும்படி த னது எழுத்தை எளி மை யா க க் கொடுப்பவர்கள் எல்லாரும் என்னைக் கவர்ந்தவர்கள் தான்.

அவரின் பாடல்கள் சிலவற்றை இங்கே பதிவிட விரும்புகிறேன்...

நாரா யணாயிண்ணு
நாங்கூப்டா உம்காதில்
தாரா யணாயிண்ணு
தான்விழுதா? - வாரேவாவ்!
இந்த மனுஷங்க
காதுதான்கேட்கலைண்ணா உந்தன் செவியிரண்டு
மா?

.

அவுத்துவுட்டா எங்க
அபேஸ்ஆகு மோன்னு
கவுத்துவுட்டா கூடக்
களவு! - செவுத்துவொட்டாப் போட்டாலும் போயிடுதே கல்யாண வூடுகளில்
ஜோட்டாலும் வேதனைஅச் சோ!

.

இங்கிலீஸ்லபத்து
தமிழில் இருவது
விஞ்ஞானத்தில் கணக்கில் எவ்வேயாம் - அஞ்சி
புவியியலில் ஆறு
வரலாறில் எண்டா!
எவன்டாடே வாத்தி
ஒனக்கு?
.

இது நீங்கள் திருத்துவதற்கு அல்ல... என்னைத்திருத்திக் கொள்வதற்கு...

முகநூல் குழும அரசியல் பற்றி...
.

பொதுச் செயலில் ஒருவர் ஈடுபட்டால் அவ்விடத்தில் அரசியல் இல்லாமல் ஒன்றும் நடக்காது. இதற்கு பல காரணங்கள் உள்ளது... தேவையான பொருளாதாரம்... தேவையான கூட்டம்... செயலின் முன்னெ டுப்புக்கு தேவையான ஆள் பலம்...

இவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் இருப்பது சற்று கடினம் தான். அதனால் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நபரை நாடவேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. ஆகவே இங்கு அரசியல் இல்லாமல் தெளிவான செயல்பாடுகள் இருக்காது. அரசியல் இருப்பதில் ஆச்சரியம் இல்லை. இது முகநூல் குழும நிகழ்வுகளுக்கும் பொருந்தும்.

ஆனால் முகநூல் அரசியலைப் பார்த்தால் சற்று காமடியாகத்தான்இருக்கிறது.

ஏனென்றால்...
மொபைலில்

டேட்டா இருக்கும் வரைதான் அவர்களின் கோட்டா...
அதுவும் காலாவதி ஆனால்...
டாட்டா...

இந்த இடைப்பட்ட
தருணங்களில்
திறமைசாலிகளை
கண்டெடுக்க
நேரத்தை செலவழித்தால்
அரசியல்
மறைந்து போகும்....

52|• 2

தமிழ்நெஞ்சம் பற்றி என்னநினைக்கிறீர்கள்?

பொதுவாக ஒரு நூல் வரிகளைத்தான் சுமக்கும்... ஆனால் தமிழ்நெஞ்சம் அவ்வப் போது என் வாழ்வையும் சுமக்கிறது... தமிழ் மட்டுமல்ல தமிழ்நெஞ்சத்திற்கு நானும் கடமைப் பட்டுள்ளேன்...

தாங்கள் வெளியிட்ட நூல்கள் வாங்கிய விருதுகள் பற்றி…
.

தமிழ்நெஞ்சம் இதழின் ஐம்பது ஆண்டு நிறைவுக்காக. வாழ்த்துப்பா எழுத ஒரு வாய்ப்பு கிடைத்தது. கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு. தமிழ்நெஞ்சம் மின்னிதழையும் அதன் நிறுவனர் திரு அமின் அவர்களையும் வாழ்த்தி. எண்பது வெண்பாக்களால் புகழாரம் எழுதினேன். அதை திரு அமின் அவர்கள் தனி நூலாக வடிவமைத்து வெளி யிட்டார். அதுவே எனது முதல் நூலாக்கம் ஆகும்.

விருதுகள் என்று பார்த்தால் நான் மிகவும் விரும்பக்கூடிய வெண்பா வுக்காக கிடைத்த விருதுகள் தான்.

அந்த வகையில் புதுவையில் வாங்கிய வெண்பா வேந்தர் விருது, சென்னை தமிழாராய்ச்சி நிறுவ னத்தில் முன்னாள் பண்பாட்டுத் துரை அமைச்சர் திரு. மாபா, பாண்டிய ராஜன் கைக ளால் வ ாங்கிய குறளரசு விருது.

மற்றும் தமிழ்நெஞ்சம் இதழுக்கான புகழாரம் எழுதியதற்கு மிகப் பெரிய ஆளுமையான அன்புவல்லி அம்மாவின் திருக்கரங்களால் வாங்கிய. வெண்பா கொண்டல் விருதும்தான். என் விருதுகளில் சிறந்த விருதுகள்.

கவியரங்கு ஒன்றில்கவிச்சிகரம் தங்க அன்புவல்லி அவர்களின் தலைமையில் கவிதை படித்தபோது ...

நிலாமுற்றம் கவியரங்கில் படித்து, சான்றிதழும் விருதும் பெற்ற தருணம். உடனிருப்பவர்கள் சினிமா பாடலாசிரியர் விக்டர்தாஸ், , மற்றும் அரிமதி தென்னவன்

குறளின் குறள் எனும் நூலுக்காக நான் எழுதிய அணிந்துரைக்கு கவிஞர் வைரமுத்து அவர்களின் பாராட்டு பெற்ற போது

2  •|53

தங்கள் வெண்பாக்களில் அதிகம் அகம் சார்ந்தவையாக உள்ளனவே ஏன் ?
.

ஆம் ஐயா...! இதைநான் ஒப்புக் கொண்டு தான் ஆகவேண்டும்.

தமிழ்நெஞ்சத்திற்காக நான் எழுதிய செய்யுள் அனைத்தும் அகம் அன்றி வேற�ொரு கோணத்தில் அமைந்திருப்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள். செலவழித்த நேரமும் சிந்தனையும், கற்பனையும் அளவில்லாதது.

என்னளவில் தமிழ்நெஞ்சம் புகழாரம் ஒரு குட்டி நளவெண்பா.

அதுபோல தளம் கிடைக்கும்போது அதற்காக நேரத்தை, சிந்தனையை செலவழித்து வேறு கோணத்தில் எழுதினால் அதில் ஒரு நியாயம் உள்ளது.

தளமும், களமும் அதற்கான அங்கீகாரமும் கிடைக்குமா என்ற சந்தேகத்தில். எனது சிந்தனையை விரயம் செய்ய நான் விரும்பவில்லை.

அப்படியான தருணங்களில் இயல்பாக எழுத முடிந்தது. அகம் சார்ந்த கவிதைகள் தான்.

மேலும் நான் இன்றுவரை விரக்தியிலேயே வாழ்ந்துகொண்டு இருப்பதால் எனது வரிகளும் அதையேபிரதிபலிக்கிறது.

இன்னும் கா ரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். கற்பனையை ஊக்குவிக்கும் இடம் கிடைத்து விட்டால் அவ்விடத்தில் சிந்தனையை கவலையின்றி இறக்கிவைக்கத்தயாராக இருக்கிறேன்.

விருதுகளை விற்பனை செய்பவர்களைப் பற்றி…?
.

மக்கள் மத்தியில் தான் யாரென்று அறியப் படாத எழுத்தாளன் ஒரு புதிய சிந்தனையை, புதிய தத்துவத்தை உலகிற்கு சொல்லவேண்டும் என நினைத்தால். அது கல்லுக்குள் இருக்கும் தேரைக்குச் சமமாக அதே இடத்தில் நிலைகொண்டு நிற்கும். அதனால், தனது பெயரை எழுத்துலகில் நிலைநாட்ட வேண்டும் என்ற சிந்தனை ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் உண்டு.

அதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வியாபாரம் ஆக்குகிறார்கள் சிலர்.

அப்படி செய்வது தவறுதான் என்றாலும். இங்கே இன்னொரு நன்மையும் புதைந் துள்ளது. புதிதாகக் களமிறங்கும் எழுத்தா ளர்களுக்கு சின்ன சான்றிதழ் சின்ன பாராட்டு சின்னநினைவுப்பரிசு.

இவையெல்லாம் எழுத்தாளனின் சிந்த னையை இன்னும் ஊக்குவிக்கும் என நினைக்கிறேன்.

அதாவது... குடியிருக்க வீடும், வீட்டில் அடுப்படியும், அடுப்படியில் அடுப்பும் இல்லாமல் platform ல் குடியிருக்கும் ஒருவன் கடைக்குச் சென்று மளிகைப் பொருட்கள் வாங்க நினைக்க மாட்டான். அதுபோல்... எண்ணத்தில் கற்பனை இன்றி, எழுத்துக் கலையில் குறைந்த பட்ச ஆர்வம் கூட இல்லாத ஒருவன் பணம் கொடுத்தேனும் கொடுக்கும் விருதை வாங்க நினைக்க மாட்டான். அதனால்... இதை விற்பனை என்று சொல்வதை விட. ஊக்கப் பரிசு என சொல்வதே சாலப் பொருத்தம்.

இன்னும் புரியும்படி சொல்கிறேன்... விருதை பணம் கொடுத்து வாங்கும் எழுத்தாளனுக்கும். பணம் இல்லாமல் விருது வாங்கும் எழுத்தாளனுக்கும். இடையே திறமையில் தான் வேறுபாடு இருக்கும்.

தமிழ்நெஞ்சம் புகழாரம் நூலினை தரவிறக்கம் செய்து படிக்க இங்கே கிளிக் செய்யவும்.
https://tamilnenjam.com/wp-content/uploads/2021/02/தமிழ்நெஞ்சம்- புகழாரம்_c.pdf

54|• 2

அப்படி பார்த்தால் பணம் இல்லாமல் விருது வாங்கும் எழுத்தாளனைத் தவிர. இவ்வுலகில் வேறு யாருக்குமே திறமை இல்லை என ஆகிவிடும்.

விருதைக் கொடுத்து ஊக்கப் படுத்துங்கள். அதில் தொடக்கநிலை கவிஞனின் சந்தோஷம் இருக்கிறது ஆனால். பணம் கிடைக்கிறதே என்று புதுக்கவிதை எழுதும் ஒருவனுக்கு மரபு மாமணி விருதைக் கொடுத்து விடாதீர்கள். அப்படி ஏதாவது கொடுத்ததாக நான்கேள்விப்பட்டால்.

திருமொழியாம் செந்தமிழைத் தீயிட்டாய் என்று
செருப்போடு வாரும்என்
சீர்.

தங்கள் எதிர்காலத்திட்டம் என்ன?
.

மழைக் காலத்தில்
மழை பொழிவும்...
வெயில் காலத்தில்
கனல்பொழிவும்...
காட்டுக்குள் நடப்பதைப்
பார்த்திருப்பீர்...

ஆனால் இவை அனைத்தும் வீட்டிற்குள் நடப்பதைப்
பார்க்க வேண்டுமென்றால் என் வீட்டிற்கு
வாருங்கள்...

வீட்டில் படுத்தே
விண்பார்த்துத்
தூங்குவேன்...

விட்டத்தின் விளிம்பில்
நிலவின் அழகை
ரசிப்பேன்...

மேற்குரையின் இடைவெளியில் மேகத்தோடு
உரையாடுவேன்...

வெயிலில்

வீட்டுக்குள் இருந்தாலும்
ஓட்டில் இருக்கும்
ஓட்டை வழியே
கதிர்கள் என்னோடு
கதை பேசும்...

மழையில்
போர்வைக்குள் இருந்தாலும்

தமிழ்நெஞ்சம் புகழாரம் எழுதியதற்கு. வெண்பாகொண்டல்விருது பெற்றபோது.

2  •|55

சாரல் என்னோடு
சரிசமமாய்ப்
படுத்துறங்கும்...
என் மனைவி கூட
சாரலைப்பார்த்து
சக்களத்தியா என
என்னிடம் ஒருமுறை
சண்டைக்கு வந்தாள்...

அவளைநான்...
வளைத்து அணைத்தால்
வானம் பார்க்கும்...
முத்தம் கொடுத்தால்
முகில் பார்க்கும்...
சரசமாடும் நேரமெல்லாம் சாரல் பார்கும் ...
நேசத்தில் இடைகிள்ள
நிலவு பார்க்கும்...
விளம்பினால் காதல்
விண்மீன் பார்க்கும்...
பின்னிருந்து கட்டி அணைத்தால் பிறை பார்க்கும்...
கன்னத்தில் முத்தமிட்டால் கதிர் பார்க்கும்...

இன்னும் புரியவில்லையா...? இவர்கள் யாருமே பார்க்காமல் என் இல்லாளோடு...
நான் இன்பம் காண

என் வீட்டைக் கட்டுவதுதான் எனது எதிர்காலத்திட்டம்
.

சொல்லைக் கொடுத்தமொழி சொர்க்கம்போல் வீடுகட்டக் கல்லை கொடுத்தால்
களிப்பேன்நான் - இல்லம்
ஒழுகிடினும் வெண்பாவால் ஒண்டமிழை நாளுந்
தழுவுகிறேன் அன்றோ
தனித்து.?

வளரும் இளம் எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

.

நடப்புச் செய்திகளை எழுத்தாக்கம் செய்யுங்கள் அதுதான் பொதுவான, எல்லோருக்கும் ஆன அறிவுரை. ஆனால்... கவிஞர்கள் என்று வரும்போது சற்று கவனம் தேவை...

பழம்பெரும் புலவர்கள் அனைவருக்கும் தமிழ் நிகண்டு மு ழுக்க அத்துப்ப டி ஆகியிருக்க வேண்டுமாம். அதுதான் அவர் களின் முதல்தகுதியாம்.

அப்படியான ஆற்றல் இப்போது இருப்பது சற்று கடினம் தான். ஓசை இல்லாமல் வசன நடையில் எழுதும் நண்பர்களை இலக்கணம் கற்கச் சொன்னால். அவர்கள் பாரதியார் மற்றும் அப்துல்ரகுமான் போன்றவர்களைக் காட்டி தப்பித்துக் கொள்கிறார்கள்.

பாரதி அப்துல்ரகுமான் போன்றவர்கள் மரபை அறிந்து அதை மீறியவர்கள். அவர்க ளி ட ம் ஒரு வெண்பாவோ விருத்தமோ பாடச்சொன்னால் உடனே பாட இயலும். உங்களால் இயலுமா?

கற்றபின் மீறுவதற்கு கல்லாமல் இருக்க லாமே என்று சிலபேர் கேள்வி எழுப்பக் கூடும்...

நானும் புதுக்கவிதையில் இருந்து மரபுக்கு வந்தவன்தான். ஆனால் இன்றுவரை மரபை விட்டு மாற மனம் வரவில்லை.

யாருக்கு தெரியும் உங்களுக் குள்ளும் ஒரு பாரதி ஒரு அப்துல்ரகுமான் இருக்கலாம். அவர்களை வெளியே கொண்டுவர மரபும் துணைநிற்க வாய்ப்புள்ளது.

பாவலன்நான் என்று
பயிலாது இலக்கணத்தை
ஆவலுடன் சொல்லி
அலையாதே - தூவல்
பிடியென்றோர்வெண்பாப் பிழையின்றி என்முன்
வடியென்றால் உன்றனுக்கே வம்பு.

566|•   22

• பாராட்டு என்பது...?
உடனே கடக்க வேண்டிய வேகத்தடை...

• உலகிலேயே சிறந்த கவிதை எது...?
இன்றுவரை எழுதப்படாதது...

• உலகிலேயே சிறந்த புத்தகம் எது...?
வலி...

• நாத்திகன் என்பவன்...?
கடவுள் பெயரை அதிகளவு உச்சரிப்பவன்...

• ஆத்திகன் என்பவன்...?
துன்பத்தில்மட்டும் கடவுள் பேரைச் சொல்பவன்....

• கனவு என்பது...?
தூக்கத்தில் கிடைக்கும்இன்பம்...

• நினைவு என்பது...?
விழிப்பில் கிடைக்கும்துன்பம்...

• காதல் என்பது...?
வாழ்க்கையின் அங்கம்...

• வாழ்க்கை என்பது...?
ஆசையின் உடல்...

• கவலை என்பது...?
விடைதேடும் கேள்வி...

• சந்தோஷம் என்பது...?
விடைபெற்ற கவலை...

• இளமை என்பது...?
சதந்திரப் பயணம்...

• திருமணம் என்பது...?
தண்டவாளப் பயணம்...

• பிரிவு என்பது...?
உறவால் ஏற்படும் காயம்...

• உறவு என்பது...?
பிரிவால் கிடைக்கும் மருந்து...

வெண்பா இலக்கணம் மற்ற பா வகை களைக் காட்டிலும் மிகக் கடினமானது என்கிறார்களே... அப்படி இருந்தும் கேட்ட வுடன்வெண்பா பாடும் ஆற்றல்தங்களுக்கு எப்படி வந்தது?
.

இதற்கு பெரிதாகக் காரணங்கள் ஏதும் இல்லை. மரபு அறிய தொடங்கிய நாள்முதல் இன்று வரை வெண்பாவில் மட்டுமே பயணிப்பதால் வந்தது தான்.

நெருங்கிய நண்பர்கள் மற்ற பா வகையும் எழுதச் சொன்னார்கள். ஆனாலும் இதை எழுதும்போது ஏற்படும் மன நிறைவும், சந்தோஷமும் வேறெதிலும் இல்லை.

கடினமான இலக்கணம் என்பதால் எங்கோ ஒருசில இடங்களில் என்னையும் இது காலைவாறி விடும்.

கம்பன் வரிகளுக்கே எதிராக காளமேகம் பாடும்போது நானெல்லாம் எம்மாத்திரம்?

ஏதோ எழுதுகிறேன் அவ்வளவு தான்...

• கவிதை என்பது....?
சந்தத்துடன் சொல்லும்சங்கதி...

• புதுக்கவிதை என்பது...?
கால்கொண்டு நிற்கும் உரைநடை...

• உரைநடை என்பது...?
எடையே இல்லாத பொருள்...

• ஊடகம் என்பது...?
ஊதாமல் இருப்பது பலூனை...

• தனித்தமிழ் என்பது...?
நிறைவேறாத கனவு.

• கலப்பு மொழி என்பது...?
நிறைவேறிய வாழ்க்கை...

• விமர்சனம் என்பது...?
காய்த்த மரத்திற்கான கல்லடி.....

2  •|57

• இரகசியம் என்பது...?
பெண் வயிற்றில் வளரும் கரு.

• நன்கொடை என்பது...?
ஆதாயம் தேடும் இருள்...

• ஆதாயம் என்பது...?
களவுக்கு கிடைத்த வெளிச்சம்...

• மழை என்பது...?
நம்மைச் சிரிக்க வைக்கும் வானத்தின் கண்ணீர்.

• புயல், வெள்ளம் என்பது...?
நம்மை அழ வைக்கும் இயற்கையின் கொண்டாட்டம்.

• முதல் எதிரி யார்...?
தான் என்ற கர்வம்...

• முதல் நண்பன் யார்...?
பணிவு...

• பசி என்பது...?
உழைப்பின் நண்பன்...

• உழைப்பு என்பது...?
வறுமையின் நண்பன்...

• வரம் என்பது...?
கிடைக்காத இடத்தில் கேட்பது...

• கடவுள் என்பது...?
அது ஒரு வார்த்தை...

• பக்தி என்பது...?
போதை...

• முக்தி என்பது...?
கோமா நிலை...

• உண்மையான ஓவியன் யார்...?
விளக்கு அணைக்கப் பட்ட முதலிரவு அறையை வரைந்து காட்டுபவன்.

• உண்மையான எழுத்தாளன் யார்...?

மொய் எழுதும்போது 101 ஐ பிழையின்றி எழுதுபவன்.

• அரசாணையை மகிழ்வோடு
மதிப்பவன் யார்...?
குடிகாரன்...

• அரசு விற்பனை செய்யும் மது...?
மனதிற்கு கேடு விளைவிக்காதது...

• அரசு விற்பனை செய்யும் குடிநீர்...?
உடலுக்கு கேடு விளைவிப்பது...

• தொடங்க வேண்டியது...?
போராட்டம்...

• முடிக்க வேண்டியது...?
தொடங்கிய போராட்டத்தை...

• மதமாற்றம் என்பது...?
வணங்கும் முத்திரையின் இன்னோர் வகையைப் பின்பற்றுவது.

• சிற்றின்பம் என்பது...?
மனதை ஒருநிலைப் படுத்தும்...

• பேரின்பம் என்பது...?
புலம்பலின் வாழிடம்...

• பயங்கரமான நோய் எது...?
பொறாமை...

• நான் என்பது...?
நீங்கள் தான்...

• நீங்கள் என்பது...?
நான் தான்...

விடைபெறுகிற�ோம். நன்றியும் வணக்கமும்!

58|• 2

அமெரிக்க முத்தமிழ் பல்கலைக்கழக

மதிப்புறு முனைவர் பட்டமளிப்பு விழா

18/02/2022 அன்று சென்னை வேப்பேரியில் உள்ள சால்வேஷன் ஆர்மி வளாகத்தில் அமெரிக்க முத்தமிழ்பல்கலைக்கழக மதிப்புறு முனைவர் பட்டமளிப்பு விழாநடைபெற்றது.
அமெரிக்க பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் தாழை இரா.உதயநேசன், துணைவேந்தர் டாக்டர் உ.ஆல்வின், பதிவாளர் முனைவர் பாட்டழகன் இவர்களுடன் தலைமை விருந்தினர் செவாலியர் டாக்டர் விஜி சந்தோசம் அவர்கள் இணைந்து தமிழுக்கு 40 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றிய தமிழ் ஆளுமைகளுக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கினர்.
ஓவியக் கவிஞர் அமுதோன், கவிஞரும் எழுத்தாளருமான ஆண்டாள் பிரியதர்ஷினி, படைப்பிலக்கியம் மற்றும் புதுக்கவிதைபடைப்பாளி கவியருவி.ஆரூர்தமிழ்நாடன், கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம், பாவலர் சரஸ்வதி பாஸ்கரன் ஆகியோருக்கு மதிப்புறு முனைவர் பட்டம் மேடையில் வழங்கப்பட்டது. பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள் முனைவர் ஜோ.சம்பத்குமார், முனைவர் ஜான்.இளவரசு, முனைவர் ஞா.விஜயகுமாரி, டாக்டர் ஜெயக்குமார்பலராமன், டாக்டர் இரா.செந்தில்குமார், வழக்கறிஞர் எஸ்.பூங்குழலி, எழுத்தாளர் எம்.மேரிமுத்து, கவிஞர்ரேணுகாஸ்டாலின் ஆகியோர்பங்கேற்க விழாநடைபெற்றது. விழாவில் தலைமை வகித்த சிறப்பு விருந்தினர் செவாலியர் டாக்டர் விஜி சந்தோசம், முனைவர்கள் ஹாஜா கனி, முரளி அரூபன் , எழுத்தாளர்ஜெயபாஸ்கரன், முன்னாள் அரசவைக் கவிஞர்திரைப்படப் பாடலாசிரியர் முத்துலிங்கம், நக்கீரன் குழும இணையாசிரியர் கோவி லெனின், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை மற்றும் வாழ்த்துரை வழங்கினார்கள்.
நிகழ்வுகளை இனிய குரலால் முனைவர் ஞா.விஜயகுமாரி மற்றும் முனைவர் ஜான் இளவரசு இணைந்து தொகுத்து வழங்கினர். மேலும் விழாவில்திருமதி கலையரசி உதயநேசன், திருமதி.அருள்செல்வி கல்யாணசுந்தரம்,திருமதி அமுதா தமிழ்நாடன், திருமதி சங்கமித்திரை பாட்டழகன், முனைவர் ஆதிரா முல்லை, கவிஞர்கள் க.குணசேகரன்,
ஆட்சிமன்ற குழு உறுப்பினர் முனைவர்ஜோ.சம்பத்குமார் அவர்கள் நன்றியுரை வழங்கினார். அனைவரின்நாட்டுப்பண்சேர்ந்திசையோடு பட்டமளிப்பு விழா இனிதே நிறைவடைந்தது.

 22  • |59

உலகின் வலிமையே வா

தடைகளைத் தாண்டி வா
தடைகளைத் தாண்டி வா
தடுத்திட யார்தான் இருந்தால் என்ன தடைகளைத் தாண்டிட வா

பெண்ணே தடைகளைத் தாண்டலாம் வா

உன் பாதங்கள் போ(டு)கும்
பாதைகள் எல்லாம்
பனித்துளி அல்ல எரிமலை என்று
எழுந்திங்கு ஏறிட வா

பெண்ணே எழுந்திங்கு ஏறலாம் வா

தலைமுறைத் தடைகளை
மறுமுறை திருத்திடவா
தடுத்திடும் தயக்கங்கள் தகர்த்து நீ புறப்பட்டு வா இந்த தரணியைவென்றிடவா

பெண்ணே தரணியை வெல்லலாம் வா

மலரில்காணும் நறுவீயும் நீயே
மானுடம் தாங்கும் வேரும் நீயே தியாகத்தைச�ொல்லும் தாயகம் நீயே அன்பினைமொழியும் தாய்மொழி நீயே

பெண்ணே தாய்மையில் அனைத்தும் உணர்த்துகிறாயே

போராளி நீதான் புதுமைப் பெண்நீதான்
வலியினைத் தாங்கும் ஒரு வலிமையும் நீதான்
இந்த உலகின் வலிமையும் நீதான்
தடைகளைத் தாண்டி வா

பெண்ணே தடைகளைத் தாண்டலாம் வா..

ச. ஆரா
(திருநின்றவூர்)



60|• 2

அகில உலகங்களையும் அனுதின
மும் அன்பால் அடக்கி ஆளும் இறைவா! இந்த உலக உயிரினங்களுக்கு வல்லமை தந்து உதவாயோ! நல்லவை எவை, அல்லவை எவை என்று பிரித்துணரும் ஆற்றல் குறைந்தவர்களாக, எங்கிருந்து வந்தார்களோ அந்த இடம் நோக்கியே மீண்டும் சென்று கொண்டிருக் கின்றனர். பிறப்பில், ஒழுக்கத்தில், கல்வியில், குடும்ப வாழ்வில், பண்பாட்டில், மகிழ்ச்சியில், வழிபாட்டில், துறவில், மரணத்தில், என்று பிறந்தது முதல் மரணிப்பது வரை தன் இனத்தையேமறந்து, தன்னைவேறுவிதமாக வெளிக்காட்டிக்கொண்டுள்ளனர். மீண்டும் அவர்கள் மான்புடைய மனிதர்களாக மாற வல்லமைதாராயோ!
‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற ஒ ப் பு மைப் பண்பு வெறு ம் வார்த்தையளவில் மட்டுமே பேசப்படும் இனமாக மாறிவிட்டது மனித இனம். ஒருவருடைய குணத்தினைக் கொண்டும், அக்குணத்தின் மூலம் அவர் செய்கின்ற செயல்களைக் கொண்டுமே அவரை மதிப்பிட வேண்டுமே தவிர, அவருடைய பிறப்பினைக் கொண்டு மதிப்பிடுவது என்பது அறிவாளர்களின் செயல் அல்ல என்பதை மனித இனம் உணர்வதற்கு, வல்லமை தாராயோ!

உள்ளே இருப்பது வெளியே சிந்து வதையே ஒழுகுதல் என்று குறிப்பிடு வோம். இந்த ஒழுகுதல் என்பதில் இருந்து தோன்றியதே ஒழுக்கம். ஆம், உள்ளே இருப்பது வெளியே தெரிவதே ஒழுக்கம். உள்ளேநல்ல சிந்தனை இருந்தால் அவை நல்லொழுக்கங்களாக வெளிப்படும். உள்ளே தீய சிந்தனைகள் குடிகொண்டி ருந்தாலோ, அத்தகையோரின் ஒழுக்கக் கூறுகளும் தீயதாகவே காணப்படும். உலக மக்களுக்கே ஒழுக்கங்களைக் கற்றுக்கொடுத்த இனம், தவறான கலாச் சா ரத்தால் கொஞ்சம் கொஞ்சமா க மாய்ந்து கொண்டிருக்கின்றது. இதனை மீட்டெடுக்க வல்லமை தாராயோ! வெளியிலிருந்து எதையோ கற்பிப் பது கல்வியல்ல. உள்ளிருக்கும் பூர்ணத்து வத்தை வெளிக்கொணர்வதே கல்வி என்கின்றார் விவேகானந்தர். இதன் அடிப்படையில் ஒவ்வொருவருடைய தனித்திறன்களையும் வெளிக்காட்டும் வாழ்வியல் கல்வியை கற்று, வாழ்க் கையின் இரகசியங்களை முழுமையாக உணர்ந்து கொள்ள வல்லமை தாராயோ! குடு இன்பம் என்ற சொற்களின் கூட்டே குடும்ப ம். ஒவ்வொருவரும் தங்களுக்குள் மாறி மாறி இன்பங்களைப்
பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்

  

 
    
 - 

 

2  • |61

காகவே குடும்பம் என்று பெயரிட்டனர். ஆனால் இன்றோ கணவன் - மனைவி இருவரும் சேர்ந்து வாழ்வதே கூட்டுக் கூடும்பம் என்றநிலை உருவாகி யுள்ளதுதான் மிகுந்த வருத்தம் அளிப்பதாக உள்ளது. மனிதர்களுடன் சேர்ந்து வாழ்ந்த காலங்கள் மறைந்து இயந்திரங்களோடு வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் நிலை மாறுவதற்கு வல்லமைதாராயோ!
பண்பட்ட வாழ்க்கை முறையைத் தான் பண்பாடு என்கின்றோம். ஒருவர் வாழ்கின்ற வாழ்க்கை பல்வேறு தலை முறையினரின் அடையாளம் என்பதை மறந்துவிடக் கூடாது. ஒருவர் பண் பாட்டை மீறும்போது ஒரு இனத்தின் அடையாளமே மாறுகிறது என்பதை மனித இனம் உணர்ந்துகொள்ள வல்லமை தாராயோ!
யாரையும் எந்த விதத்திலும் பாதிக் காமல் இருக்கும் நிலையில் அடைவதுதான் மகிழ்ச்சி. கல்வி கேள்விகளில் சிறந்த கற்றறிந்தவர்களெல்லாம் தம்முடைய மகிழ்ச்சியைக் கண்டு உலகமே இன்புற்றி ருக்க வேண்டும் என்ற நிலையையே விரும்புவர். இதைத்தான்திருவள்ளுவரும்,

தாமின் புறுவது லகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்

என்ற குறளில் சுட்டுகின்றார். இத்தகைய மகிழ்ச்சி இன்று முற்றிலும் மாறிவிட்டது. மற்றவர்களைக் காயப்படுத்தி அதன் மூலம் அவர் அடையும் வருத்தத்தைக் கண்டு மகிழும்நிலை இன்று உள்ளது. ஒருவரின் கண்ணீரில் மற்றவர் மகிழ்கின்ற இந்நிலை மாற வல்லமை தாராயோ!
வழிபாடுதல் என்பது வழிபடுத்துதல் என்பதன் சுருக்கமே. வழிபடுத்துதல் என்பதற்கு நெறிப்படுத்துதல் என்பது பொருள். இதனையே வழிபாடு என்றும் அழைப்பர். இந்த வழிபாடு என்பது இறைவனிடமிருந்து வந்த நம்மை மீண்டும் இறைவனிடம் நெறிப்படுத்துவதாக அமைய வேண்டும். இறை நிலையோடு நம்மை இணைப்பதாக அமைய வேண்டும். ஆனால் மாறாக இன்று இறைவனை

ஏதோ தொலைந்துபோன பொருளைப் போல எண்ணிக்கொண்டு, இறைவனைத் தேடிச் செல்கின்றோம் என்ற மன நிலை யில் இறைவன் இருக்கின்ற இடத்திற்கு முற்றிலும் எதிர் திசையில் ப யனித்துக்கொண்டிருக்கின்றோம் இறைவனே நம்மைத் தேடி வந்தாலும், அவர் வருகின்ற திசைக்கு எதிர் திசையை நோக்கித்தான் நம் பயணம் அமையும். எனவே உ ன்னு டை ய ஆற்றலை முழுமையாக உணர்ந்துகொள்ள வல்லமை தாராயோ!
துறவு என்பது மனைவி, மக்கள் மற்றும் சுற்றத்தாரைத் துறந்து காட்டில் மேற்கொள்ள வேண்டிய செயல் என்று எண்ணிக்கொள்வது மடமை. நமக்கு அளிக்கப்பட்ட கடமையைமன நிறைவுடன், உண்மையாக மேற்கொண்டால் அதுவும் துறவே. கடமை தவறாத குணத்தினைத் தான் அனைத்து மதங்களைச் சேர்ந்த இறைநிலையும் விரும்புகின்றது. உலகமே நாடக மேடையாக இருக்கக்கூடிய நிலையில் தந்தை, மகன், தாய், ஆசிரியர், மாணவர், நண்பன் என்று ஏற்றுக்கொண்ட பாத்திரங்களில் உண்மையுடன் பயணிக்க வல்லமைதாராயோ!
ஒவ்வொரு கருவும் என்று உருவா கின்றதோ அன்றே அதற்கான மரணமும் குறிக்கப்பட்டுவிடுகின்றது என்பதே உண்மை. தாய் வயிற்றில் நாம் உயிர் பெற்ற நாள் முதல் ஒவ்வொரு நாள் பயணிப்பதும் மரணத்தை நோக்கியே என்ற உலக உண்மையை மிகத்தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும். இதற்கு இடைப்பட்ட காலகட்டங்களில் மீண்டும் இப்பூமியில் வந்து பிறவாமைக்கான முக்தி நிலையை யோசித்து அதன்படி நம்முடைய வாழ்வியலை அமைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஜணனமும் எவ்வளவு புணிதமானதோ அதைப் போலவே ஒவ்வொரு மரணமும் புணிதமாக்கப்பட வேண்டும். எனவே வாழ்வதற்கு மட்டுமின்றி நம்முடைய மரணம் புணிதமாவதற்கும் வல்லமை தாராயோ!
n

62|•  2

திருவள்ளுவர் ஆண்டு 2053
உள்ளுவமே வமே வவள்ளுவமே வமே! கொ கொள்ளுவமே வமே நநாமதனைனை! சச�ொல்ொல்லுவோமே வோமே தீவடவ வடவம், எள்ளு வமே வமே; - தள்ளு வமே வமே! செல் செல்லுவமே வமே செல் செல்லிடடத்து வவிள்ளுவமே வமே; பல்ல்லுயிர்க்கும் வவள்ளுவமே வமே வவாழ்க்கை ழ்க்கை நெறி.

சச�ொன்னால் ொன்னால் புரியாது; சச�ொொல்பவ்பவர் சச�ொொல்கேகேளாது! எந்நாளும் தன்னிலையை ஏற்காது; - முன்நிலையை முப்பாட்டன் வாழ்ந்த முறைமைகளை என் இனமே! தப்பாமல் ஏற்பாய் தலை.

இன்றேபுத் தாண்டை இனிதேநாம் கொண்டாட ஒன்றாவோம்- நாம்தமிழர் ஒன்றானோம் என்றாவோம்! சென்றாண்டின் துன்பங்கள் சென்றுவிட வள்ளுவரை நன்றெங்கும் தாள்வணங்கி நாடு.

வாழ்த்துவதோர் பண்பாடு... வன்னத் தமிழ்மக்கள் சூழ்பகையை நன்குணர்ந்து தொல்தமிழால் - வீழ்த்திடுவோம்! வள்ளுவமே நன்மறையாம்; வள்ளுவரே நம்இறையாம்! விள்ளுவ மேஉலகில் வென்று.

கூற்று வரும்வரையில் கூறு தமிழ்மறையை...
போற்றமறக் காதே பொதுமறையை - ஏற்றமுற
ஏற்றிடுவாய் வள்ளுவத்தை! ஏந்தி திருக்குறளை நோற்றிடுவாய் வாழ்விலுயர் நோன்பு.

நநாளைளை திருக்குற ளைளை நம்பா நம்பாட்ட்டன் வவள்ளுவவரின் தாளைளை வவணங்க்க தயங்காதே காதே! - ஊளைளை நநரிககளிடும்! நநீஅதனைனை நநாடடாதேதே! நநீயோ யோர் அரிமாவவாம்! வவாழ்வா ழ்வாய் அறிந்ந்து.

நீலகண்ட தமிழன்

ஒருங்கிணைப்பாளர்
சசங்கத்த ்கத்தமிழ் இல கக்கிகியப் பூங் காகா

2  •|63

”பெருநிறுவனங்களால் நடத்தப்படும் வார, மாத இதழ்கள் முன்பு கடலில் பெருங்காயம் கரைத்தல் போன்ற முயற்சி, தாக்குப் பிடிக்க முடியாமல்நின்று விடுகிறது என்பது காலங்காலமாய் நடப்பதுதான். இதழ்நடத்துவது என்ற விட்டுவிட முடியாத இலேசாக ஒதுக்கிவிட முடியாது. இந்த இதழும் கூட அப்படி நின்றுவிடும். ஆனாலும் வேறு வேறு நண்பர்களால் தொடரத்தான் செய்யும். இப்படியான சிறு இதழ்கள் தான் சிறந்த சிந்தனையாளர்களையும் கதைசொல்லிகளையும் கவிஞர்களையும் தந்திருக்கின்றன என்பதைமறுக்க முடியுமா?”

வேறு வேறு இதழ்கள் வெவ்வேறு நண்பர்களால்மாற்றி அமைக்கப்படுகிறது. இது ஆற்று ப் பெருக்காய் ஓடி வரா விட்டாலும் ஊற்றுப் பெருக்காய் உயிர் கசியும் என்று உறுதியளிக்கப்படுகிறது.

ஓர் அகல் விளக்கேற்றி இந்தப் பயணம் தொடங்குகிறது. அந்த எளிய வெளிச்சம் இந்த எளிய பயணத்தை வழி நடத்தட்டும்!

கண்ணாமூச்சியை வளர்ப்பது உங்கள் பொறுப்பு, அகல் விளக்குக்கு எண்ணை ஊற்றிபாதுகாப்பு செய்திடுங்கள்.

மின்னஞ்சல் :
kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சிநிதி அனுப்ப கூகுள் பே 9659335462 விவரத்தை வாட்ஸ்அப் எண்ணிற்குத்தெரிவிக்கவும்.

மீண்டும்

எழுகிறோம்

யாதுமாகினாய் நீ!

வாசிப்பதற்கு புத்தகத்தை புரட்டினால் முதற் பக்கத்தில் புன்னகைத்து கொண்டிருக்கிறாய்!

எழுதுவற்கு பேனையை
கையில் எடுத்தால்
வெற்றுத் தாளில்
மௌனித்திருக்கிறாய்!

தொலைபேசி ஒலிக்க
செவியில்வைத்தால்
ஹலோவார்த்தையை
உனக்குரியதாக்கியுள்ளாய்

தொலைகாட்சி ஒளிபரப்பாக ஆசையோடு பார்த்தால் கதாநாயகன் ரூபத்தில்
நடமாடிக் கொண்டிருக்கிறாய்

இயற்கையை ரசிப்பதற்காய் ஜன்னலை திறந்தால்
பூக்கள் சாயலில்
அசைந்தாடி அழைக்கிறாய்

உறங்கிடவிழிமூடினால் இருளுக்குள் இன்பமாய் கதிரைபோட்டு
கர்வமாய் அமர்ந்திருக்கிறாய்

முனீரா அப்துல் வாஹித். சில்மியா புர.

64|•  2

கவிதை உலகத்தில் கோலோச்சிய எழுத்தாளர் அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்கள் நிறுவனராக உள்ள “அன்பின் சங்கமம் சிறுவர் உலகத்தைச்” சார்ந்த 15 சிறார் எழுத்தாளர்கள் எழுதிய கதைகளின் தொகுப்பு.
இ ந்நூலி ல் உ ள்ள ஒவ் வொ ரு கதையும் ஒவ்வொரு நீதியை நமக்கு போதித்து செல்கிறது. இந்நூலினை வாசிக்கும் போது குழந்தைகளின் சிந்தனை வளம் கண்டு ஆச்சரியப்படுகிறேன். தான் கண்ட கேட்ட விஷயங்களை கதைகளிலே பயன்படுத்தி இருப்பது வியப்பளிக்கிறது. மனிதர்களே ஒருவருக்கொருவர் உதவி செய்யாத இக்காலத்தில் அடிப்பட்ட மானுக்கு முயல் உதவி செய்கிறது. இருவரும் நண்பர்களாக சேர்ந்து காட்டில் பயணிக்கும் கதை.
என்னதான் நண்பர்களாக இருந்தா
லும் தீயவர்களின் நட்பு என்றும் நமக்கு கெடுதல் தரும்னு ஒரு கதை சொல்லுது. குழந்தைகள் இப்பலாம் பெற்றோர்
கள் பேச்சை அதிகமாக கேட்பதில்லை .அது சம்பந்தமாக மூத்தோர் சொல் கேள்

என்று ஒரு கதை நமக்கு வலியுறுத்துகிறது. எல்லா ரும் த ங்க த் தை உ ள்ள பத்திரமாக பூட்டி வைப்பாங்க ஆனா ஒரு கிராமத்துல தங்கத்தை வாசலில் வைத்து விட்டு உள்ளேபோய் கதவை சாத்திக்கிறாங்க. தங்கத்தை திருடும் பூதம் கதையில் இந்த அதிசயம் நடக்குது.
இளவரசியை ஒரு கொடி அரக்கன் துரத்தி வருகிறான். அவனிடமிருந்து இளவரசி எப்படி தப்பிக்கிறார்கள் என்கிறது மற்றொரு கதை. இளவரசி மட்டுமில்லாமல் இக்கால பெண்குழந்தைகள் எந்த ஒரு பிரச்சினை வந்தாலும் தைரியத்துடனும், துணி ச்ச லு டனும் எ தி ர்த் து நி ன் று போராடினா ஜெயிக்கலாம்னு இந்த கதையில நாம் தெரிஞ்சிக்கலாம். எல்லார் வீட்டிலேயும் அம்மா தானே குழந்தைகளுக்கு ஆலோசனை சொல்வார்கள் இங்கே ஒரு சிறுவன் அவங்க அ ம் மா வு க் கு ந ெ கி ழி பை பயன்படுத்தக்கூடாது என ஆலோசனை

  

• 

 
  

    

• 
anbuchelvi15@gmail.com

 

 

2  •|65

சொல்கிறான். அதை அவங்க அம்மாவுக்கு கேட்டு நடந்துக்கிறாங்க.
எல்லா குழந்தைகளுக்கு சின்ன சின்ன ஆசைகள் இருக்கும். இங்கே இரண்டு பசங்க அவங்களோட ஆசைகளை அதிசிய மரத்திடம் சொல்றாங்க .அந்த மரம் அவங்களோட ஆசையை நிறைவேற்றி வைக்குது.
ஒரு வீட்டில் வளர்க்கும் கிளி அந்த வீட்டு பயனோட உயிரையே காப்பாற்றி இருக்காம் இது ஒரு வாண்டு பையனோட கதை.

ஒரு தவ ளைக்கு நண்ப ர்களே இல்லையாம் அது யாருக்கும் உதவியே செய்யாதாம். இனிமே உதவி செய்யனும்னு முடிவு செய்த உடனே அதுக்கு மீன்நண்பர் கிடைச்சதாம் பின்னு தவளையின் புது நண்பன் கதையில்.
நம்ம வீட்டிலேயே காய்த்த காய்கறி பழங்கள் என்றால் எவ்வளவு சுவையாக இருக்கும். இயற்கை உரத்தில் விளைந்த காய்கறிகளைநம்ம மீனா தோட்டத்துக்கு வந்து பாருங்க.
மிருகங்களும் மனிதர்களும் நண்பர் களாக வாழ்ந்துட்டு வராங்க. அங்க ஒரு தீய எண்ணம் படைத்த புலி நுழைந்து அந்த அந்த காட்டின் ராஜா வா ன புலியின் மனசைக் கெடுத்து மனிதர்களை வேட்டையாட ஆரம்பிக்கிறாங்க. இதனால் ஏற்படும் விபரீதத்தை ஒரு கதை சொல்லு மனிதர்களுக்கு மட்டுமல்ல இங்கே பறவைகளுக்கும் பொறாமை வந்து விட்டது எல்லாம் சேர்ந்து ஒரு அழகான பறவையை ஒதுக்கி வைக்கிறது. ஆனால் அவர்களுக்கு ஆபத்தில் உதவுவது அந்த பறவைதான்.
விமான விபத்தில் ஒரு பயணி கடலில் விழுந்து விடுகிறார். அவரை கடல் கன்னிகள் காப்பாற்றுகின்றனர். அங்கே கடல் வாழ் உயிரினங்களுக்கு இருக்கும் ஆபத்தை அவர் எப்படி சரி செய்கிறார் என்பது ஒரு கதை.
ப ய ண ங ்க ளின ்போ து சாலையோரம் இருக்கும் ம ரங்களை எண்ணிக் கொண்டும் அவைகளோடு பேசிக் கொண்டும் பயணிப்பது ஒரு

அலாதி சுகம். இங்கே ஒரு குழந்தை பயணத்தின்போது சாலையில் இருந்த மரங்களை காணாது தவிக்கிறது. குழந்தைகளுக்கு அப்பா என்றாலே மிகவும் பிடிக்கும். பெண் குழந்தைகளுக்கு கேட்கவே வேண்டாம். இங்கே ஒரு பெண் குழந்தை தன் அப்பாவிடம் கொண்டிருக்கும் அன் பை பற்றிய கதைதான் அப்பாவை தேடிய தமிழரசி. இந்நூல்களில் இடம்பெற்றுள்ள கதைகள் எல்லாமே ஆலோசனை வழங் குபவையாகவும், ஒழுக்கநெறிகள் போதிப் பதாகவும், இயற்கையை காத்திட துடிப்ப தாகவும் இருப்பது வியப்பளிக்கிறது. அன்பின் சங்கமம் சிறுவர் உலகத் தின் வாயிலாக வெளிவந்திருக்கும் *வாண்டுகள் சொன்ன கதைகள் * நூலில் இடம் பெற்றிருக்கும் அனைத்து இளம் எழுத்தாளர்களுக்கு வாழ்த்துகள். குழந்தைகளின் கதைகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கும் எழுத்தாளர் அன்புச் செல்வி சுப்புராஜு* அவர்களின் பணி பாராட்டுக்குரியது.
தொடர்ந்து இதுபோன்ற நல்ல நூல்களை தமிழுலகம் அவரிடம் எதிர் பார்த்து காத்திருக்கின்றது.
மகிழ்வுடன்,

ஜனனிகுமார், நாகப்பட்டினம்.

நினைவுச் சுருள்கள்

என் தாய்க்கு
என் கூந்தலும்
ஒரு பிள்ளை

என் கூந்தலை
பேன் இன்றி
பேணிக் காக்க
அவள் பட்ட
பிரம்ம பிரயத்தனங்களுக்கு
அளவே இல்லை

தாயின் விரல்கள்
பேன் எடுக்க
கூந்தலில் நகர்ந்திடும்
அனுபவம் சொல்ல
வார்த்தைகள் இல்லை

ஈர்வளையால் அவள்
ஈர்களுக்கு வலையிடுவாள்
பேன் சீப்பால்
பேன்களைத் தூக்கிலிடுவாள்

வெள்ளிக்கிழமையானால்
வெள்ளிச்சிணுக்கோலிக்கு
வந்துவிடும் வேலை

சிக்கெடுத்து கூந்தலை
காய வைப்பதிலேயே
செலவாகிவிடும்
காலை வேளை

வருடம் தோறும்
கோடை விடுமுறை நாட்களில் வரும்
பங்குனிப் பொங்கலில்
அதிகமாய் கூந்தல் வளர
அம்மாவும் நானும்
அம்மனுக்குப்
பூ முடி காணிக்கை
கொடுப்பது வாடிக்கை

விடுமுறை முடியும் போது
முதுகு வரை
பூ முடிக்கு வெட்டிய ஜடை
மீண்டும் இடையைத் தொடுவது
தான் வேடிக்கை

அன்று பிருஷ்டம் தாண்டி
கருமணலாய் தொங்கிய ஜடை
இப்போது எலிவால் ஆனது

இவையெல்லாம் இன்று
தலை வாரும் போது
சீப்பில் சுருளாக உதிர்ந்த
முடிகளைக் கண்டு
என் மனதில் ஓடிய
நினைவுச் சுருள்கள்.

- மு.ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

இன்று

முன்போ
புல்லாங்குழல் போலத்தான்
மனிதர்கள்...
யார் ஊதினாலும்
இசையாய் தவழ்ந்தார்கள்...
இன்றும் புல்லாங்குழலாகத்தான்
மனிதர்கள்...
மதத்தால் ஊதப்படுகிறார்கள்...
மதங்கொண்டு ஊதப்படுகிறார்கள்...
மதமாகவே ஊதப்படுகிறார்கள்...
விளைவு
இசையாக கேட்கவில்லை
மாறாக கண்ணீர்த்துளிகள்...
பாவம் கடவுள்கள்!

ம.சக்திவேலாயுதம்
நெருப்பு விழிகள்

இறகைத் தேடும் சிறகுகள்!

நூல் ஆசிரியர் :
கவிஞர் நாகை ஆசைத்தம்பி

நூல் வெளியீடு :
கவிக்குடில், கோவை.
அலைபேசி :
87548 79990

நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி

‘இறகைத் தேடும் சிறகுகள்’ நூலின் பெயரே வித்தியாசமாக உள்ளது. பெற்றோரைத் தேடும் குழந்தைகள் என்றும் பொருள் கொள்ளலாம். நூல் ஆசிரியர் கவிஞர் நாகை ஆசைத்தம்பி அவர்களின் 16ஆவது நூல். ஹைக்கூ வரிசையில் 4ஆவது நூல். இவரது முந்தைய ஹைக்கூ நூல்களுக்கு மதிப்புரை எழுதி உள்ளேன்.

இந்த நூலின் புதுமை என்னவென்றால் பன்மொழி ஹைக்கூ நூல் தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம் என 4 மொழி ஹைக்கூ கவிதைகளும் ஒரே நூலில் வந்துள்ளன. 4 மொழிகளில் ஹைக்கூ கவிதைகள் வந்துள்ள முதல் நூலும் இதுவே. 4 மொழிகளும் நூலாசிரியருக்குத் தெரியுமா? என்பது தெரியவில்லை. தெரிந்து இருக்கலாம். அல்ல பிறமொழி மட்டும் மொழிபெயர்ப்பாளரிடம் பெற்று படைத்து இருக்கலாம்.

உலகின் முதல் மொழி தமிழ், உலக மொழி ஆங்கிலம், வடஇந்திய மொழி இந்தி, அண்டை மாநில மொழி மலையாளம் – நான்கு மொழிகளிலும் ஹைக்கூ யுத்தியுடன் மூன்று வரிகளிலேயே படைத்து இருப்பது சிறப்பு. தமிழ், ஆங்கிலம் இரண்டு மொழி மட்டும் நான் அறிந்தது. எனவே இருமொழி சிறப்பை மட்டும் எடுத்து இயம்பி உள்ளேன். பதச்சோறாக சில ஹைக்கூ கவிதைகள்.

பாலுக்கு அழும் குழந்தை
குடம் பாலை குடிக்கிறது
சாமி சிலை

BABY CRYING FOR MILK
THE JUG DRINKS MILK
GOD STATUE

இந்த ஹைக்கூவின் மூலம் பகுத்தறிவு சிந்தனையை விதைத்து உள்ளார். ஏழைக்குழந்தை பசியால் வாடும் போது, கடவுள்சிலைக்கு பாலாபிசேகம் செய்வதில் பயனில்லை என்பதை நன்கு உணர்த்தி உள்ளார். ஆங்கில மொழிபெயர்ப்பும் பொருத்தமாக உள்ளது.

நிறங்களை
நகலெடுப்பதில்லை
நிழல்கள்

COLORS
NOT COPYING
SHADOWS

68|• 2

நிழல் என்பது கருப்பாகவே இருக்கும். நிழல் கண்ணாடி போல வண்ணத்தை எதிர்பார்க்க முடியாது. காட்சிப்படுத்தல் ஹைக்கூவின் மூலம் சிந்திக்கவைத்துள்ளார்.

அம்மாதாயே என்றார்பிச்சைக்காரர் அவசரமாய் வந்து போட்டேன் கதவின்தாழ்பாள்.

SAID THE MOTHER BEGGER
I SAME IN A HURY
DOOR LATCH

ஹைக்கூ கவிதையில் மூன்றாவது வரி எதிர்பார்த்தது இல்லாமல்வேறாக இருக்கும். அவசரமாக வந்து பிச்சை போடுவார்கள் என்று எதிர்பார்த்தால் கதவிற்கு தாழ்பாள் போடுகிறார்கள். இன்றைய மனிதர்களும் பலர் பிச்சை போட மனமின்றியேதன்னல வாழ்வே வாழ்கின்றனர்.

தொழிற்சாலை புகை
வேகமாய் பரவுகிறது
தொற்று நோய்கள்

INDUSTRIAL POLLUTION
SPEREADS FAST
INFECTIOUS DISEASES

இந்த ஹைக்கூ கவிதையினைப் படித்தபோது தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டமே நினைவிற்கு வந்தது. அநியாயமாக 13 உயிர்கள் பலியானது. ஒருவழியாக மூடப்பட்ட நச்சுஆலை, இன்னும் உச்ச, உயர்நீதி மன்றங்களில் மேல்முறையீடு செய்வதும் திறக்க முயற்சிசெய்வதும் வேதனை.

இரண்டு லாரிகள் மோதல்
இரண்டின் முகப்பிலும்
அம்மன் துணை.

TWO TRUCKS COLLIDE
ON THE FACE OF BOTH GODDESS SUB

அம்மன் துணை என்று எழுதி இருந்தாலும் கவனக்குறைவாக ஓட்டினால் விபத்து நடக்கத்தான்செய்யும் என்ற விழிப்புணர்வு விதைக்கும் விதமான ஹைக்கூ நன்று. எளிமையான ஆங்கிலச் சொற்கள் பயன் படுத்தி இருப்பது எளிதாக புரிந்துகொள்ள உதவுகின்றது.

நோய் விட்டுப் போக
வாய் விட்டு சிரிக்க முடியல
வாடகை வீடு!

GET SICK
CAN’T LAUGH OUT
RENTED HOUSE

உண்மை தான். வாடகை வீட்டில் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை. எப்போது வேண்டுமானாலும் காலி யாக்கச் சொல்வார். வாடகை கூட்டிக் கொடு என்பார். ஆணி அடிக்காதே என்பார். சொந்த வீட்டின் மகிழ்ச்சி, வாடகை வீட்டில் இருப்பதில்லை என்ற உண்மையை உணர்ந்து வடித்த ஹைக்கூ நன்று.

உடைந்த பலூனுக்கு
இரங்கல் தீர்மானமோ
குழந்தைகள் கண்ணீர்

FORA BROKEN BALLOON CONDOLANCE RESOLUTION CHILDREN TEARS

கையில் வைத்திருக்கும் பலூன் உடைந்து விட்டால் குழந்தை உடன் அழத்தொடங்கி விடும். சமாதானம் செய்வதற்குள் போதும் போதும் என்றாகி விடும். குழந்தையின் அழுகையை இரங்கல் தீர்மானம் என்று சொல்வது நல்ல சொல்லாட்சி. ஆங்கில ஹைக்கூவும் எளிதில் புரியும் வண்ணம் எளிமையாக இருக்கின்றன, சிறப்பு.

கட்டி முடிந்தது வீடு
முடியாமலே இருக்கிறது
அசலுக்கான வட்டி!

2  •|69

THE HOUSE IS FINISHED
IT IS IMPOSSIBLE
INTEREST ON THE ORIGINAL

இதில் ORIGINAL என்றசொல்லிற்குப்பதிலாக CAPITAL என்ற சொல்லைப் பயன்படுத்தி இருக்கலாம். கொரோனா காலத்தில் வருமான மின்றிமக்கள் தவித்தப்போது மாதத்தவணை கட்டமுடியாமல்வேதனைப்பட்டனர். வட்டிக்கு வாங்கி வீடு கட்டுவதை விட வாடகை வீடே மேல் என்று உணர்த்தி விட்டனர். தவணை கட்ட வேண்டாம் என்று சொல்லிவிட்டு தற்போது கூட்டு வட்டிப் போட்டு வசூல் செய்து வாட்டி வருகின்றனர். மக்கள் சொல்ல முடியாத துயரத்தில் வாடி வருகின்றனர். ஆயிரம் கோடிகளைக் கொள்ளையடித்த கொள்ளையர்-களை தப்பிச்செல்ல விமானத்தில் வழியனுப்பி வைக்கின்றனர், அவல நிலை.

முகம் தெரியாவிட்டாலும்
மனம ரணமாகிறது
அவசர ஊர்தியின் அலறல்!

EVEN IF THE FACE IS NOT VISIBLE THE MIND DIES
THE SCREAM OF AN AMBULANCE

அவசர ஊர்தியின் சத்தம் கேட்டால் மனதிற்கு படபடப்பு வந்துவிடும். வழியில் சென்று கொண்டு இருந்தால் ஊர்திக்கு வழி விட்டுவிட்டு உள்ளே இருப்பவர் முகம் தெரியாவிட்டாலும் யாரோ, எவரோ? என்ன ஆனதோ? உயிருக்கான போராட்டம், உயிரோடு போராட்டம். இப்படி பல நினைவுகள் வந்து இளகிய மனம் ரணமாகி விடும். அந்த மனிதாபிமானத்தை ஹைக்கூ ஆக்கி உள்ளார்.

4 மொழிகளில் வந்துள்ள முதல் ஹைக்கூ நூல். ஆசிரியருக்கு பாராட்டுகள்.
n

காலமெல்லாம் காத்திருப்பு

பள்ளியில்சேர்க்கைக்கு
பகல் இரவு பாராமல்
பல மணி நேரம் காத்திருப்பு… …

பள்ளியில்சேர்ந்தபின்பு
சாதிச் சான்றிதழுக்கு
பல நாட்கள் காத்திருப்பு… …

பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரி சேர்க்கைக்கு
கால்கடுக்ககாத்திருப்பு… …

பட்டம் வாங்கியபின்

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வெகு வருடம் காத்திருப்பு… …

அரசு வேலைகிடைத்தபின் அகவிலைப் படிக்காக
அன்றாடம் காத்திருப்பு… …

வாங்கிய பணத்திற்கு வாக்களிக்க வாக்குச் சாவடிகளில்
வரிசையில்காத்திருப்பு… …

கொரோனா தொற்று வந்தோர் ஆயுளைக் காத்துக் கொள்ள ஆக்சிஜனுக்கு காத்திருப்பு… …

கொரோனா நிவாரணம் பெற குடும்ப அட்டைக்கு
கூட்டம் கூட்டமாய் காத்திருப்பு… …

நிவாரணம் பெறும் முன்னர் நிர்க்கதியாய் இறந்தவர்கள் தகன மேடை கிடைக்க
மயானத்தில்காத்திருப்பு… …

கொள்ளியில் நெருப்பேற்ற பிள்ளைகள் வராத நிலையில் அனாதைப் பிணங்களெல்லாம் அடுக்கடுக்காய்க் காத்திருப்பு… …

ப. சரவணன்
கல்பாக்கம்

70|• 2

• சொல்லின் செல்வர் எப்படி இருக்க வேண்டும்?
தமிழோவியன், பரமக்குடி
அனுமனைப் போல் இருக்க வேண்
டும். பேச வேண்டியதை மட்டும் பேச வேண்டும்; கம்பன் அனுமன் வழியாக, தன்னைச் சொல்லின்செல்வர் என்று வெளிப் படுத்தியுள்ளார்.

• சிலப்பதிகாரம் ஒரு புரட்சிக் காவியம் என்று சொல்லப் படுகிறதே? சின்னப்பா தேவராஜ், நாகை
ஆம் . மன்னர்களையும் கடவுளரை
யும் காப்பியத்தலைவர்களாகப் பாடிவந்த காலத்தில் சாதாரண குடிமக்களைக் காப்பியத்தலைவர்களாகப் பாடியதே ஒரு புரட்சிதானே!

• தற்கால நாளிதழ் வாரஇதழ் மாத இதழ்களில் கவிதைகளுக்கான பக்கங்கள் குறைந்து வருகிறதே?
பன்னீர்செல்வம், திண்டிவனம்
அது இதழ் நடத்துபவர்களின் கொள்கை முடிவாக இருக்கலாம். தமிழ்நெஞ்சம் இதழில் அந்தக் கஞ்சத்தனம் இல்லையே.

• தமிழின் வயது 2300 ஆண்டுகள்
என்று கூறப்படுகிறதே?
செல்வராஜ், கீரனூர்
அது உண்மையாக இருக்க முடியாது. திருக்குறளின் வயதே 2000 ஆண்டுகள். ஒரு மொழி தோன்றி பண்பட்டுச் சிறந்து பல இலக்கியங்களைப் படைக்க 2000 ஆண்டுகளாவது வேண்டும் என்று கணக்கிட்டாலும் 4000 வருடங்களுக்கு மேலாகத்தானே இருக்க வேண்டும்.

• உங்களிடம் எந்தக் கேள்வி வேண்டு மானாலும் கேட்கலாமா அல்லது இலக்கியம் சார்ந்துதான்கேட்கவேண்டுமா?

எதைப்பற்றி வேண்டுமானாலும் கேட்கலாம். தனிநபர் விமர்சனம் அரசியல்

கலக்காமல் இருந்தால்மகிழ்வு.

• காலதாமதமாக நிகழ்வுகளுக்கு
வரும் சிறப்பு விருந்தினர் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
பக்கிரிசாமி, மயிலாடுதுரை தாமதமாக வந்தால்தான் அவர் எல்லோரது கவனத்தையும் ஈர்க்க முடியும் . மிகவும் சுறுசுறுப்பாக இருப்பது போன்ற தோற்றத்தை உருவாக்க இயலும். சரியான நேரத்திற்கு வந்தால் வேலையற்றவர் என்று நினைத்து விடுவார்களே!

• காதலைப்பற்றி ஒரு சில வரிகள்.
சம்சுதீன், அம்பை
காதல் ஒரு உணர்வு; அதனை உணராது எவரும் இருக்க இயலாது. உணர வில்லை என்றால் அவர் மனிதராக இருக்க இயலாது

• இளமையில் வறுமை கொடிதா?
செந்தாமரை, சென்னை
அப்படித்தான் ஔவை சொல்லி யிருக்கிறார். ஆனால் அதனை எண்ணிக் கொண்டேசோர்ந்து விடாமல் வறுமையை வென்று வாழ வேண்டும்

• தமிங்கிலத்தில் பேசும் மனிதர் களைக் கண்டால் என்ன செய்வீர்கள்?

தமிழன்பன், கிளியனூர்
நான் என்ன செய்வது? கொஞ்சம் பரிதாபப் படுவேன். என் மீதும். எல்லா நேரமும் தூய தமிழில் பேசமுடிய வில்லையே என.

• பாவலர் கவிஞர் கவிமாமணி என்று சொல்லிக் கொள்பவர்கள் பற்றி.. பண்ணையார் மகள், பூம்புகார்
அது அவரவர் விருப்பம் பாவடித் தால் பாவலர் கவிதை எழுதினால் கவிஞர் பல கவிஞர்களுள் சிறந்தவர் எனில் கவிமாமணி. தகுதி உள்ளதா இல்லையா என்பதைக் காலந்தான் முடிவு செய்யும்.

 

2  • |71

 
இனி தொடரும்.
கேள்விகளைகேட்கலாம்.

உறக்கம்
இமையின்றிவருந்துகிறது
ஆந்தை

மழை பொழியும் ஈரச்சாலை வீணடிக்கப்படும் குழாயடியில் தலை முழுகலில் குடங்கள்

நீரோடு உலரும் தனிமை கைகோர்த்து இலை உதிர்த்து அன்பை சிந்தும் மரநிழல்

காயாத கானகத்தில்
கானம் பாடுகிறது
காய்ந்தசருகுகள்

வறுமை

மணல் வீட்டைகட்டியதும் உணவைதேடுகிறது குழந்தை

உலகையே மெல்லவளைக்கிறது வெள்ளை முத்தாய் மலரும் பூவின் மேல் பனி

கானல்விளையாடும் களம் கட்டிய பட்டி ஆடுகளுடன் விளையாடும் கழனி நண்டுகள்

பெண் பிள்ளைகள்

புகைந்து கொண்டே இருக்கிறது பெண்ணிய விறகுகள்

வானம் பார்த்த பூமி
கிடைத்தவெடிப்புகளில் குடியேறும் வயல் எலிகள்

தனிமை
எதிரும் புதிருமான உருவத்தில் வானில்தெரிகிறது மேகங்கள்

கார்கவி சேகா
நாகப்பட்டினம்

அம்மா

வையகம் உதித்தெழும்
ஒற்றைச்சொல்
பூமியில் அவதரித்த
உயிரின் வார்த்தை

கடவுளின் வையக
பிம்பம் நீயம்மா
அன்பின் மொத்த
வடிவமே அம்மா
அரவணைப்பின்
மொத்த ஒளி நீயம்மா
இயற்கையின் முழு
உருவம் நீயம்மா

மூச்சடக்கி சுவாசம்
அளித்தவள்ளல்நீயே
உதிரம் இழந்து
உணவளித்த உத்தமி நீயே தூக்கம் கலைந்து
சுகம் தந்த சுந்தரியே
வலியை மறைத்து
வண்ணம் தீட்டிய வனிதைநீயே

அம்மா
உலகம் முடியும் வரை
மறையாத மந்திரம் நீதானே

வாழையூர் கவிநிலா



72|• 2

‘‘அம்புஜம்..., ‘ஏண்டி என்ன தனியா விட்டுட்டு போன?’’’ என்று புலம்பியபடி கட்டிலில் இருந்து தட்டுத் தடுமாறி எழுந்திருக்க முடியாமல் எழுந்து கைத்தடியை பற்றினார், நாகராஜன்.

வார்த்தைக்கு வார்த்தை ‘அம்புஜத்
தின் பெயரை’ உச்சரிக்கும் அவருடைய நாவுகளும் வரண்டு விட்டது போலும். இல்லாத அம்புஜத்திடம் தண்ணிகொண்டு வரச்சொல்வதுமாக...

அவளின் இறப்பும் கூட இன்னும் மனதில் ஆழப்பதியவில்லை என்பது போன்று ‘நினைவுகளில் முழுவதுமாய் நிரம்பி இருந்தாள் அம்புஜம்’.

அம்புஜம் உயிரோடு இருக்கும் பொழுது அவளை பாராட்டவில்லை சீராட்ட வில்லை ஏன் ஒரு படி மேலே கூற வேண்டுமென்றால் அவளை ஒரு மனைவியாகவோ அல்லது ஒரு மனுஷி யாகவோ நடத்தியது கூட கிடையாது. எப்பொழுதும் மூஞ்சியை கோபமாக வைத்துக் கொள்வதும், சிடுசிடுவென்று எரிந்து விழுவதும் வழக்கமான ஒன்று.

 

மருந்துக்குக்கூட அன்பான வார்த்தை
வெளிப்பட்டது கிடையாது.

அப்படி இருந்த மனுஷன் அவளு
டைய இறப்புக்கு பிறகு இப்படி மாறியதன்
காரணம் தெரிந்தால் நாகராஜனை பற்றிய
கண்ணோட்டம் அப்படியே நொடிப் பொழுதில் மாறிவிடும்.

தண்டனை யில் மிகப்பெரி ய தண்டனை தனது கணவன் தன்னை நிராகரிப்பது. அதிலும், பெரிய கொடுமை ஏன் தன்னை நிராகரிக்கிறான் என்கிற காரணமே அறியாமல் இருப்பது.

அப்படிப்பட்ட வேதனையிலும், மருமகள் வந்த பிறகும்கூட தனது ‘கணவன் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வேலையையும் மிகுந்த விருப்பத்துடனும் அதீத அக்கறையுடன் தானே செய்வதில் முனைப்போடு செயல்படுவார் ‘.

‘அம்புஜம்... உண்மையில் ஒரு சிறந்த மனைவி ‘.

‘திடீரென்று பரவிய ஆட்கொல்லி

  •


2  •|73

நோய் அம்புஜத்தை ஆட்கொள்ள நிர் மூலமானது நாகராஜனின் வாழ்க்கை’.

மனைவியின் இழப்பிற்கு பின் கொஞ்ச நாளிலேயே நிராகரிப்பின் வலி யையும், வேதனையையும் அனுபவிக்கத் தொடங்கினார்நாகராஜன்.

‘மகனின் - மருமகளின்’ உதாசின மான பேச்சும், ஏச்சும் அவ்வப்போது அதிகப்படியான அழுத்தத்தைத் தர மன உளைச்சலுக்கு ஆளாக்கிய போது மனைவியின் அருமையை உணரத் தொடங்கினார், நாகராஜன்...!

சர்க்கரை நோயாளியான நாக ராஜன் சரியான நேரத்திற்கு உணவு எடுத்தே ஆக வேண்டும் என்ற கட்டாயத் தில் இருந்தும்கூட அவரை கவனிப்பார் யாருமின்றி ஒருவாரு தடுமாறினார்.

அம்புஜம் இல்லாததை...
ஒருவகை வெறுமையை... தனக் கானளின் வெற்றிடத்தை... அவளின்நினைவுகளும் அன்றாட நிகழ்வுகளும் ஒவ்வொன்றாய்
அரங் கேற்றம் செய்தது.

‘மனைவியின் மரணத்தருவாயில் தன்னுடை ய காதலை, அளப்பரிய அன்பை அவளிடம் வெளிக் காட்டியவர், அவள் உயிரோடு இருக்கும் பொழுதே காட்டாமல் போனது எவ்வளவு பெரிய குற்றம் என்பதை உணரத் துவங்கினார்’, நாகராஜன்.

இத்தனை நாளும் கணவனின் காதலை புரியாமல்... வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம் தெரியாமல்... நிராகரிப்பு என் றெண்ணி இத்தனை காலமும் குறை யோடு கழித்ததை எண்ணி வருந்தினாள், அம்புஜம்

‘‘உங்களைத் தனிமரமாக விட்டுச் செல்கிறேனே என்ற ஏக்கம் என்னை வாட்டுகிறது’’, என்றவள்... கணவனின்

கைகளை அன்போடு வருடி... அழுத்தமாக பதித்த முத்தத்தின் ஈரம் காய்வதற்குள்... அம்புஜத்தை காலன் கொண்டு போய் விட்டான்.

அதிகாலை 5 மணிக்கெல்லாம் எழுந்து பழக்கப்பட்டவர், நாகராஜன். அம்புஜம் இருந்தவரை கணவருக்கென்று முந்தின இரவில் ஒரு பால் பாக்கெட்டை குளிர்பெட்டியில்வைத்து விட்டு அதிகாலை நாகராஜன் காலைக் கடன்களை முடித்து விட்டு வந்ததும்... ‘கணவர் கேட்பதற்கு முன்பே... சுட சுட பில்டர் காபி போட்டுக் கொடுப்பது’, அம்புஜத்தின் வழக்கம்...! ஆனால் இன்றோ மணி ஒன்பதரை ஆகியும் படுக்கையறையை விட்டு எழுந்து வராத மருமகள்... ஏனென்று கேட்க முன்வராத மகன்...!

மனைவியின் பெயரைச்
சொல்லி அழைத்திட கூட தேவை யில்லை... தேவை யான அத்தனை வேலைகளையும் நினைத் தாலே செய்து முடித்து விடுவாள், அம்புஜம்.

இன்றோ அ ம் பு ஜ ம்,
எ ன் கண்ணாடியை எடுத்து தா என்பதற்கும் ஒரு காபி தா என்று கேட்பதற்கும் ஆள் இல்லை, கேட்டாலும் கொடுப்பதற்கும் ஆளில்லை என்ற ‘ஏக்கம்‘ அவரைக் கொல்லாமல் கொள்கிறது’.

‘தனிமை எவ்வளவு கொடியதென்று’ புரிய தொடங்கியது...

‘மனைவியை சுற்றிய நினைவுகள் ஏக்கமாக’ நோய்வாய்ப்பட்டார்நாகராஜன்

நாளாக நாளாக நாகராஜனின் ஏக்கப் பெருமூச்சு தொண்டைக்கும் நெஞ்சுக்கும் இடையில் வாழ்க்கையின் கடைசி நிமிடங் களை எண்ணியபடி இறுதி யாத்திரைக்கு தயாராகியது...!
n

74|• 2

இன்று எந்த உறவை எடுத்துக் கொண்டாலும் அவற்றுக்கிடையில் ஆணிவேராக அமைத்திருப்பது நம்பிக்கை எனும்
ஒற்றைவார்த்தை தான்.
அதனால் தான் ஒருவரையோ ஒரு விடயத்தையோநம்பிய பின் தான், நாம் அதனை ஏற்றுக் கொள்கிறோம். அதில்நமது முழுக்
கவனத்தையும் ெலுத்துகிறோம். அப்படியான நம்பிக்கை சிதைந்திடாதிருப்பதில்நாம் ஒவ்வொருவரும் மிகக் கவனமாக இருக்கவேண்டும்.

மனித்தனுக்கு இறைவன் மீதும் பெற்றோருக்கு தன் பிள்ளைகள் மீதும் பிள்ளைகளுக்கு தன்
உடன் பிறப்புகள் மீதும்
ஆசிரியருக்கு மாணவர்கள் மீதும் கணவனுக்கு மனைவி மீதும் மனைவிக்கு கணவன் மீதென்றும் இன்று நம்பிக்கை பல விதமாகப் பார்க்கப் படுகிறது.

இவர்களுக்கிடையிலான நம்பிக்கை எனும் பாலம் ஏதோ ஒரு விடயத்தில் சிதைக்கப் பட்டாலோ அல்லது உடைக்கப் பட்டாலோ அந்த உறவுகளின் நிலை அவ்வளவு தான்..

‘‘உன்னைப் போய் நம்பினேனே!’’ ‘‘உன்னால் தான் நான்
தேவையில்லாத நம்பிக்கைவைத்து ஏமாந்து போனேன்...’’
‘‘அன்று அதிகமாகநம்பியதால் தான் இன்று நான் அதிகமாக அழுகிறேன்.’’

இவ்வாறு சில குற்றச்சாட்டுகள் மனது சஞ்சலப் படும் போது இந்த நம்பிக்கைக்கு
எதிராக கூறப்பட்டாலும், உண்மையான இன்னொரு பக்கமும் இதற்கு இருக்கத் தான் செய்கிறது.

அது என்ன?!!

நம்பிக்கை தான் நம்மை வாழவைக்கிறது.
நம்பிக்கை தான் நம்மை நாயகர்களாக்குகிறது.
நம்பிக்கை தான் நம்மை சாதிக்கவைக்கிறது.
நம்பிக்கை தான் நம் வாழ்க்கைப் பாதையை செப்பனிடுகிறது. அந்தவகையில்நம்பிக்கையை முழு மனதுடன் ஒருவர் மீதோ அல்லது ஒன்றின் மீதோவைக்க எம்மைநாமே பழக்கிக் கொள்ளவேண்டும். ஏனெனில்,
நம்பிக்கை இன்றேல்
வாழ்க்கை இல்லை
நம்பிக்கை இன்றேல்வசந்தம் இல்லை நம்பிக்கைவராத வரை மனது துருப்பிடித்த இரும்பாகிறது. நம்பிக்கைவராத வரை இதழ்கள் மெய் பேச மறுக்கின்றது நம்பிக்கையைதொலைத்தவர்களின்
வாழ்க்கைநரகமாகிப் போகிறது..

எனவேநம்பிக்கைவைப்போம்
நட்புக்களைதொடர்வோம்..

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

 

2  •|75

புயலாய் மாறடி பெண்ணே!

கண்ணெனப் பேச்சில்ச�ொல்லும் கல்மனச் சமூகம் உன்னை! பெண்ணென இழிவாய்க் கூறி பெருமைகள் சிதைக்கச் செய்யும்! மண்ணதில்சமமாய் எண்ண மறுத்திடும் மறவா உண்மை! விண்ணிலும் கால்கள் பட்டு வீறுடன் நடப்பாய் பெண்ணே!

உயர்வினை இகழ்வார் தம்மை உதறியே தள்ளிச் செல்வாய்! செயலதில் திறனைக் காட்டு! சீறிடும் அலையாய்ப் பாய்வாய்! கயவரை எதிர்த்தேநின்று காட்டியே கொடுத்து வீழ்த்து! புயலென மாறிப் பெண்ணே பொறுப்பினை ஏற்று வெல்வாய்!

தற்கொலை தீர்வே அன்று! தன்னிலை உணர்வாய் வென்று! கற்றது பலனை ஈயும்!
கருத்துடன் நினைவில்கொள்வாய்! வெற்றியும் உன்னைச் சேரும்! வியத்தகு சிகரம் ஏற்றும்!
பெற்றிடும் புகழும் பேரும்
பீடுற உயர்த்தும் பாரில்!

- முனைவர் ஓசூர்மணிமேகலை

நீ நீயாக...

நீயும் நானும் என்றாய்,
புரிந்து கொள்
நீ நானாக முடியாது
நான் நீயாகவும் முடியாது
நம் இருவருக்கும் இடையில்நிறைய முள் வேலிகள் இருக்கின்றன தடைகளை தாண்டுதல் தகாது தகாததை தொடரவும் கூடாது அதனால், நீ நீயாகவும்,
நான் நானாகவும் இருக்கலாம்!

அ...

766|•   22

வீட்டை தாளிட்டு கடைத்தெரு
விற்கு செல்லும் போது ஐந்து வீடு தாண்டி இருக்கும் வழக்கறிஞர் ராஜா என்னை அழைத்தார். நானும் வெளியூரில் வேலை பார்ப்பதால் வாரம் ஒரு முறை தான் வீட்டிற்கு வருவேன். இந்த தடைவை இரு வாரம் கழித்தே வந்தேன். நலம் விசாரிப்பத ற்கா க இ ரு க் கு ம் எ ன் று நினைத்து அவரை வரவேற்றேன்.

வந்தவ எதுவும் தப்பா முடிவெடுக் காதீங்க…. நல்ல படியா யோசிங்க… நா இருக்கேன் பாத்துக்கலாம் என்று எனக்கு புரியாமலேயே பேசிக் கொண்டிருந்தார்

நான் இடைமறித்து சார்… நீங்க வழக்கறிஞர் என்பதை என்னிடம் நிரூபிக் க ாதீங்க, என்ன விசயத் தை நே ரா சொல்லுங்க என்றேன்.

என்ன பேராசிரியரே, தெரியாமல் பேசுகிறீர்களா, இல்லை… எனக்கு தெரிய வேண்டாம் என்று பேசுகிறீர்களா, நேற்று உங்க ள தே டி நீதி மன்ற த்திலிரு ந் து விரைவுத் தபால் வந்தது. நான் தான் உங்க வீட்டிற்கு வழி கூறினேன். அதை பற்றித் தான் பேசுகிறேன்.

சார். இன்னைக்கு விளையாட்டு
என் கூடவா, எனக்கு நீதிமன்றத்திலிருந்தா, அட, போங்க.பேராசிரியரே, உண்மையாக கூறுகிறேன்.

ராஜா சார்…

குரல் வந்த திசையில் இருவரும் திரும்பினர்.

நதீிமன்ற ஊழியர் நின்று கொண்டி ருந்தார். வணக்கம் சார், ஜான் சார் வந்துட்டாரா, நேற்று வீடு பூட்டப் பட்டிருந்தது. இப்ப அங்க தான்போறேன்..

நல்லதா போச்சு… இவரு தான் ஜான் என்று கூறிவிட்டு தபாலை வாங்கி என்னிடம் தந்தார்..

இதுல… பெற்றுக் கொண்டேன்
என எழுதி கையெழுத் து போ டுங்க என்றார் ஊழியர்..

எனக்கு எதுவும் புரியல.. யார்? எனக்கு….

சார், உங்க மனைவி மூலமாக வழக் கறிஞர் சுதா நீதிமன்றத்தில் விவகாரத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதற்கான சம்மன் இது, என்று சொல்லி முடிப்பதற்குள் நான் மரம் போல் சரிந்து விழுந்தேன். கண்ணை திறக்க முடியவில்லை, பேச வார்த்தைகள் இல்லை. ஆனால், இருவரும் என்னை எழுப்பும் சத்தம் கேட்கிறது. என் கண் திரையில் வந்து நின்றாள்.. எதுவும் கூறாமல் அவள் சென்று கொண்டிருக்கிறாள். நான் மேரி… மேரி என முனு முனுத்தபடி

 


 

2  • |77

      

 

கண்திறந்தேன்… ஒரு நிமிடத்தில் என் உயிர் வெளியேசென்று வந்தது போல் உணர்வு…

சாரி.. கஷ்டமாக இருக்கும். மனச தைரியமா வைங்க.

எப்படி?. காலையில் அழைபேசியில்
நல்ல முறையில்தான்பேசினாள்… பின்பு இது… கடவுளே என்று கத்தி அழுதேன்..

பேராசிரியரே, நீங்க பதட்டமாகுறத பாத்தா!... சரி, உங்க மனைவியே பார்த்து கேளுங்க… அப்புறமா இந்த தபால் வாங்களாம். இரண்டு நாள் கழித்து நீதிமன்ற ஊழியர வரச்சொல்லலாம். ஒரு நூறு ரூபாய் தாங்க, அவரிடம் பேசி சரி கட்டுறேன்… என்று வழக்கறிஞர் கூறினார்.

அவரோட வருமானத்திற்கு நம்மள பாக்க வந்திருக்கிறார் என்று அப்போது தான்தெரிந்தது… ஊழியர் ஜானிடம், சார். உங்களுக்காக பாக்குறேன்.. இரண்டு நாள் கழித்து வருகிறேன் என்று கூறி

விட்டு இருவரும் நகர்ந்து சென்றனர்.

செய்வதறியாது திகைத்து வீட்டை நோக்கிநடக்க தொடங்கினேன். நினைவு கள் அழியாது என்பார்கள். பழைய சம்பவங்கள் எதிரேதிரையிட்டது…

மேரி சொன்னது போல தான் நான் நடந்தேன். வீட்ட விட்டு அப்பா கூட சண்டை போட்டு வெளியே வந்து மாமனார் வீட்டில் இருந்தோம்;..

அம்மாக்கு கோவம் இருந்தாலும் போனில் பேசுவாங்க…

மேரி அப்பா இங்க இடம் இருக்கு வீடு கட்டுங்க, நா லோன் ரெடி பன்றேனு சொன்னாருனு சொன்னதும் அம்மா கோவத்துல திட்டுனது இப்ப கூட மறக்க முடியல… அதேலோன்ரெடி பன்னி வீட்டு கடனை அடைக்க அப்பா, உன்னோட சம்பள சான்று கேட்டாரு, அந்த கடன் தொகையே தம்பி கட்டுவான்.. உனக்கு

78|• 2

எந்த பிரச்சனையும் வராதுனு, சொன்ன மனுசன்ட தரேன், தரலனு, எதுவுமே சொல்லாம நீ விட்டுகுள்ள போய்ட… உன்ன ரொம்ப நம்புன மனுசன, நீ உள்ள போய் சம்பள சான்று எடுக்க தான் போயிருக்கனு அவரு வாசல்லயே நிக்க வச்சுட்ட, அவ வர மாட்டான் நீங்க வாங்கனு மாடிக்கு வரச்சொல்லிட்டே..

படி ஏறும் போது வந்து எட்டி பாக்குற நீ…

அடுத்த நாள் உன்னோட மனைவி வந்து நாங்களே ப ணம் இல்லாமா இருக்கோம். என்னுடைய சம்பளமும் அவரோட சம்பளமும் பிள்ளை படிப்புக்கு வேணும். கொழுந்தனார் சம்பளம், மாமா ஓய்வுதியம் வச்சு என்ன செய்யபோறீங்க, சொல்லிட்டு, போய்…டா, நா எதுவுமே பேசல… அப்புறம் என்ன நடந்துச்சோ போய்.. ட… நடக்கட்டும் எல்லாமே நல்லதாநடக்கட்டும்..

அங்க நீ விடு கட்டுனா, எல்லாரும் தப்பா பேசு வாங்க, நீ தனியா இடமோ, வீடோ வாங் குனு சொன்னாங்க … பின்னாடி அவ பேச்ச கேட்டுகிட்டு போற, தனியா கஷ்டப்படும் போது தெரியும்னு அப்பா கத்துறது கேட்டது..

இப்ப அது புரியுது…

இடம் வாங்கி கட்ட முடியாது,
வீடு வாங்களாம்… முடிவெடுத்து எல்லா பக்கமும் வீடு பாத்தேன்.. நா சொன்ன துக்காக அப்பா, அம்மா, தம்பி வந்து வீடு பாத்து கருத்து சொன்னாங்க..

நண்பரின் உதவியுடன் ஒரு வீடு பாத்து பேசி, இரண்டு வாரம் கழித்து பத்திரம் போடலாம் என்று கூறி நான் வெளியூர் வந்தேன்.

மூன்று நாட்கள் கழித்து என் மனைவி போன் செய்து உடனே வாங்க, இங்க வீடு பாத்தாச்சு, உடனே முடிகனும்

சொல்லி வச்சுட்டா.. இரவு ஏழு மணிக்கு படுக் கை வசதி கொண்ட விரைவு பேருந்தில் ஏறியதிலிருந்து தூக்கமே வரவில்லை.. காலையில் நான்கு மணிக்கு ஊர் வந்து சேர்ந்தேன்..

வீட்டு ஓசை மணியை அடித்தேன். தூக்க கலக்கத்தில் கதவை திறந்தாள். வ ாங்க, பத்து மணிக்கு போகணும். இப்ப தூங்குங்க எள்றாள். படுத்திருக்கும் மகனை பார்த்தேன்.. நமக்கு ஒரு வீடு என்ற நினைவில் கண் அசைந்தேன்…

காலையில் வீட்டை பாக்க சென்

ற�ோம்… மனம் குழம்பியது.. மனைவிக்கு பிடித்துள்ளதால் சரி என்றேன்..

உங்க வீட்டுக்கு சொல்லிருங்க… வந்து பாக்கட்டும்.. வீடு இது தான் முடிவா சொல்லிருங்க… மரியாதைக்கு என்பெற் ற�ோர் வந்து பார்த்து நல்லா இருக்கு.. என்று சொன்னவர்கள் இறுக்கமான நிலையில் இருந்தார்கள்.. எனக்கு புரிந்தது.. வீடு நீள வாக்கில் இருந்தது.. எதுவும் கூறாமல் வழி அனுப்பிவைத்தேன்..

உரிமையாளரிடம் பேசி அனைத் தையும் பதிவு செய்து சொந்த வீட்டின் கதவை திறந்தோம்..

நினைவுகளோடு வீடு வந்து சேர்ந் தேன்… நாங்கள் வீடு வாங்கிய நினைவில் திறந்த அழுத்தம், விவாகரத்து தபால் நினைவில் நான்தனியாக திறக்கிறேன்… நான் தெருவில் நடக்கும் போது அனை வரும் என்னையே பார்த்தற்கான பொருள் இதுவா…

வீட்டு ப டியில் அ ம ர்ந்தேன்.. மேரிக்கு போன்செய்தேன்.. அக்கறையாக விசாரித்தாள்.. விவாகரத்து எதுக்கு என்ற தும், ஓ… வந்துருச்சா… ஆமா.. எனக்கு உங்க கூட வாழ பிடிக்கல… என்று கூறி அழைப்பை துண்டித்தாள்…

அம்மாவிற்கு போன் செய்து

2  •|79

விஷயத்தைச் சொன்னேன்…

வீட்டுக்கு வா… பாத்துக்கலாம்… என்றார்கள்..

அப்பா கோவமாக பாப்பாருனு நினைச்சா, பரிதாபமாபாத்தார்… நீதிமன்றதபால் உடனடியா வாங்கு… தள்ளிபோடக்கூடாது… கைகுட்டை போல அவ கையிலேயே இருந்த, தூக்கிபோட்டுடாளா, அவ சொல்லறது எல்லாம் செஞ்ச, மகன் படிப்புக்குனு ஸ்கூல் மாத்துன, அவளும் அங்க வேலைய மாத்திக் கிட்டா, நீ ஒரு பக்கம், வீடு ஒரு பக்கம், பிள்ள, மனைவி ஒரு பக்கம்… தனியா போனா இப்படித்தான். பாசத்துக்கு அடிமை ஆய்ட… எங்கள நம்பள.. இப்ப?

தபால் பெற்று, வழக்கறிஞர் பீட்டர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.. அப்பாவின் நண்பர் அவர்.. தபாலை படித்து சிரித்தார்… எதுக்கு என்றதும் காரணமே சரியில்ல.. வாழ பிடிக்கலைனு இருக்கு… பாத்துக்கலாம் என்றார்.

நீதிமன்றத்தில்மனு நாள் வந்தது… நீதிபதியே சிரிப்போடு… காரணமில்லா விவாகரத்துக்கு.. கணவர் மீது எந்த குற்றச் சாட்டும் இல்லை.. அப்புறம் எதுக்கு?. மேரி முடிவாக இருந்தால் எனக்கு பிடிக்க வில்லை.. வேண்டும்.. என்று… அடுத்த மாதம் ஒத்திவைத்தார்நீதிபதி..

நாட்கள் ஓடின… நானும் பலமுறை போன் செய்து கேட்டேன்.. காரணம் கூற வில்லை… மகனிடம் கேட்டேன். தெரியவில்லை என்ற பதில் விரைவாக வந்தது… மாதங்கள் ஓடின.. தேவை களுக்கு பணம் பெற மட்டும் போன் செய்தாள் மேரி.. கோபம் இருந்தாலும் மனைவி யாயிற்றே.. தந்தேன்..

நீதிமன்றத்திலும் அதே பதிலை தந்தாள் மேரி. நீதிபதி அடுத்த மாதம் சரியான காரணம் கூறவில்லையென்றால் பொது வழக்காக மாறும் என எச்சரிக்கை விட்டனர். நான் என் மனைவி வேண்டும்

அன்பே அருக்காணி
அழகிய கிறுக்காநீ!
இதயக் களவாணி
உதய நிலவா நீ!
கம்மல் திருகாணி
கையில் மருதாணி!
பூசும் மகராணி
புன்னகை மலரா நீ!
படுக்கை தலகாணி
மடியை தர வா நீ!
கோதை அரசாணி
கொள்முதல் பரிசா நீ!
கோலக் கலைவாணி

ச�ோகம் கலைவாய் நீ!
கம்பன் எழுத்தாணி
குங்கும நிறத்தாள் நீ!
சந்தன பொன்மேனி
சம்மதம் தருவாய் நீ!
காதல் யுவராணி
கவிதையின் கருவாய் நீ! ஏற்றம் தரும் ஏணி
கனவை தருவாய் நீ!
வாழ்வின் அச்சாணி
வசந்த அழைப்பும் நீ!

- லீ.லியாகத்அலி

 



80|• 2

தெருவே வேடிக்க பாத்தாங்க. அந்தோனி சார் வீட்ட வித்திட்டு போய்டாங்க…

இப்ப தான் சந்தேகம் அதிகமாக வந்தது.. இந்த வீடு தான் வேண்டும் சொல்லி வாங்குனா, அந்தோனியும் இந்த தெரு கடைசில வீடு வாங்கி வந்தான். தப்பா இருக்கே.. மகனிடம் கேட்டேன்.. எட்டாம் வகுப்பு போற, உனக்கு எல்லாமே தொpயும், நா இல்லாத நேரம் அந்தோனி இங்க வருவாரா.

அப்பா, நீங்க கேக்குறது புரியுது.. அம்மாவ தப்பா நினைக்காதீங்க.. போன்ல பேசு வாங்க, ஆன்லைன் ரம்மி விளை யாடுவாங்க, அதுக்காக பேசிட்டு இருப்பாங்க..

மேரிக்கு போன்செய்து கேட்டேன்.. நடந்த விஷயம் எனக்கு தெரியும். நா எதுவும் தப்பா நினைக்கல, நீ வந்துரு…

மேரி.. இல்ல எனக்கு அசிங்கமா இருக்கு, என்னுடைய வீட்டு நபர்களே தப்பா பேசி, தெருவில் நடக்க முடியாம பண்ணிட்டாங்க.. பின்னாடி தப்பா நீங்க பேச வாய்ப்பாகும்.. எனக்கு புடிக்கவே இல்ல.. நீங்க வேற வாழ்க்கைய பாருங்க என்றாள்..

ஒரு பக்கம் அசிங்கமாக தெரிந்தா லும், மகனின் வாழ்வை புரிந்து கொள்.. இப்ப நீ தப்பா முடிவெடுத்து பின்னாடி கஷ்டப்படாதே என்றேன்..

மறுமுனையில் அமைதி தவழ்ந்தது.. சிறிது நேரம் போனதும்.. யோசிக்கலாம் என்று வைத்துவிட்டாள்.

கைகுட்டையாக நான்தான்பறந்து கொண்டிருக்கிறேன்… அவள் முடிவில் மாற்றமே இல்லை.. எனக்கு ஏமாற்றமே மிஞ்சியது…

வாழ்க்கை கைகுட்டை உணர் வாகவேசென்றது…
n

என்ற முடிவில் இருந்தேன்.. கோபத்தில் வேண்டாம் என்று கூற முடியவில்லை.. காரணம் மகன் வாழ்க்கை மற்றும் நான் பார்க்கும் அரசு வேலை..

மகன் தேர்வு விடுமுறையில் எனக்கு துணையாக வந்து இருந்தான்.. காரணம் கேட்டேன். நான் வாரம் ஒரு முறை தான் வருகிறேன். இங்கு என்ன நடந்தது. உனக்கு தெரிந்த செய்தியைசொன்னநம்ம சரி பண்ணலாம் என்றதும் முதலில் கூற மறுத்தவன் பின்பு காரணம் கூறினான்.

அம்மாவின் அப்பா, மாமா, அத்தை எல்லோரும் அம்மா கூட மோத வேலை பார்த்தா அந்தோனி வீட்டுக்கு போய் சண்டை போட்டாங்க, அப்புறம் அம்மாவையும் வந்து அடுச்சாங்க,

நா அந்தோனிட்ட பேசுறது அவ ருக்கு தெரியும். நீங்க எதுக்கு கேக்கு றீங்கனு அம்மாசொன்னாங்க.. எங்களுக்கு தப்பா படுதுனு சொல்லிட்டு பொய்டாங்க,

நினைவு
கண்ணாடி குடுவையில்
வாங்கி வந்த மீன்களிலொன்று காணாமல்போனதறிந்து
கலங்கிய

இரவின் குளத்தில்
நீந்திக் கொண்டேயிருந்தது என் நினைவு மீன்கள்...

நேசமுடன் ஈசு

2  • |81



பாரூக் என்பது எ னக்கு ஒரு சக்தி வாய்ந்த சொல்லாகவும் பழகிய பெயராகவும் இருந்து வருகிறது. எனது இளமைக்காலந்தொட்டு நான் வசிக்கும் ஊரில் இசுலாமியச் சகோதரர்களில் பாரூக் என்ற பெயர் தாங்கிய பெரியவர்கள் உண்டு. ஒருவர் அயல்நாட்டில் பொருளீட்டியவர்; இன்னொருவர் உள்ளூர்தொழிலதிபர். இருவருமே அன்பானவர்கள் மட்டுமன்றிமிகுந்த பண்பானவர்கள். தாயை உயிரினும் மேலாக நேசிப்பவர்கள். எனவே பாரூக் என்ற பெயர் என்னை வசப்படுத்திய ஒரு பெயர். இப்போது இந்த நூலின் கதாநாயகன் பெயரும் பாறூக். முந்தைய இருவரும் ஒரே ஊரில் அருகருகே இருந்ததால் அவர்கள் பெயருக்கு முன்னே அடைமொழி உண்டு. அதைப்போலவே இந்நூலின் கதாநாயகனுக்கும் பெயருக்கு முன்னே அவரது ஊர் உள்ளது. ஊர்பெயரால் அவருக்குப்பெருமை; அவர்பெயரால் ஊருக்குப் பெருமை. இது எல்லாருக்கும் வாய்க்காது. இவருக்கு வாய்த்திருக்கிறது. பாலமுனை என்ற பெயர் சிறந்த மோனையுடன் பாரூக்குடன் இணைந்து பாலமுனை பாறூக் என்று சிறப்புற்றுள்ளது.

தன் இலக்கியப் பயணத்தை எந்த ஆண்டு திருவாளர் பாலமுனை பாறூக் அவர்கள் தொடங்கியுள்ளார்களோ அந்த ஆண்டில் பிறந்த ஒருவரால் அவரது பொன்விழா இலக்கியப் பயண நூலுக்கு ஒரு மகிழ்வுரை எழுத வாய்ப்பு கிட்டியுள்ளது

என்றால் அதற்கு எல்லாம் வல்ல அந்த இறைவனுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும். ஆம் ஒரு நாட்டின் இலக்கியப் பெருந்தகையை, ஒரு பன்முக இலக்கிய ஆளுமையை, ஒரு பண்பட்ட மனிதநேயப் பண்பாளரைக் குறித்த நூலுக்கு மகிழ்வுரை வழங்க என்னைப் பணித்த அன்பு நண்பர் தமிழ்த் தொண்டர் ஐயா தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை போன்ற நாடுகளில்

  •

பாவேந்தல்பொன்னேடு நூலினை தரவிறக்கம் செய்து படிக்கமேலுள்ள DOWNLOAD படத்தைச் சுட்டவும்.

82|•  2

இலக்கியத்துறையில் இவ்வளவு நீண்ட காலம் பயணித்துச் சாதனை படைப்பதென்பது மிகுந்த கடினமான பணியாகும். அதனைத் திறம்படச் செய்தவொரு படைப்பாளியாக, திருவாளர் பாலமுனை பாறூக் அவர்கள் திகழ்ந்து வருகிறார் என்ற செய்திக்குப் பின்னால் உள்ள அவருடைய இடையறா உழைப்பும் திறனும் அளப்பரியது என்றும் அறிய முடிகிறது. திருவாளர்பாறூக் கவிதையாப்பது மட்டுமல்லாது கதைபுனைவதிலும் நாவல் குறுங் காவியங்கள் படைப்பதிலும் வல்லவராக இருந்து வருகிறார். மரபுக் கவிதைகள் மட்டுமல்லாது குறும்பாக்கள், புதுக்கவிதைகள் நகைச்சுவைத் துணுக்குகளையும் எழுத வல்லாராகத் திகழ்ந்து வருகிறார்.

வங்கிப்பணியில் உள்ளவர்கள்

இலக்கிய உலகில் பயணிப்பதென்பது வியப்பைத்தருவதாகக் கூறயியலாது என்றாலும் அவர்களின் இலக்கியப்பணி மற்றவர்களைவிடச் சிறப்பாக உள்ளது. தமிழ்நா ட்டி ல் எனக்கு த் தெரி ந்த அளவில் கோவையில் உள்ள நண்பர் திரு. இரா.மீனாட்சிசுந்தரம் அவர்கள் ஒரு வங்கிப்பணியாளர்; ஓய்வுக்குப்பின் வழக்குரைஞராகவும் கவிஞராகவும் தனது பணிகளைச் செய்துவருகிறார். மற்றொருவர் செ ன் னை யி ல் த ற்போ து வ சி க் கு ம் பாவலர் திரு செல்வ. மீனாட்சிசுந்தரம். வங்கிப்பணி நிறைவு பெற்று, தற்போது மரபுகவிதைகளைத் திறம்பட யாக்கும் ஒரு கவிஞராக உருவெடுத்துள்ளார். ஹைக்கூ எழுதுவதில் சிறந்து விளங்கும் திரு கா.ந.கல்யாணசுந்தரம் அவர்களும் ஒரு ஓய்வு பெற்ற வங்கிப்பணியாளரே. எங்கள் ஆசான் கவிதைக்கலைமாமணி ஆசுகவி என்று அனைவராலும் போற்றப்படும் காலம் சென்ற ஐயா வீரபாண்டியத்தென்னவன் அவர்களும் ஒரு வங்கிப் பணியாளரே. அந்த வரிசையில் வங்கியில் பணியாற்றிய பாவேந்தல் பாலமுனை பாறூக் அவர்களும் இணைந்துள்ளார் என்பது மட்டற்ற மகிழ்ச்சி தருவதே.

கவிஞர்கள் பெரும்பாலும் செயற்கைத் தளமாக எழுதாமல் உணர்வை ஊட்டும்

விதமாகவும் சாதாரண மக்களின் உணர்வைப் பிரதிபலிப்பதுமாகவும் எழுதவேண்டும். அப்போ து தான் அவர்க ள் மக்க ள் மத்தியில் பிரபலமாக இயலும். அந்த உணர்வு காதலாகவோ, தொழிலாளர்கள் போராட்ட உணர்வாகவோ, எளியோரின் உணர்வாகவோ அல்லது நகைச்சுவை உணர்வாகவோ இரு க்க வேண்டு ம். இப்படிப்பட்ட உணர்வுகளைத் திறம்பட வெளிப்படுத்தும் கவிஞராக, திருவாளர் பாறூக் அவர்கள் திகழ்கிறார். அவருடைய மரபு வடிவங்களாகட்டும், புதுக்கவிதை வடிவங்களாகட்டும் குறும்பாக்களாகட்டும் குறுங்கா வியங்க ளா கட்டும் இ வை அனைத்துமே மேற்கண்ட உணர்வுகளை வெளிப்படுத்துவதாகவே உள்ளன. அவர் பின்பற்றும் மதம் சார்ந்த பண்பாட்டையும் கொள்கைகளையும் அவரது படைப்புகளில் காணமுடிகிறது.

அவர் பார்த்த ஏழைகளின் துயரம் பிச்சைக்காரர்களின் வறுமை, நாட்டில் ஏற்பட்ட போர் அதன் விளைவுகள் அனைத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அவரது படைப்புகள் மிளிர்கின்றன.

பாவேந்தல் அவர்களுடைய வளர்ச் சியை, தொண்டை, பண்பாட்டைக் காக்கும் விதத்தை, நகைச்சுவை உணர்வை, மத உணர்வை, பொது வுடைமைத்தத்துவத்தை, கவிதை எழுதும் திறனை, குறுங்காவியம் எழுதும் திறனைவெளிப்படுத்தும் கட்டுரை களும் அவரு டை ய படைப் பு க ளு ம் இ ந்த நூ லை அலங்கரி க்கி ன்ற ன. ஆசியுரை வழங்கிய பெரியோர்களின் எண்ணிக்கையே பாறூக் ஐயா அவர்களின் பழகும் தன்மையை வெளிப்படுத்துகிறது. அவருடைய படைப்புகளை ஆய்வு செய்து வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகள் படைப்பாளியின் நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளன.

அன்னாரது படைப்புகளில் பதத்தை
யும் தோட்டுப்பாய் மூத்தம்மாவையும் குறிப்பிடாதவர் இல்லை. அந்த அளவுக்கு இரண்டு படைப்புகளும் பெரும் தாக்கத்தை

2  •|83

ஏற்படுத்தி யுள்ளன.

கவிதைகளில் எவ்வளவு எளிமை எவ்வளவு இரக்கக் குணம். அடடா மிக அருமையாக வெளிப்பட்டுள்ளது.

“ஏழைக்குருடன் கரங்களிலே
இருக்கும் கையின் தடியாக
என்னை ஆக்கிவிடு போதும்”

எனத் தொடங்கும் கவிதையில் இறை வனிடம் அவர் வேண்டும் பாங்கு ஏழை எளியோரிடம் அவர் கொண்ட பற்றையும் பாசத்தையும் காட்டுகிறது.

“வழிப்போக்கர்கள் அமருகின்ற நிழல்தரு மரமாய் என்னை
ஆக்கிவிடு அதுபோதும்”

எனும்போது அவருடைய எளிமையும் உதவியற்றோர்களுக்கு உதவும் குணமும் வெளிப்படுகிறது. (* பதம் 1987)

இலங் கை யி ல் போர் உச்ச ம் அடைந்த காலத்தில் இந்திய அமைதிப் படை அங் கு வீற்றி ரு ந்த கா லத்தில் உருவான கவிதைகளில் போர்க்காலச் சிரமங்கள், கொடுமைகள், தமிழர்கள் பட்ட இன்னல்கள் அவருடைய கவிதைகளில் வெளிப்படாமல் இல்லை.

“கிழக்கில் பிறந்தான்
இது பிழையாவதா?”

என்று கேட்பதிலும்

“உதைத்துக் கொண்டும்
உறுமிக்கொண்டும்
விரைந்தன வாகனங்கள்”

என்ற வரிகளிலும் போர்க் கொடுமை தெரிகிறது. (*எஞ்சியிருந்த பிரார்த்தனை யோடு 2012)

தமிழ்நெஞ்சம் இதழுக்கான ”அவர்களின் நேர்காணல். குறும்பாக்கள், மணிக்கவிதை

க ள் எ ன நூ ல்நெ டு க, க வி தை க ள் அலங்கரிப்பதோடு நம்மை ஆச்சரியப் படுத்தவும் செய்கின்றன.

ராஜா, வேசம், சொற்பொழிவு போன்ற கவிதைகள் இயக்குநர் T.ராஜேந்தர் வசனம் போல இருந்தாலும் வசீகரம்.

“உயர்படிப்பில்
பகடியின் புதிய சொல்லாடல்
பாலியல் சேட்டை”. நிதர்சனம்

நூல் வெளியீட்டுக்கு ஆள்பிடிக்கும் நிலையை வெளிப்படுத்தும் மணிக்கவிதை மிக அருமை. தற்போதைய நிலையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது. “நான்” குறித்த கவிதையும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பும் அருமை.

நூலில் இடம்பெற்றுள்ள படங்கள் கவிஞரின் வரலாற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

ஐம்பது வருட இலக்கியப் பயணம் என்ப து ஒரு நீண்ட கா ல ப் பய ண ம். தமிழகத்தில் காலம்சென்ற வேழவேந்தன் அவர்கள் இத்தகைய வரலாறு உடையவர். பாவலர் கருமலைத் தமிழாழன் அவர்கள் ஐம்பது வருட இலக்கியப் பயண அனுபவம் உடையவர். பிரான்சில் தற்போது வசித்து வரும் நண்பர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள் இலக்கியம் மட்டுமல்லாது இதழியல் பணியிலும் ஐம்பது ஆண்டுகால அனுபவம் உடையவர். இத்தகைய பெரியோர்களுடன் இலங்கைவாழ் பெருங்கவிஞர் பண்பாளர் பாவேந்தர் பாலமுனை பாறூக் அவர்களும் தனது இலக்கியப் பயணத்தில் பொன்விழா காண்கிறார் என்பது மிகுந்த பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியது. அன்னார் மென்மேலும் சிறந்தோங்கி, தமிழ் இலக்கிய உலகில் மேலும் பல படைப்புகளைத் தந்து உயர்வடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இராம வேல்முருகன்
வலங்கைமான்

நூல்வெளியீட்டுவிழா

நமது தமிழ்நெஞ்சம் பதிப்பகத்தின் இரண்டு கவிதைநூல்கள்வெளியீட்டுவிழா நடைவண்டி சிறுவர் கலைஇலக்கியக் கழகத்தின்சார்பாக புதுச்சேரியில் புதுவைத் தமிழ்ச்சங்கத்தில் கடந்த 12/2/2022 சனிக்கிழமை மாலை நடந்தது அந்த நிகழ்வில்...

சென்னையைச்சேர்ந்த சிங்காரசுகுமாறனின் “இரண்டாம்கருப்பை”, “முத்தக்காட்டேரி“ என்கிற இரண்டு கவிதை நூல்கள் புதுவை மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு இலட்சுமி நாராயணன் அவர் களால் வெளியிடப்பட்டன கல்வியியல் நிபுணர் நீட்எதிர்ப்புப் புரட்சியாளர் மேநாள் பல்கலைக்கழக துணைவேந்தர் ஜவகர்நேசன் பெற்றுகொண்டார்.

நிகழ்வை புதுவைத்தமிழ்ச்சங்கத்தின் தகுதி மிகுத்தலைவர் கல்வியாளர் கலைமாமணி முத்து அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்

முனைவர் பெண்ணியம் செல்வகுமாரி அவர்கள் வரவேற்புரையில்நூலாசிரியர்சிங்காரசுகுமாறன் பற்றியும் கவிதைகளைக் குறித்தும் பாராட்டி பேசிவரவேற்றார்

நடைவண்டி சிறுவர் கலை இலக்கியக் கழகத்தின் நிறுவனத் தலைவர் பாட்டுப்பரிதி. மு.பா. அவர்கள் நிகழ்வை நெறியாளுகைசெய்தார்.

வாழ்த்துரை வழங்கிய இயக்குநர் ஏவள்ரவி அவர்கள் சிங்காரசுகுமாறனின் தகப்பனார் நினைவில்வாழ்கிற எழுச்சிக்கவிஞர் திராவிடமுன்னேற்றக் கழகத்தின் சொற் பொழிவாளர் சிங்காரசடையப்பன் பற்றியும் சிங்காரசுகுமாறன் குறித்தும் தனது கருத்துகளை பகிர்ந்தார்

கல்வெட்டுபேசுகிறது இதழாசிரியர் பாவலர் சொர்ணபாரதி இருநூல்களின் கவிதைகள் பற்றி சிலாகித்தார்

பாவலர். வி.உ.இளவேனில் சிங்கார சுகுமாறனின் இயல்பான கவிதைகள் இல்லை இந்தநூல்களில் வேறுதளத்தில் இயங்குகிறவன் எனது பால்யகாலத்துப் பள்ளித்தோழன் நீ இனியாவது இயல்பான கருத்தியலோடு கவிதைநூல் போடு என்று உரிமையோடு பேசினார்.

வடசென்னைத்தமிழ்ச் சங்கத்தின் நிறுவனத் தலைவர் எ.த.இளங்கோ முன்னிலை யுரையில் சிங்காரசுகுமாறனை வாழ்த்திப்பேசி சிறப்பு செய்தார்

நிகழ்வைஉருவாக்கியும்நெறியாளுகையும் செய்த பாட்டுப்பரிதி மு.பா. அவர்கள் ஆகச்சிறந்த வாழ்த்துரை வழங்கினார் அவ்வப்போது இடையிடையே

மிட்டாய்ப்பாக வடசென்னையின் இலக்கிய வேடந்தாங்கல் எழுத்தாளர். வே.எழிலரசு அவர்களும் எழுத்தாளர். நிமோஷினி விஜயக்குமாரன் அவர்களும் பேசிய இலக்கியத்தரமாகவும் நிகழ்விற்கு நிறைவுத்தருவதாகவும் அமைந்தது





பெங்களூரில் இருந்து வந்திருந்த கவிப்பொறி.பாபுசசிதரன் மிகச்சிறுப் பொழுதில் சிங்கார சுகுமாறனை வாழ்த்தினார்

ஏற்புரை நல்கிய சிங்காரசுகுமாறன் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களையும் பாட்டுப்பாரிதி.மு.பா. அவர்களையும் இந்தநிகழ்வின் ஆணிவேராக இருக்கிற முனைவர்.பெண்ணியம்.செல்வகுமாரி அவர்களையும் குறிப்பிட்டு நன்றி கூறினார்.அத்தோடுதனது நூல்வருவதற்கு ஏன் இத்தனைத் தாமதமானது என்கிறக் காரணத்தையும் சொன்னார் பத்தரை மணிவரை நிகழ்ச்சி நீண்டதால் அவரின் ஏற்புரை சுருக்கமாக இருந்தது

நிகழ்வில் கவிஞரின் துணைவியார் அமலா மற்றும் அவரின் மகன்கள் சுகதேவ், சிபிசடையப்பன் உள்ளிட்ட பாவலர் சிங்காரசுகுமாறனின் நண்பர்கள் பலரும் பெருவாரியாக பல இடங்களில் இருந்துவந்துகலந்துகொண்டு வாழ்த்தினார்கள்.

சென்னை 45 வது புத்தகக் கண்காட்சியில்... தமிழ்நெஞ்சம் இதழா சிரியர் அன்புநிறை தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் ‘‘தோழர்சிங்காரவேலர்’’, முனைவர். பெண்ணியம் செல்வகுமாரி அவர்களின் ‘‘நொடிலு’’, ‘‘நெகிழி நெய்யும் உலகு’’, மற்றும் மலர்விழி மணியனின் ‘‘விழியம் பேசும் காலம்’’ நாவலும் வெளியிடப்பட்டது.

தங்கமீன் பதிப்பக அதிபர். பாலுமணிமாறன் அவர்களின் ‘‘அன்பின்

86|• 2

பேராசிரியர். அரங்கமல்லிகா, பாடகர். வன்னியப்பன், பாவலர். வி.உ. இளவேனில், எ.த. இளங்கோ (வட சென்னைத்தமிழ்ச் சங்கம்), பாவலர். இல்லோடுசிவா, பாவலர் உமாசுப்பிரமணியம், சிங்கார. சித்தார்த்தன், கவிதாயினி. இவள்பாரதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நுண்மிப்பரவல்நிலை மீறி நூல் காதல் கொண்டவர்களால் நிரம்பிக் கிடந்தது 45வது புத்தகக்காட்சி. என்றாலும் நான்கு நூல்கள் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

சிறுபொழுதுகள்’’ மற்றும் ‘‘14ஆம் மாடிக் குடியிறுப்பென்பது’’ போன்ற புத்தகங்களை அறிமுகம் செய்கிறநிகழ்வு மிகச் சிறந்ததாக அமைந்த்தற்குக் காரணம் வடச்சென்னைத் தமிழ்ச்சங்கத்தலைவர் எ.த இளங்கோ அவர்கள். அவர்வெளியிட கவிஞர் வன்னியப்பன்,தோழியர் உமா சுப்ரமணியன், சித்தார்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டார்.

‘‘தோழர் சிங்காரவேலர்’’ நூலை
எ.த இளங்கோ வெளியிட எதிர்பாராமல் வந்து மகிழ்ச்சி தந்த பேராசிரியர் அரங்க மல்லிகாபெற்றுக் கொண்டார்.

மேலும் கவிஞர் சிங்காரசுகுமாறன் ‘‘நெகிழி நெய்யும் உலகு’’ வெளியிட கவிஞர் விநாயகம் பெற்றுக் கொண்டார்.

தங்கமீன் பதிப்பக அரங்கு எண் 130ல் நிகழ்ந்த நிகழ்வில் புதுச்சேரியில் இருந்து வருகைதந்த பெண்ணியம் ெல்வக்குமாரி,

 22  • |87

விண்ணை முட்டும் சிகரமாய் உயர்ந்து நின்றாலும்
சம்பிராதயம் சடங்குகளன கனவுகளை கானல்நீரிடம் கையளித்து கண்ணீரை பரிசாக
வாங்கிக்கொண்டு சுதந்திரமெனும் போர்வைக்குள் கைதியாய்
நிற்கும் பெண்ணவள்....

சிகரங்கள் தொட
சிதைதேய உழைத்தும்...
தன் மகவை செதுக்க
தேயும் உளியாய் உருமாறியும்.. ஓய்வின்றி உழைத்து
விழுதுகளை தாங்கும்
வேரான பெண்ணவள்....

இருண்ட குகையினுள்ளே மௌனங்களோடு உரையாடியபடி... நெருடல்களுக்கும்
வலிகளுக்கும் கதறியபடி..

எத்தனைகசந்தும்
காலப்பெருவெளியில்
சலிப்பின்றிவாழ்வு செய்யும் சுமைதாங்கும் பெண்ணவள்...

மனதைக் கிழித்தும்
மௌனத்துள் தள்ளியும்
ஆசை விருப்பம்
அத்தனையும் களைந்த
நிர்வாண வலிகளின்
ரேகைகளை புன்னகை
முகத்தினுள் மறைத்து
ரகசியம் காக்கும் பெண்ணவள்...

தன் சிறகுகளில்வழிந்தோடும் குருதியில் தான்
அவள் எண்ணப்பறவை சேர்த்து வைத்த
வண்ணக் கனவுகளுக்குள் வானமொன்றைவரைந்து அதன் மௌங்களுக்கு
நிறம் தீட்டிக் கொண்டிருக்கும் பெண்ணவள்...

தன் மொத்தக் கனவையும்
தன் ஊனச்சிறகில்
சுமந்து கொண்டு
பறக்கநினைக்கையில்
காணாமல்போயிருந்தது
அவளுக்கான வானம்....

 

அனிதா சந்திரசேகர்
பரமக்குடி

பல்சுவை

தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

மார்ச் 2022

"அழகை
ஆராதிப்பதும் ரசிப்பதும்
இதய உணர்வுகளுக்கு
வெண்சாமரம் வீசும்
மயிலிறகுகள் "என்கின்றேன்.
"ஆமாம்... ஆமாம் " என்று
ஆமோதிக்கிறாய்...
கடந்து போன
ஒரு கன்னி மயிலை
நான் கடைக்கண்ணால் பார்த்தால் கூட
சுடும் எண்ணெயில் விழுந்த
கடுகாய் சீறி வெடிக்கிறாய்....
●

பொய்
சொல்லக் கூடாதென்று சொல்லி
என்னை அரிச்சந்திரனாய்
மாற்றப் பார்க்கிறாய்.
அந்தி வானும் அழகு பூமியும்
முத்தமிடத் துடிக்கும்
சுந்தர மாலைகளில்
"என்னைப் பற்றி கவிதை சொல்"
என்று இழைகிறாய்...

எதை
நான் செய்வது..?
என்னவளே...சிவகாமி.!!
●

இரண்டில் ஒன்று

"காத்துக் கிடப்பது
காதல் நவீனத்தில்
சுவாரஸ்யமான பக்கங்கள்" என்று
என்னை சமாதானப் படுத்துகிறாய்.
நான்
தாமதமாய் வருகையில்
தென்றலாய் இருக்கும் நீ
பெருஞ் சினம் கொண்டு
புயலாய் மாறி விடுகிறாய்.
●

- ஜென்ஸி